ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ. 3—0
6-மாத சந்தா ,,	— ,, 1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,, 5—0

ஞாயிறு தோறும் வெளிவருவது.

வியாபாரசுள விளம்பரம் அங் 1 க்கு ரூ
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி ரேட்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ மாசி 23௳ உ 6-3-1932 | மலர் 45

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி,

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், ன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆராத குழிப்பண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவா யிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய். பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், பண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, பிரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊறல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், ஙாவரோகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழைய சரக்குகளும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்
விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

கவலை வேண்டாம்!

தற்காலத்தில் ஒவ்வொருவரும் தாராளமாக சம்பாதிக்கக்கூடிய வழியை தெரிந்து கொள்ளவேண்டாமா? அப்படியானால் ஒரு ரிப்ளேகார்டு எழுதுங்கள். பதில் தெரிந்து கொள்ளலாம்.

S. நாராயணசாமி
வடக்குவீதி திருவாரூர் S. I.

Read
The 'Citizen'

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

கந்தகமே-இந்தயுகம்

டாக்டர் T. K. வெங்கடாசலம் அவர்களால் தயாரித்து, அனுபவித்து கைகண்ட கந்தகரசாயனம்.

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் துர்குணங்களையும் நீக்கி, கோஷாயி முறையில் தயாரித்தது. ஆண், பெண், வாலிபர், விருத்தர்வரை, வெட்டகாங்கை, வெட்டவாய்வாலேர்ப்படக்கூடிய வியாதிகளுக்கு மூன்று வாரம் கோஷாயி கந்தகரசாயனம் சாப்பிட்டால் வியாதிகள் பூரணவும் குணமாகி இரத்தவிருத்தி தரக்கூடியது சிரமமுள்ளபத்தியமில்லை. 3-வாரம் (21-நாள்) உபயோகிக்கக்கூடிய கோஷாயி கந்தகரசாயனம் கொண்ட டப்பி 1-க்கு ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன். பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய்வாசிகள் ஆர்டருடன் ரூ. 7—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,
(கால்ராபைரி)

கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.

$2\frac{1}{2}$ X 5 நீ. கம்பிக்கரைபட்டு	ரூ. 1-8
டைகுண்டஞ்சகரைடஜன் 1க்கு	15-0
No. 2 டஜன் 1க்கு	12-0
3 X 8 நீ. பட்டு வேஷ்டி 1க்கு	3-8

S. K. R வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர்,

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

:0:

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா	3—0—0
வெளிநாடு "	4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—

மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $.	5—0—0
இந்தியாவுக்கு ரூ.	8—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—

மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:-
சுவாமி சிவஞானம்,
"சன்மார்க்கன்" பழனி.

"போர் முரசு"

வாரப் பதிப்பு.

ஆசிரியர், ச. ம சி. பரமசிவம்.

தனிப்பிரதி காலணா.

வருட சந்தா. ரூ. 1—8—0

"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர் - திருச்சி.

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா	5—0—0
வெளிநாடு வருடசந்தா	6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா	0—12—0
வெளிநாடுவருடசந்தா	1—0—0

ஆசிரியர்: சொ. முருகப்பா.

விலாசம்:—

மானேஜர், "குமரன்" காரைக்குடி.
ராமநாதபுரம் ஜில்லா

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

புதுவைமுரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்பலனார்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச்செந்தமிழ்வாரப் பத்திரிகை. வருடசந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5. மாதிரிப்பிரதி இனம்!

மானேஜர்,
"புதுவைமுரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

தக்ளியில் நூல் நூற்று சுயராஜ்யம் பெற்ற தேசங்கள் எத்தனை?

(The Work before us)

நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

ஜாதியை ஒழிக்கவேண்டும்.

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

(VIII)

முன் இரண்டு அத்தியாயங்களில், டெமாகரசி என்று கூறும் ஜனநாயக ஆட்சி, வெறுஞ் சொல்லேயொழிய நடைமுறையில் நிகழ்வதில்லை என்றும், அது ஒரு சார்பார்களாகிய முதலாளிகளால் நடத்தப்பட்டு வருகிறதென்றும், பொதுமக்கள் இந்த காட்சியை அறியாது தங்கள் அறியாமையால் இந்த ஆபாச ஆட்சி முறையை ஆதரித்து வருகின்றார்களென்றும், உண்மையாகவே அமெரிக்கத் தலைவர் லிங்கன் அவர்களால் விளக்கிய ஜனநாயக அரசியலைச் செலுத்தவேண்டுமானால் தேசத் தொழில் முறைப்படி ஏற்பட்ட பொது மக்களுடைய பிரதிநிதிகளால் எந்த அரசியலும் நடத்தப்படவேண்டுமெனவும் குறிப்பாக எடுத்துக் காட்டினோம். இனி நாம் இத்துறையில் செய்யவேண்டிய வேலை என்னவெனில் மக்களை ஆட்சி புரிவதை விளக்கி விளைபொருள், செய்பொருள்களை நாட்டுமக்கள் அனைவரும் சமமாக அனுபவித்துச் சுகமடையும் முறையையே ஆட்சிபுரியவேண்டுமென அறிக. அடுத்த அத்தியாயத்தில் மக்கள் மேலுள்ள மதங்களின் ஆதிக்கம் ஒழியவேண்டுமாயின் அரசியலும் மதங்களை நிராகரிக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினோம். இனிச் செய்யவேண்டிய இரண்டொரு முக்கியாம்சங்களையும் இங்கு சுருங்க உரைப்பாம்.

எந்த தேசங்களிலும் தோன்றிராத ஒரு தோற்றம் நமதுநாட்டில் மாத்திரம் தோன்றியுள்ளது, உலகில் ஒரு காலத்தில் மத குருக்களின் ஆட்சி பரவி வந்தது அதனை மற்ற தேசங்களிலெல்லாம் நவீனஞானம் பாமர ஜனங்களிடம் பரவியதும், இவ்வுலக விஷயங்களில் அந்த ஆதிக்கம் பரவவொட்டமல் தடுக்கப்பட்டதோடு குருமார்களின் சட்டதிட்டங்களும் நசுக்கப் பட்டன. இந்தச்சீர்திருத்தத்தால் (Reformation) மற்ற உலகில் மதக் கட்டுப்பாடுகள் ஜாதியாக மாறாமல் போய்விட்டன. ஆனால் நமது இந்தியநாட்டிலேயெனில் பாமர ஜனங்களின் அறியாமை நிகழ்வுற்று வந்துகொண்டிருந்தபடியால், நமது இகபரவாழ்வுக்கு வேண்டுமென்ற கற்பனைகள் யாவும் வேரூன்றி நிலைத்துவருகின்றன, மற்ற உலக இடங்களில் இவ் வாழ்வுக்கு மத கற்பனை வேண்டாமெனவாயிற்று. ஆனால் நமது தேசத்திலோ இவ் வாழ்வுக்குக்கூட, மத கற்பனை வேண்டுமென்று சாதிக்கப்பட்டுவருகின்றது. இந்த மதக் கற்பனைதான் ஜாதி என்று நமது நாட்டில் வழங்கிவருகின்றது. ஜாதி (Caste) மதக் கட்டுப்பாடுகளில் ஒன்றென அறிதல்வேண்டும். மற்ற தேசங்களில் இந்தக் கட்டுப்பாடு வேறற்றுப்போயிற்று. நமது நாட்டில் இன்னும் தழைத்து வருகின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதல் காரணம் நமது நாட்டு மக்களின் அறியாமையேயாகும். இரண்டாவது காரணம், இல்வாழ்க்கையில் கூட (Secular Life) மதக் கட்டுப்பாடுகள் அவசியமென்று கருதிவருதல் இவ்விரண்டுதோஷங்களால் ஜாதி என்னும் மதக் கட்டுப்பாடு நிலைத்து வருகின்றது.

இதனைச் சற்று விபரமாக விளக்குவாம். மேல்நாடுகளில், இவ்வுலக வாழ்வுக்கு வேண்டிய சட்டதிட்டங்கள், பழக்க வழக்கங்கள் மதங்களின் வலைகளினின்று மீண்டன. மேல்நாடுகளில் கல்யாணம் சாவு, வாழ்வு, கிரகப்பிரவேசம், வயதை அடைதல், கல்வி ஆரம்பம், கர்ப்பம் தரித்தல், பெயரிடுதல், வேலை ஆரம்பம், ஓய்வு நாட்கள், விரை விதைப்பது, சொத்து வாங்குவதும், விற்பதும், கோடி உடுத்தல், யாத்திரை செய்தல், மருந்துண்ணல், அரசு புரிதல், உத்யோகம், வர்த்தகம் செய்தல் முதலிய இல்வாழ்க்கைக்கு வேண்டியனயாவும், மதக் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கப்பட்டன. ஆனால், நமது நாட்டில், இத்யாதி இகவாழ்வுக்குரியனயாவும், மதக் கட்டுகளிலேயே இருந்துவருகின்றன. ஒவ்வொரு நடத்தையும் குருமார்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு வருகின்றன. மேல் நாடுகளில் வானசாஸ்திர ஞானம் (Astronomy) பரவி வந்த விஷயம் ஒன்றினாலேயே, நல்ல நாளும், கெட்டநாளும், அமாவாசையும், பௌர்ணமியும் ராகுகாலம், பகல்காலங்களும், திதி, நட்சத்திரங்களும், சோமவாரங்களும், மங்களவாரங்களும், எட்டாம்இடங்களும, ஒன்பதாம் இடங்களும், ராகுகேதுக்களும், கிரகணங்களும், சாதாரணமாகவே 365நாட்களில்ஒன்றெனக் கருதப்பட நேர்ந்தன. நாகரீகம் பெற்றுள்ள தேசமெங்கும் வான ஞானத்தால் சோதிடமென்ற பிதற்றல் அடியோடே நீக்கப்பட்டது. பிராணிகளின் நூல் மூலமாக (Zoology) பல்லிவிழும் பலன், கருடன் வலம் வருதல், பூனை குறுக்கிடுதல், கக்கை எதிர்கட்டல் முதலிய இயற்கை செயல்கள் யாவும் மனிதவாழ்வுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லையென கருதப்பட்டுவிட்டன.

உடல் ஞானத்தால் (Physiology) தேகத்தில் எழும் வியாதிகள் பலவித கிருமிகளால் உண்டாகின்றனவென்று தெரிந்துகொண்டவுடன் அம்மை, பேதி, ஜுரம், ஜன்னிமுதலிய கொடூர வியாதிகளை வைத்திய முறையால் சிகிச்சை செய்துகொள்ள மேல் நாட்டாருக்கு அறிவுவிளங்கிய வைத்திய ஞானப்பெருக்கினால் ஆலஞ்சுற்றுவதும், கழிப்பு எடுப்பதும், முனீஸ்வரனுக்கு பூசைபோடுவதும் மஞ்சள் கந்தை சுற்றிக்கொள்வதும், பொங்கலிடுவதும், பூசைபோடுவதும், காவு கொடுப்பதும், பிரார்த்தனை செய்வதுமான மூடப் பழக்கங்களை அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே மேல் நாட்டார் விட்டுவிட்டார்கள். ஆனால், நமது நாட்டில் கோடிக்கணக்கான பாமர மக்கள் மேற்போந்த மூட பழக்க வழக்கங்களை இன்றைக்கும் அனுசரித்து வருகின்றனர்- இதனை எந்த மதஸ்தர்களும் தடுப்பதைக் காணோம். அரசாங்கத்தாரும், தங்களுக்கென்னவென்றும், நடுநிலைமையை (Religious Neutrality) முன்னிட்டு, இந்தக் கொடூர பழக்கங்களைத் தடுக்காமலே இருந்து வருகின்றார்கள். வருஷா வருஷம், இத்தியாதி சாதி மத பழக்கங்களால், பல லட்சம்பேர் வைத்திய சிகிச்சை இன்றியே மடிகின்றார்கள்.

மெஞ்ஞான உணர்ச்சி, பாமர மக்களுக்குப் பரவி வந்தபடியால் மேல்நாட்டார் மத குருமார்களின் கட்டுதிட்டத்திற்கு மீறி, தங்கள் வாழ்க்கையை நடத்திவருகின்றார்கள். நமது தேசத்தில், மதக் கட்டுப்பாடுகளால் நுழையாத வாழ்வு, ஒன்றாவது கிடையா. பிறப்புமுதல், சாகும்வரை நமது தினசரி வாழ்வு முழுமையும் ஜாதி மதக் கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுவருகிறது. "பறையனை"த் தொட்டுக்கொண்டால், கீழ்ஜாதியான் வீட்டில் நீர் அருந்தினால், விதவையை மணந்தால் கடலைக் கடந்தால், இத்தியாதிக்குள்ள மற்ற சமூக சுதந்தரங்களெல்லாம், ஜாதிக் கட்டுப்பாட்டால் கட்டுண்டு, இந்தியருடைய வாழ்வுமுழுமையும் பல தொல்லைக்குட்பட்டுள்ளது. மதக் கட்டுப்பாட்டிலிருந்து, இந்து சமூகம் விடுபடாமையால்தான், இந்தியாவில் ஜாதி ஒழியாமல் நிலைத்துவருகிறது. சிற்சில கொடூர பழக்கங்கள், பரந்த மனங்கொண்ட ஆங்கில நிர்வாகிகளால், தடுக்கப்பட்டன. சதி (Sutte) என்ற உடன்கட்டை ஏறும்பழக்கம், தள்ளாதாரை கங்கையில் சாகவைக்கும் பழக்கம், விதவைகளை பலவந்தமாக மொட்டை அடிக்கும் பழக்கம், ஜாதிக் கட்டுப்பாடுகளால், நீர் நெருப்பு கொடுக்காத பழக்கம் விப்சாரிகளை கழுதை மேலேற்றி அவமதிக்கும் பழக்கம் முதலிய கொடிய செய்கைகள், ஆங்கில துரைத்தனத்தில் தடுக்கப்பட்டன. ஏனெனில், ஐரோப்பியர்கள் இந்தியரைக் காட்டிலும் மதக் கட்டுப்பாட்டுகளிலிருந்து விலகி இருக்கின்றமையால், மானுஷிக சட்டதிட்டங்களை, இந்திய மதாபிமானிகளின் ஆட்சேபனைக்களைக் கவனியாமலே, சிற்சில வாகிலும் செய்யத் துணிகின்றார்கள்.

இந்தியாவில் வழங்கும் ஜாதி மதக் கட்டுதிட்டங்களைப் போல், ஏனைய இதர நாடுகளிலும் காண்பதரிது. அந் நாடுகளில், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற சமூக வித்தியாசங்கள் இல்லாமலிருக்கக் காரணமென்னவெனில், மதப்பற்றும், மத வைராக்கியமும், மத கற்பனையும், நமது நாட்டை விட்டு அந் நாடுகளில் குறைந்து இருந்ததலே, முக்கிய காரணமென அறிக. மேல்நாடுகளில், மதவைராக்கியத்தால் உண்டாகும் சண்டைகள், இல்லை என்றே சொல்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

மதங்களும், மன்னரும்.

[திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.,]

III.

நாம் முதன் முதலில் 'மதம்' என்பதற்கு அகம், புறம் என்னும் இரண்டு துறைகள் உண்டு எனவும், அவைகள் ஒவ்வொன்றைக் குறித்தும் தனித்தனியே நாம் ஒரு தேசத்து மன்னர்களின் சம்பந்தமாக ஆராய்ந்தால்தான் 'மதங்களும் மன்னரும்' என்னும் பொருளைப்பற்றி முழுதும் உணரவியலும் என்றும் கூறினோம். அதன்படிக்கு நாம் இதுவரை மதத்தின் புறத்துறையாம், வெளிச்சான்றும், ஆகுல நீற்றின் பழக்க வழக்கங்களைப் பற்றியும், அவை ஒரு தேசத்தின் சமூக முன்னேற்றத்தைத் தடை செய்யும் தன்மையனவாயிருப்பின் அவைகளை அத்தேசத்தின் அரசாங்கமோ, மன்னனோ, அறவே அகற்றுதல் மிகவும் அவசியம் என்பது பற்றியும், காரணவாயிலாகவும் சரித்திர வாயிலாகவும் பேசிவந்தோம். இத்தகைய வழியிற் சென்று சமூக சீர்திருத்தம் செய்தல் தவறு என்னும் பொருள்படும் 'சமய நடுநிலைமை' ஜீவாதார வுரிமையையுண்டாக்கிய சுயராஜ்ய வாதிகளின் கொள்கை நம் நாட்டிற்குத் தீமை விளைக்கும் பாற்றது என்றும் கண்டோம். ஆனால் நாம் இப்பொழுது கவனிக்கவும், கருதவும் இருப்பது என்னவென்றால் 'மதம்' என்பதின் அகத்துறையும், அதன்பால் ஒரு தேசத்து மன்னன் வைத்துக்கொண்டிருக்கும் சம்பந்தமும், இனியவன் வைத்துக்கொண்டு வரவேண்டிய சம்பந்தமுமேயாகும். ஆக இப்பொழுது கிறிஸ்துவ மதம் அல்லது ஹிந்து மதம் என்றால் அவ்வ மதங்களது சித்தாந்தங்களும் உண்மைத் தத்துவங்களுமேயாகும்.

ஒருதேசத்து அரசாங்கத்திற்கும் அத்தேசத்திலிருக்கும் ஒன்றோ பலவோ ஆகிய மதங்களுக்கும் என்ன தொடர்பு இருத்தல்வேண்டும் என்பதுபற்றி நம் தமிழ் மொழியில் யாதொரு தெளிவான கொள்கையும், அத்தகைய கொள்கையைக் கூறும் நூலும் இருப்பதாகத் தெரியவில்லை, நம் நாட்டிலும் பண்டைக்காலம் தொட்டு ஏனைய நாடுகளிற்போன்றே ஒவ்வொரு மன்னனும் தான் கையாண்டுவரும் மதத்தையே ஏனைய மதங்களுக்கு எதிரிடையாகத் தன் குடிகளிடம் வழக்கம்போல் பரப்பிவந்து கொண்டிருக்கின்றான். தமிழ் மறையும், தமிழ் நாட்டின் அரசியல் முறைக்கு ஆதிமூலமும் என விளங்கும் திருக்குறளும் இதைப்பற்றி யொன்றும் கூறியுள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் அதில் பொருள் அதிகாரத்தில் அரசியலில் மன்னனின் செங்கோன்மையைப்பறறிக் கூறும்போது "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்" என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இதில் அந்தணர் என்னும் சொல்லுக்குப் பொருள் 'பிராமணரா' அல்லது குறளின்படியே 'அந்தணர் என்பர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்' என்னும் பொருளா என்று நாம் இங்கு வாதிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனின் 'அந்தணர் நூற்கும்' என்பது எந்த மதத்தைக் குறித்தபோதிலும் அந்த மதத்தின் தத்துதம் அடங்கிய நூல் என்று பொருட்படுமாகையின், அது பொதுவாக 'மதம்' என்பதைக் காட்டும் பாற்றது. ஆகையால் மன்னனது ஆட்சி மதத்திற்கு ஆதி அல்லது ஆதரவாய் உள்ளது. 'மன்னன் இன்றேல் மதம் இல்லை' எனப் பொருள் படுகின்றது இக்குறள். இந்தக்குறள் இவ்வாறு ஒரு பெரிய உண்மையைக் கூறியதுபோல் தோற்றினும், குறள் என்பது ஒரு நீதி நூல் ஆகையாலும் ஒவ்வொரு குறளும் ஒரு நீதியைப் புகட்டும் தன்மையதாகையானும், இக்குறளும் ஒவ்வொரு மன்னனையும் நோக்கி 'அந்தணர்நூற்குநீ ஆதியாகையின் நீ அதைப்பரப்புவாய்' என்று ஏவும் குணமுடையது என்றே நாம் கொள்ளக்கிடக்கின்றது.

இது ஒருபுறமிருக்க, ஆங்கில ஆசிரியருட் சிலரும் இத்தகைய அபிப்பிராயமே கொண்டுள்ளார்கள் நாம் இப்பொழுது சதே (Southey) என்பவரும் கிளாட்ஸ்டன் (Gladstone) என்பவரும் இக்கேள்வியில் என்ன கருத்து உடையவர்களாய் இருக்கிறார்கள் என ஆராய்ந்து, அவர்கள் கொள்கையை நாம் ஒப்புக்கொள்ள முடியுமா அல்லது முடியாதா என்று நோக்குவோம். திரு. சதே என்னும் ஆசிரியர் திருவள்ளுவர் கூற்றைமாற்றி, 'மதம் அரசாங்கத்தின் அடிப்படையாகும்' என்று கொள்கின்றார். மற்றும் அவர் இதைப்பின்பற்றிக்கூறுவதாவது: 'மதத்திலிருந்தே மன்னனின் அதிகாரம் தனது சக்தியைப்பெறுகின்றது. மதத்தினின்றே சட்டங்கள் தமது நீதித்தன்மையையடைகின்றன. ஆகையால் ஒவ்வொரு அரசாங்கத்தின் அமைதி நிலைமைக்கும் ஒரு மதத்தை வலுவாக நிறுவுதல் இன்றியமையாததாகும். மதமானது அரசாங்கத்தின் அடிப்படையானதாலும், ஒரு தேச மக்கள் அம்மதத்தைக்கையாளுவதால்தான் அத்தேசம் நிலைபெற்று வருகின்றதாலும், அவ்வரசாங்கம் அத்தேசமக்களை யாதானும் ஒரு மதத்திற் புகும்படி செய்தல் அவசியம்; அவ்வாறு செய்யத்தவறின் அவ்வரசு அழிவுறும்.'

திரு' கிளாட்ஸ்டன் என்பவரது கொள்கை ஏறக்குறைய இதையொட்டியதேதான். இருப்பினும் முன்னதாக திரு. சதே என்பவரது மேற்கூறிய சொற்களையாராய்ந்து அவைகளில் எவ்வளவு உண்மை கிடக்கின்றது என்று நோக்கிப்பின்னர் கிளாட்ஸ்டனின் கொள்கையைக் கவனிப்போம். எடுத்தவுடனே இத்தகைய கொள்கை மிகவும் வியப்பையும் நம்போன்றவர்க்குச் சற்று வெறுப்பையும் அளிக்கும் தன்மையதாய் உள்ளது என்று எவரும் காணவியலும்.

முதலாவது 'மதம் அரசாங்கத்தின் அடிப்படை' என்று திரு. சதே கூறுவது நாம் ஒப்புக்கொள்ளக் கூடிய கூற்றாயில்லை. மதம் அரசின் மூலகாரணம் என்றால் அதனால் நாம் பெறக்கிடக்கும் பொருள்தான் என்ன? மனித சமூகத்தில் முதன் முதல் அரசாங்கமானது உண்டாக்கப்பட்டும், நிலைநிறுத்தி நீடிக்கப்பட்டும் வந்ததற்குக்காரணம் மதம் என்பது அதன் பொருளா, அல்லது மனிதன் ஒரு அரசினால் அடையும் பயன்கள் அனைத்தும் லௌகீககுணமுடையனவல்ல: மதத்தைச்சார்ந்தவைகளே என்பது அதன் கருத்தா அல்லது அரசழிந்து சமூகம் சீர்குலைந்த நிலையில் இருப்பின் அதனால் மனிதன் அனுபவிக்கும் கஷ்டங்கள் லௌகீககுறைகள் அல்ல வைதீகக் குறைகளே என்பது அதன் முடிவா? இவற்றுள் எவை? அரசாங்கம் என்பது மனித சமூகத்'ற்கும் அதன், அமைதி, சுகம் முதலியவற்றிற்கும் அவசியம் என்பதையும், இவ்வாறு இவ்வவசியத்தை யுணர்ந்தேதான் ஆதிநாள் தொட்டு மனிதன் ஒரு அரசாங்கத்தை நிறுவி வந்திருக்கின்றான் எனவும் திரு. சதே முதற்கொண்டு யாவரும் ஒப்புக்கொள்ளுவர். அப்படியவர்கள் ஒப்புக்கொண்டால் அரசாங்கம் உண்டாவதற்குக்காரணம் மதமும் மதத்தின்பாற் பெறும் காரணங்கள் அல்லவென்பதும் லௌகீகக்குணமுடைய வேறு பல காரணங்கள் எனவும் நன்கு விளங்கவில்லையா? கிறிஸ்துவ மதமும் ஏனைய பல மதங்களும் அரசாங்கத்தின் அவசியத்தையும் அதற்குக்குடிகள் அடங்கி நடப்பதின் மேன்மையையும் நன்மையையும்போதிக்கின்றது உண்மையே. ஆனால் இந்தக்காரணத்தால் மட்டும் 'மதம் அரசாங்கத்தின் அஸ்திவாரம்' என்று கூறுதல் எவ்வாறு முடியும்? கிறிஸ்துமதமானது உண்ணல், உறங்கல், உடுத்தல் முதலியவற்றைப்பற்றியும் அவைகளின் அவசியம் நன்மை முதலியவற்றைப்பற்றியும் கூறவில்லையா? ஆகையினால் உண்ணலுக்கும் உடுத்தலுக்கும் மதம் அடிப்படையென்பது எவ்வளவு குருட்டுத்தனமானதாய் இருக்கின்றது பாருங்கள். சரித்திரத்தையுற்று நோக்கின், மதங்கள் நிறைந்து நின்று மக்கள் மனத்தையும் வாழ்வையும் மிகவும் கட்டுப்படுத்தி வந்த காலங்களிலும் தேசங்களிலும் எவ்வளவு சிறப்பாகஅரசாங்கம் நடைபெற்றுவந்துள்ளதோ, அவ்வளவுசிறப்பாகவும்மேன்மையுடனும், மதம் என்பதே உலகத்திற்றோன்றாத காலங்களிலும்மதம் அரசின் அவசியத்தையறிவுறுத்தாத காலங்களிலும், மதம் மக்களின் மனம் வாழ்வு முதலியவற்றைக் கட்டுப்படுத்தாத காலங்களிலும், அரசாங்கம் நடந்துதான் வந்திருக்கின்றது. ஆகையால் இதினின்று நாம் நிச்சயமாக மதம் அரசிற்கு அடிப்படை என்று எவ்வாறு கூறவியலும்? ஒரு சைவன் தனது மண்டையைக் கருப்பன் என்னும் காலாடி உடைக்காமல் இருக்கும்பொருட்டும் தனது உடையை கண்ணன் என்னும் கள்வன் வழிபறித்துக்கொண்டு ஓடாதிருக்கும்' பொருட்டுமே ஒரு அரசாங்கம் வேண்டுமென்று அவாவுகின்றானே ஒழிய தனது சித்தாந்தத்தில் கூறியபடி 'அன்பே சிவம், அன்பும் சிவமும் வேறென்பர் அறிவிலார்' என்னும் காரணத்தாலோ, அல்லது சிவபெருமான் மணிவாசகனையாட்கொண்டார் என்ற காரணத்தாலோ, அன்று என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அப்படியாயின் இங்கு அரசாங்கத்திற்கடிப்படை எவ்வாறு சைவம் ஆகும். அல்லது சமயம் ஆகும் ஒருக்காலும் ஆகாது.

இரண்டாவது சதே கூறுகிறார்: 'அதிகாரம் மதத்தினின்றே தன் சக்தியையும் அருகதையையும் பெறுகின்றது; சட்டம் மதத்தினின்றே தன் நியாய குணத்தைக்கொள்கின்றது.' இதுவும் சரியானதல்லவென்றுதான் நாம் அபிப்பிராயப்படுகின்றோம். லார்டு மெக்காலே கேட்டதைப் போல "ஆங்கிலேயர்கள் இந்தியாவையாளும் அதிகாரம் எந்த மதத்திலிருந்து தனது சக்தியையும் அருகதையையும் பெற்றிருக்கின்றது? ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருக்கும் பார்ப்பனரை (குற்றம் செய்யின்) கழுவேற்ற வியற்றியிருக்கும் சட்டம் எந்த மதத்திலிருந்து தன் நியாயத்தையும் நீதியையும் கொண்டுள்ளது?" அவ்வந்தணர்களைக் கழுவேற்றக் கூடாதென்பதற்கேனும் ஹிந்து மதம் ஆதரவளிக்கின்றது; அவர்களைத் தூக்கலாம் என்பதற்கு ஒரு மதமும் ஆதாரம் இல்லை. இது மட்டுமன்றி யுலகத்திலே யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய அளவு அநியாயமான அதிகாரம் (Power) செலுத்தப் பட்டும், நீதியும் இரக்கமும் அற்ற சட்டங்கள் வழங்கப் பட்டும் வருகின்றன, இவையனைத்தும் ஏதேனும் ஒரு மதத்திலிருந்துதமது சக்தியைப் பெறுகின்றன வென்று திரு. சதே கூறுகின்றனரா? அப்படியவர் கூறின் அம்மதம் மிருகங்களும் அனுஷ்டிக்க ஒல்வாதமதமாகத்தான் இருக்க வேண்டும். ஆகவே உண்மை

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க,

"நான்சொல்வதென்ன"

டாக்டர் R. P. பராஞ்சிபே எழுதியது.

(நாகலிங்கம்-மொழிபெயர்ப்பு)

நான் கூறப்புகும் சில முக்கிய விஷயங்கள் இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு எதிரிடையாய் இருக்கின்றன என்பதை வற்புறுத்தவேதான் என்று கூறுவது அனுவசியமாகும். நாம் அறிந்த ஓர் பழமொழியைப் போல் மனிதனே மனிதனுக்கு விரோதியா யிருக்கிறான். ஒவ்வொருவரும் தங்களுடைய குறைபாடுகளைத் தெரிந்துகொண்டால் அத்தகைய பழமொழியைப் பொய்யாக்கிவிடலாம். எனக்குள்ள தேசாபிமானம் மற்றயவர்களுடையதைக்காட்டிலும் இளைத்ததல்ல. ஆனால் அந்த தேசாபிமானம் நமது சமுதாய ஊழல்களைக் கண்டுபிடிப்பதிலும், சொல்லுவதிலும் மட்டும் நின்றுவிடவில்லை. எவ்வகைக் கெடுதியுமில்லை, எல்லாம் சரியாய் திருப்திகரமாய்த் தானிருக்கிறது, என்று உள்ளதை மறைத்துச் சொல்லவேண்டிய அவசியத்தை உடைய ஒருவகைத் தேசியமும் இருக்கிறது. எவ்வளவுதான் நாம் கவனிக்காமல்விட்டுவிட்டபோதிலும் அந்தக் கெடுதி மறைந்துவிடப் போகிறதில்லை: ஆனால் அதற்கு மாறாக அது நாளுக்கு நாள் வளர்ந்து உரம்பெற்றுவிடத்தான் ஏதுவாகிறது. வெறுந் தோற்றங்களைப்பற்றிமட்டும் பிரஸ்தாபிப்பதில் பயனில்லை. ஒவ்வொன்றின் அஸ்திவாரத்தையும் கண்டுபிடிக்க வேண்டும் அதற்கு ஒவ்வொருவருக்கும் தீர யோசிக்கும் ஆற்றலும், தானே முடிவுசெய்யும் தீரமும் வேண்டும். நமது அறிவானது அடிமைப்பட்டும், உதவியற்றும் இருக்குமேயானால் எவ்வித முன்னேற்றமும், அது ராஜீய முன்னேற்றமாயினும், சரி பொருளாதார முன்னேற்றமாயினும்சரி, ஒன்றும் சத்தியமானதல்ல. ஒருநாட்டு மக்கள் எவ்வித சம்பிரதாயத்திலும் கட்டுப்படாமலும், புரோகித துஷணைக்குப் பயப்படாமலும், மதவெறி கொண்ட வைதிகர்களுக்கு அஞ்சாமலும், தங்கள் பகுத்தறிவை தாராளமாய் உபயோகிக்கவும், அவ்வறிவினால் தூண்டப்படும் கட்டளைகளுக்கு இணங்கி நடப்பார்களேயானால் நாம் விரும்புகிற எத்தகைய உயர் பதவியையும், முன்னேற்றத்தையும் எளிதில் அடையலாம். ஒரு தேசத்தின்முற்போக்கும், க்ஷேமமும் ஒரு தனிப்பட்ட மனிதனின் அறிவு வளர்ச்சியையேபொறுத்திருக்கிறது, ஒரு தனிப்பட்ட மனிதனிடமிருந்து எவ்வித நன்மையையாவது பெற முயற்சிப்போமேயானால் அவன் மற்றவர்களுக்குச் சுதந்தரம் எவ்வளவு அவசியமெனக் கருதுகிறானோ அதே போன்று தானும் சுதந்திரப் புருஷன்தான் என்ற உணர்ச்சி உதிக்க வேண்டும். இந்தியாவிலுள்ள நாம் அரசியல் விடுதலையும், பொருளாதார சுதந்திரத்தையும் பற்றிப் பிரமாதமாய்ப் பேசுகிறோம். ஆனால் அதைப்போலவே, ஏன், அதைவிட அத்தியாவசியமாக சமூக சுதந்திரம், அறிவு சுதந்திரம், ஒழுக்க சுதந்திரம், முதலியன இல்லாதிருக்கிறோம். இதற்கு நாமே காரணஸ்தர்களும் பொருப்பாளிகளுமாவோமே யன்றி அந்நியர்மீது குறை கூறுவதில் என்னபயன்? இத்தகைய சுதந்திரத்தை ஒவ்வொருவரும் பெற்றுவிட்டால் மற்றெவ்வித சுதந்திரமும் தானே வந்தடையுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

சர்க்கார் நடத்தையும், சட்டங்களும் பெரிய தடைகள் என்று பேசுகிறோம். பொருளாதாரக் கொள்கையையும் ஜாதி பாகுபாட்டையும்பற்றி குறை கூறுகிறோம். இத்தகைய பிரஸ்தாபம் உண்மையில் கவனிக்கத் தக்கதுதான். மக்கள்மீது சமூகம் ஏற்படுத்தும் தடைகள் எவ்வளவு? வகுப்புப் பிரிவினையில் உண்டாகும் ஜாதிப் பாகுபாடு எத்தகையது? தங்கள் தங்கள் பரம்பரைத் தொழிலையே ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டுமென்று கற்பிப்பதால் ஏற்படும் பொருளாதாரக் கஷ்ட மெவ்வளவு? உத்தியோகங்கள் அளிப்பதில் எவ்வித வகுப்பு வித்தியாசமும் காட்டலாகாதென சட்ட சபைகளில் முழக்கம் செய்கிறோம். ஆனால் தாழ்த்தப்பட்டோர் என்று சொல்லப்படும் ஒரு கூட்டத்தாருக்கு கிராமக் கிணற்றில் தண்ணீர் மொள்ளவோ, கோவிலுக்குள் வரவோ, அல்லது பொது சவுகரியங்கள் அளிக்கவோ சம்மதிக்கிறோமா? அல்லது அவர்களது கஷ்ட நிலையைக் கண்டு அநுதாபப்படுகிறோமா? ரெயில்வேக்களில் ஐரோப்பியருக்கும், ஆங்கிலோ இந்தியருக்கும் தனியிடம் ஒதுக்கப்பட்டிருப்பதைக் கண்டு கோபிக்கிறோம். ஆனால் நமது தென்னிந்திய பிராமண சகோதரர்கள் கிராமத்திலுள்ள சில குறிப்பிட்ட தெருக்களை மற்றவர்கள் நடமாடாதபடி சுவாதீனம் செய்து கொண்டிருக்கிறார்களே அது இதைப்போல் அவ்வளவு கொடுமையாய்ப்படுகிறதா? ஓர் உண்மையான அறிவாளி தான் பேசுகின்ற மாதிரியே நடந்து காட்டவேண்டுமென்பதை உணரவேண்டும். ஒழுக்கத்திலோ, அறிவிலோ குறுகிய எண்ணமும், குறுகிய நோக்கமும் உடைத்தாயிருத்தலாகாது. தன்னுடைய அரசியல் கொள்கைகள், மத, சமூக வேதாந்த கொள்கைகளுக்கு முரண்பட்டதென்ற திருப்தியோடுமட்டும் இருந்துவிடுவது தகாது. அத்தகையோர் எந்த ஒன்று, ஒரு துறைக்கு நல்லதென்று கருதுகிறார்களோ அதே எல்லாத் துறைகளுக்கும் நல்லது என்று கொள்ளவேண்டும்.

மத சம்மந்தமான விஷயத்தில் அனேகர் இந்தியாவில் மட்டுமல்ல. முற்போக்கான எண்ணங்களும், பகுத்தறிவும் உள்ளவர்களாய் இருந்தும் அதை மறைத்து, பொது ஜன அபிப்பிராயத்தை ஒட்டி நடப்பதாய் பிறர் நினைக்கும்படி பாசாங்கு செய்கிறார்கள். சமூக ஆக்கத்திற்கு மதம் அவசியம் இருக்கவேண்டுமென்று கருதுகிற அத்தகைய போலி அறிவாளர்களைப் பற்றி நாம் முன்னமே கூறியிருக்கிறோம். ஏனையோர் தங்களை நாஸ்திகர் என்று கூறிவிடுவார்களே என்று பேடித்தனமாகப் பயந்து கொண்டு தங்கள் அபிப்பிராயங்களை மறைக்கும் ஒரு சிலரும் இருக்கிறார்கள். மத பிரிவுகள் எண்ணிறந்து காணப்படுவது போல கடவுள் என்றவார்த்தைக்கும் அனேக பொருள்கள் இருக்கின்றன. நாஸ்திகம் என்பது கடவுள் நம்பிக்கையின்மை என்றுமட்டும் கருதப்படுமேயானால் கடவுளே உலகத்தில் ஒவ்வொரு நாளும் நடக்கும் சம்பவங்களை நிர்வகித்து வருகிறாரென்றால், அல்லது ஒரு தனிப்பட்ட மனிதனின், அல்லது ஒரு கூட்டத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர்களது வழிபாட்டுக்கிணங்கி, இயற்கைச் சட்டத்தையே மாற்றக்கூடிய ஆற்றலுள்ளவர் என்பது உண்மையாயின் ஒவ்வொரு பகுத்தறிவாளரும் நாஸ்திகனே. அத்தகைய நாஸ்திகப் பட்டம் பெருவதில் வெட்கப்படக்கூடாது. அத்தகையோர் ஓர் சமூகத்தின் வைதிக மனப் பான்மையையுடைய ஒருவரைக் காட்டிலும் மதிப்பு வாய்ந்த அங்கத்தினரேயாவார். ஏனெனில் அவர் தன்னுடைய ஊழியத்திற்காக எவ்வித சன்மானத்தையோ அன்றி மறு உலக நிம்மதியையோ எதிர்பாராமல், மேன்மையான, சந்தோஷமான, ஆரோக்கியமான ஜன சமூக வளர்ச்சியிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறார். ஒரு மனிதனுக்கு தன் கடமையைச் செவ்வனே செய்தோம் என்றோ அல்லது ஜன சமூகத்தின் அறிவு வளர்ச்சியிலோ, ஒழுக்க சீர்திருத்தத்திலோ தன்னால் முடிந்ததைச் செய்ததாக உண்டாகும் மனோநிம்மதியை திருப்தியைக் காட்டிலும் வேறு பெரிய சன்மானம் என்ன இருக்கக்கூடும்.

சுயமரியாதைப்பிரசாரம்.

தோழர் அ. பொன்னம்பலனாரின் சுற்றுப்பிரயாணம்.

திருப்பத்தூர் சுயமரியாதைச்சங்க சார்பில் திருப்பத்தூர் மார்க்கட்டில் 27-2-32 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு ஜோலார்பேட்டை தோழர் வி. பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் 'புதுவைமுரசு' ஆசிரியர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கட்கு ஒருவரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள். பின் தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்அ. பொன்னம்பலம் அவர்கள் "மதமும் மக்களும்" என்பது பற்றி சுமார் 2-மணிவரை மிகவும் விளக்கமாகவும், விரிவாகவும் விரிவுரை நிகழ்த்தினர். தலைவர் முடிவுரைக்குப்பின் சங்கக்காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரம் கூற இரவு 8-30 மணிக்குக்கூட்டம் இனிது முடிந்தது.

சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச்சங்கத்தின் ஆதரவில் சங்கக்கட்டிடத்தில் 28-2-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு தோழர் எ. கே. சந்திரய்யா அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் 'மதமும் மக்களும்' என்பதுபற்றி சுமார் 3-மணிநேரம்வரை சுயமரியாதை இயக்கக்கொள்கையையும், எதிர்ப்பவர்களின் யோக்கியதையையும், மதத்தின் பேரால் மக்கள்படும் துயரத்தையும் நன்கு விளக்கிப்பேசினர். பின் காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரம் கூற இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிதுமுடிவுற்றது.

29-2-32-ல் சேலத்திலிருந்து மத்தியானம் பயணமாகி ஈரோடு சேர்ந்தார்.

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக்கொள்ளுங்கள்
பூவிழல் !!
கண்ணில் பூவிழுந்து பார்வையைத்தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.
செவிடு !!
பாதி அல்லது முழுவதும் செவிடாகிருந்தால் கூடப்பரவாயில்லை. காதிலரச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சத்தமாக நிவர்த்திக்கப்படும். குணமடைந்து உத்திரவாதம்.
விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக்கொள்ளவும்.
"Sri" Works,
Beadon St. P. O. Calcutta.

"நாம் சொல்வதையும் கேட்பார்களா?"

(சாக்கோட்டை எஸ். ஆர். சாமி)

சுயமரியாதை இயக்கத்தின் பேரிலும், அதன் தலைவர்களின் பேரிலும், அதில் கலந்துள்ளவர்களின் பேரிலும் படித்துப் பதவி பட்டம் பெற்றவர்களும், அப்படிக்கல்லாதவர்களும், ஆஸ்திகர்களும் சொல்லும் ஆடசேபணை என்னவென்றால் "அவன் வலையன். இவன் சாணான். அப்படி முன் இருந்தவன். இப்பொழுது இப்படியுள்ளவன். தெருக்களில் நடக்க உரிமை இல்லாத அவ்வளவு இழிகுலத்தவன். அவன் பச்சோந்தி இவன் ஓணான் என்று தூஷிப்பதையே வேலையாகக் கொண்டுள்ளனரேயல்லாமல், அவர்களுடைய அபிப்பிராயங்களை, கொள்கைகளை, பேச்சுக்களை ஆராய்ந்து தூஷிக்கிறார்களில்லை.

மேலும்: "அந்த ஊர் கோவிலில் திருடப்போனவனை அந்தச் சாமி கண்ணை அவித்துவிட்டது. எங்கேயோ உள்ள (மாயவரம் என்ஞாபகம்) கோவில் சாமியிடமுள்ள பீடத்தை வெட்டும்பொழுது ரத்தம் வந்தது. அந்தச் சாமி சீறுது இந்தச் சாமி உறுமுது; சாமி இல்லாமலா மழை பெய்கிறது" என்றும் அந்த மாலையுடன் இதையும் தொடுத்துக் கொள்கிறார்கள். இன்னும் ஒரு சாரார் அரசாங்கத்திலும், பதவி, சம்பளம் பெறல்வேண்டும். காந்தியிடத்தும் நம்பிக்கை, விசுவாசம் இருத்தல் வேண்டும் என்கின்ற எண்ணமுடையவர்கள் "ஒரு சுலோகத்தைச் சொல்லி அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி. மிலேச்ச அரசனாக இருக்கிறபடியால்இந்தப் பயல்களெல்லாம் (சுயமரியாதைக்காரர்களெல்லாம்) பிதற்றுகிறார்கள். ராமர் நடத்திக் காண்பித்த "ராமராஜய"ந் தான் நீதியுடையது. நீதியை நிலைநாட்ட வந்தவர் மகா புருஷர்" என்றும் பேசுகிறார்கள்,

இன்னும் சிலர் "உபாத்தியாயர்களுக்கு சுயமரியாதை இயக்க சம்பந்தமே இருத்தல் கூடாது. ஏனென்றால் படிக்கும் மாணவர்களெல்லாம் நாஸ்திகர்களாய் விடுவார்கள்." என்றும் பயப்படுகிறார்கள். ஆகவே, இவர்கள் சொல்வதை யெல்லாம் கேட்டோம் இனியும் கேட்போம். ஆனால் "நாம் சொல்வதையும் கேட்பார்களா" என்பது தான் என்னுடைய விண்ணப்பம்.

பச்சைக் கண்ணாடி போட்டுப் பார்த்தால், பச்சையாகவும், சிவப்புக கண்ணாடிப் போட்டுப்பார்த்தால், நாம் பார்க்கும் பொருள்கள் யாவும் சிவப்பாகவும், தெரியுமென்று அவரவர்களுக்கே தெரியும். ஆகையால் நான் சொல்லும் விஷயங்களையும் ஒரு சுத்தமான, களங்கமில்லாத "நடு நிலைமை" என்ற கண்ணாடிப் போட்டு ஆராய்ந்து பார்க்கட்டும், பகுத்தறிவை உபயோகப் படுத்தட்டும், துவேஷ புத்தியை விட்டு யோசிக்கட்டும், யார் சொல்வது சரி என்று விளங்காமல் போகாது. வேண்டுமானால், பிறகு வையட்டும். இதை விட்டு விட்டு, தூஷிப்பதையே ஆதாரமாக வைத்துக் கொண்டு அவரவர்களுடைய கொள்கைகளையும், எடுகளையும் நிலைநாட்டப்பார்த்தால், அது எத்தனை நாளைக்குத் தான் நிலைக்கு மென்பதை அவர்களுடைய யோசனைக்கே விட்டுவிட்டு மேலே தொடங்குகின்றேன்.

இவ்வாஸ்திகர்கள் சொல்லும் ராம ராஜியத்தில், ஒரு பார்ப்பனப் பையன் இறந்ததாகவும, அவனை உயிர்ப்பிக்க வேண்டி ஒரு பார்ப்பனரல்லாதவனை (சம்பூகனை)க் கொன்றதாகவும், சொல்லும் ராம ராஜியத்தில், இருவரையும் விசாரித்து தண்டனை கொடுக்கவே, நீதியைச்செலுத்தவோ ஞாயமிருக்க, நீதியிருக்க அப்படிக் கல்லாமல், சுக்ரீவன் பேச்சை மாத்திரம் கேட்டுக் கொண்டு, அவனுக்கு உறுதி மொழியும் கூறி, வாலியைசண்டைக்குக்கூப்பிடச் சொல்லி வாலியையும் தனக்கு விரோதியாகக் கொண்ட ராம ராஜியத்தில், தாடகையை அவள் செய்த குற்றமென்னவென்றும், யாகத்தை கலைக்க வேண்டிய காரணம் என்ன என்றும், அவளை விசாரிக்காமல், சொல் பேச்சைக் கேட்டுத் தாடகையைக் கொன்ற ராம ராஜியத்தில், நீதி மிக மிக இருந்தது போலும், அதிருக்கட்டும் அப்பொழுது எப்பவோ, எங்கேயோ, வந்தரத்தம் இப்பொழுதுவரட்டுமே, அப்பொழுது கண்ணையவித்த தெய்வங்கள் இப்பொழுது திருடிக் கொண்டுபோகும் திருடர்களின் கண்ணையவிக்காமல் போனதென்ன? இப்பொழுது எத்தனைகோவில்களில் உள்ள சாமியின் நகைகள், ஆடைகள், என் தாலியே திருட்டுப்போகின்றன.

அப்பொழுது தாயாகவந்து பிரசவம் பார்த்த கடவுள், தாய்ப்பன்றியாகவந்து பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தகடவுள், பரதேசிகளைப்போல் போய் பிச்சைகேட்கவும், நிர்வாணமாக இருக்க ஆசைப்படவும், அதற்காக குழந்தைகளாகப் போனதுமான காமக்கடவுள்கள், இறந்த குழந்தையை எழுப்பித்தந்ததுமாகிய கடவுள், இன்னும் எவ்வளவோ காரியங்களை சாதித்ததாகச் சொல்லப்படும் இவ்வளவு கடவுள்களும், தெய்வங்களும், சாமிகளும், இப்பொழுது இவர்கள் சொல்லும் மிலேச்சர்களின், ஆங்கிலேயர்களின் ஆறுவெட்டும் இயந்திரத்தில் அகப்பட்டு மண்ணோடு மண்ணாகமடிந்து விட்டனவா? அல்லது அக்காலத்தில் தங்கள் கோவில்களில் இலுப்பெண்ணைக்கு எரிந்த விளக்கின் வெளிச்சத்தைப்பார்த்துக்கொண்டிருந்த அக்கடவுள்கள் இக்காலத்தில் தங்கள் வீடுகளில் மின்சார விளக்கின் வெளிச்சத்தைப்பார்த்தவுடன் ஆனந்தமடைந்து, ஜோதியோடு ஜோதியாய் மறைந்துவிட்டனவா? வீணே தூஷிப்பதில் பயனில்லை. காட்டில் கிடக்கும் விளாம்பழத்தை எடுத்து உள்ளே பழமிருக்குமென்று சொல்லி அதை நம்பு என்று சொல்லுகிறவர்களிடம் ஒரு சமயம் அதனுள் பழமேயிருக்காது, வெறும் ஓடாகவே இருந்தாலுமிருக்கும். ஆகையால் உடைத்துக் காட்டு பிறகு நம்புகிறோமென்று சொல்லும் எங்களிடத்தில் என்ன குற்றமிருக்கிறதென்று கேட்கின்றேன்.

அதுபோல, அவரவர்களுக்குள்ள ஆசாரமுறை, பழக்கவழக்கம், அவரவர்களுடைய மதப்புத்தகங்களில் சொல்லியுள்ளபடி அவர்களுக்கே தெரியும். ஆகையால் மிலேச்ச அரசனுடைய பதவி, பட்டம், இவைகளை வெறுத்துத்தள்ளட்டும். போய் வெட்டுவோம், எந்தச்சாமி பீடத்தில் வெட்டினவுடன் ரத்தம் வருகிறதோ அந்தயிடத்திலேயே ஆராய்ந்து பார்த்தபின் உண்மை சாமிதான் என்று இவர்களுடைய கொள்கைகளைப்பின் பற்றுவோம். அதைவிட்டு, விட்டுத் தத்துவார்த்தம் பேசியோ, மிரட்டியோ தங்களது கொள்கைகளை நம்பச்செய்துவிடலாமென்பது அந்தக்காலமேயொழிய, அதாவது அவர்கள் சொல்லும் ராமர் ஆண்டகாலமேயொழிய இவ்விருபதாம் நூற்றாண்டில் முடியாது, முடியாது முக்காலும் முடியாது. ஏன் முழுவதுமேமுடியாது.

நிற்க, நான் சொல்லும் பெரியார்களின் அபிப்பிராயங்கள் இவர்களுக்குநாத்திகமாகத்தோன்றினால் அவர்கள் நாஸ்திகர்களாகவும் தோன்றினால் இவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய பெரியார்களின் அபிப்பிராயங்களையேகீழே இரண்டொன்றைத்தருகிறேன். அவைகளையாவது ஆராய்ந்து பார்க்கட்டும். பிறகு அவர்களையும் நாஸ்திகர்கள் என்று சொன்னாலும் சொல்லட்டும்.

"மூடப்பழக்க வழக்கங்களெல்லாம்நம்மைச்சங்கிலிபோல் பிணித்திருப்பதுவரை, பொருளாதார துறையிலோ, அரசியல் துறையிலோ, நாம் எத்தகைய முன்னேற்றமும் அடையமுடியாது," என்று திரு. ஜவஹர்லால்சொல்லியிருக்கிறார்.

"ராமன், கிருஷ்ணன், மாடன்காளிமுதலியவைகளை வழிபட்டுவருவதினாலேயே நம்நாடு கீழடைந்து போகிறது. இவையெல்லாம் ஒருசாராரானவயிற்றுப்பிழைப்புக் காரர்களாலேயேஉண்டாக்கப்பட்டனவாகும்! என மறைமலையடிகள் வேதாசலம் அறிவித்திருக்கிறார்!

"அன்னிய அரசாங்கத்தின் தீமை ஒருபெரிதல்ல. பகுத்தறிவின்மையும், மூடநம்பிக்கையும், அநியாயபுத்தியும், ஜாதித்துவேஷமும், மதவெறியுந்தான்நமக்குப்பெருவிரோதிகள். இவைகளின் தீமையே பெரிது" என்று கவி, ரவீந்தரர் கூறியுள்ளார். ஆகவே இவைகளையெல்லாம் ஆலோசித்துப்பாருங்கள்.

அடுத்தபடியாக, "உபாத்தியாயர்கள் சுயமரியாதை இயக்கசம்பந்தமுடையவர்களாக இருத்தல் கூடாது. ஏனென்றால் பையன்களெல்லாம்நாஸ்தீகர்களாய்விடுவார்கள்" என்கின்றார்கள். ஆமாம். உண்மைதான். திருகாந்தியார் கோரும் "ராமராஜ்ய"மும்கிடைத்து, இவ்வாத்தீகர்களுக்கும், பார்ப்பனர் களுக்கும், கல்வி இலாக்காப் பொருப்பைக்கொடுத்துவிட்டால், எல்லா உயாத்தியாயர்களையும், இராமாயணம், பாரதம், இதிகாசம், புராணம், பகவத்கீதையாகிய இவைகளை வாங்கச்செய்வதுடன், அவர்களை புராணமரியாதைக்காரர்களாக இருத்தல்வேண்டும்: எனவும் சொல்லிவிடுவார்கள் போலும்.

பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, குதிரை வாங்ககொடுத்த பணத்தைக்கோவில் கட்டியவர் கதையையும், குளித்துக்கொண்டிருந்தபெண்களின்சேலைகளை தூக்கிக்கொண்டு ஓடுபவன் கதையையும், பெண்சாதியைஇழக்கவும், அதை அபகரித்தவன்கதையையும்,பார்ப்பானைத்தனியே திண்ணையில் படுக்கவைத்தல்கூடாது. ஒருபெண்ணையும் அவனிடம் படுக்கச்செய்யவேண்டும். இல்லாவிட்டால்அப்படிச் செய்யாதவனுக்கு "நரகம்" வந்துசம்பவிக்கும், என்று சொல்லும் சாத்திரத்திலுள்ள கதையையும், ஒருஅசுரன் பெண்சாதியைப்புணரநினைத்தும், அவளுடையகற்பினாலும், புருஷனுடைய பலத்தாலும் எண்ணம் நிறைவேறாமல் தவித்ததும், அவ்வசுரனை ஒருமகாசிரேஷ்டரென்பவன் கொல்லவும், உடனே சமயம் பார்த்துக்கொண்டிருந்த பராக்கிரமசாலி (விஷ்ணு) அவ்வசுரனின் உடம்பில் புகுந்து அவளிடம் போய் அவளைப் புணரவும், அவள் தன்புருஷன் இவனல்லன் என அறிந்து, இவ்வவதார புருஷனைநோக்கி "நீபூவுலகில் மனிதனாகப்பிறக்கவும், உன்னுடைய பெண்சாதியை ஒருஅசுரன் கற்பழிக்கவும்" எனசாபம்கொடுக்க அந்தசாபத்தை நிறைவேற்றும் பொருட்டு, பூலோகத்தில் மனிதனாகப்பிறந்து, சாபத்தையும் நிறைவேற்றிய மகா புருஷருடைய கதையையும், மாயமான் என்ச்சொல்லிஅதை அங்கேயே (கொல்லவேண்டுமென்று நினைத்தால்) கொல்லா

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க

திருச்சியில் சீர்திருத்த மறுமணம்.

28-1-32 பிற்பகல் 5-30 மணிக்கு திருச்சி கிழ ஆண்டார்வீதி வக்கீல் திரு. ஜே. எஸ். இராமானுஜம் பி. ஏ., பி. எல்., அவர்களில்லத்தில் ஜில்லா சுயமரியாதைச்சங்கத்தின் ஆதரவில் முசிரி தாலூகா உப்புலியபுரம் திருவாளர். இராமசாமிரெட்டியார் அவர்களுக்கும், ஷைபூர் திருமதி லட்சுமி அம்மாளுக்கும் சுயமரியாதைச்சீர்திருத்த முறையில் விவாகம் நடந்தேறியது. அவ்விழாவிற்கு லாலுகுடி தாலூகா பெருவளநல்லூர் பிரபலமிராசுதாரரும், தாலூகாபோர்டு பிரசிடெண்டுமான திரு. பி.பி. கிருஷ்ணசாமிரெட்டியார் அவர்கள் குமாரரும் மீனம்பள்ளி ஜமீன்தார் மருகருமான திருவாளர் பி. பி. கே பிரசன்ன வெங்கடாசலம் அவர்கள் தலைமை வகித்து நடத்தினர். அவ்வமயம் திருவாளர்களான இராமசுப்பிரமணியம்தம்பதிகள். கி. ஆ. பெ. விஸ்வநாதம் தம்பதிகள், ச. ம. சி, பரமசிவம் தம்பதிகள், டி, வி. கே. நாயுடு தம்பதிகள், வக்கீல் டி. வி. சோமசுந்தரம் தம்பதிகள், வக்கீல் இராமானுஜம் தம்பதிகள், டி. பி. வேதாசலம் தம்பதிகள், பூவாளூர் செல்வக்கணபதியார் தம்பதிகள், லாலுகுடி பூமிநாதன், கூத்தப்பெருமாள், தோழர், சுப்பிரமணியபிள்ளை, கலியபெருமாள் நாயுடு, பண்டிட். முத்துசாமிபிள்ளை, பீமநகர் பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தார், வெள்ளிப்பட்டரைப் பெருமாள் முதலானவர்களும், மணமக்களின் உறவினர்களும், துறையூர் சுயமரியாதை சங்கத் தலைவரும், இத்திருமணத்திற்கே காரணகர்த்தருமான தோழர், இராமசாமிமுதலியவர்களும், பிறருமாகசுமார் 300-க்கு மேல் கூடியிருந்தனர்.

தலைவா முதலில் தங்கள் ரெட்டிசமூகம் மிகவும் பிற்போக்கான சமூகமென்றும், சீர்திருத்தத் துறையிலீடுபடுபவர்கள் மிகவும் சொற்பமெனவும், எதிர்ப்பு மிகவும் அதிகமென்றுங்கூறி இச்சமூகத்தில் முதன் முதலாக திருமதி லட்சுமி வீரத்துடன் மறுமணஞ்செய்துகொள்ள முன்வந்தது தங்கள் சமூகத்திலே திக்கற்றுத்தவிக்கும்எண்ணற்ற இளம் விதவைச்சகோதரிகளுக்கு வழிகாட்டியானமைக்கும்மணமகன் திரு.ராமசாமி எவ்வளவோ எதிர்ப்புகளையும் லட்சியஞ்செய்யாது செயலில் வந்தமைக்கும்தான் பெரு மகிழ்ச்சியடைவதாகக்கூறியமர்ந்தார்.

மணமக்கள்வாழ்க்கையில்ஒருவருக்கொருவர் துணையாகக்கொண்டு ஒப்பந்தஞ்செய்துகொள்ளுவதான உறுதி மொழிகளைச்சபை முன் கூறி மாலை மாற்றிக்கொண்டனர்.

பின்னர் திரு கி. ஆ. பெ விஸ்வநாதம் அவர்கள் மணமகளின் பிறந்த குடும்பத்தின் பெருமையும் முதற் கணவனின் உயரிய நிலையையுமெடுத்துக்கூறினார். பின்னர் திருச்சி வக்கீல் திரு டி. வி. சோமசுந்தரம் பி. ஏ., பி. எல்., அவர்கள்சமயம், சாத்திரம், பழக்கவழக்கம், முதலியவைகளால் பல சீர்திருத்த மணங்களுக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்கள், இளம்விதவைச்சகோதரிகளை வீட்டில் வைத்து அவர்களின் துன்பத்தைக் கவனித்துப்பார்த்தால்உண்மையறிவார்களென்றும் வைதீகர்களுங்கூட தலைவிதி யென்றதையால்தான் மறைக்கப்படுகிறார்களெனவும், அனேக வாலிபர்கள் இன்றைய நிலையில் கலப்பு, காதல், விதவை மணஞ்செய்துகொள்ளத் தயாராக வருகிறார்களெனவும், இக் கூட்டத்திலேயே அனேக இளைஞர்கள் இருப்பதைக் காண்பதாயும், அவர்கள் உறவினர், ஜர்க்கட்டு, அவர்களால் பேசப்படும் இழிசொற்கள் முதலானவைகட்குப் பயந்தே மனநிலடக்கிக் கொண்டிருப்பதாயும், அவர்கள் வீரத்துடன் இவைகளை லட்சியஞ் செய்யாமல் இம் மணமக்களைப்போல் விரைவில் செயலில் செய்துகாட்ட வேண்டுமென்றுங் கூறினார்.

பின்னர்வக்கீல்திரு.டி.பி.வேதாசலம் பி. ஏ., பி. எல். அவர்கள் பேசியதில் விதவைகள் மறுமணஞ்செய்து கொள்வது சட்ட சம்மதமுமென 70 வருடங்களுக்கு முன்பே சட்டமியற்றியிருந்தும், இதுவரை சொற்பமான விவாகங்களே நடைபெற்றிருக்கின்றனவென்றும், சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு அதன் தலைவர்களும், தொண்டர்களும் செய்யும் பிரசாரங்களால் பல மணங்கள் நடைபெற்றுவந்தாலும் போதிய அளவு விருத்தியாகாததற்கு இளைஞர்கள், தோழர் சொன்னதுபோல் பயமே காரணமென்றும் 1923-ம் வருஷத்தில் விதவைகளின் சொத்துப்பாத்திய சம்பந்தமாக வேற்பட்டதின் பயனையும் இன்னும் சில சட்டதாற்பரியங்களையுங் கூறி விளக்கினார்.

பின் திரு. ராம சுப்பிரமணியம் அவர்கள ஒரு அரிய சொற்பொழிவு ஆற்றினார். பின் திருமதி நீலவதி அம்மையார் அவர்கள்சகோதரிகள் இம்மணத்திற்கு ஏராளமாக வந்திருப்பதைப் பாராட்டிவிட்டு பெண்மக்கள் இந்த விதவைப் பட்டத்தினால் படும் துயரங்களையும், கல்வி யறிவு இல்லாமலும், ஜாதி சமய, பழக்கக் கட்டுப்பாட்டினால் ஏற்படும் கொடுமைகளையும் அவர்களில் பலர் தற்கொலைசெய்து வாழ்நாட்களைத் துறப்பதையும், மனதையடக்கவியலாத சகோதரிகள் சோரத்தால் பிள்ளைகளைப்பெற்று சாக்கடையிலும்,காட்டிலும் போட்டுவிடும் விபரீதக் கொலைகளையும் இவைகளை யெல்லாம் பார்த்தும், கேட்டுமிருந்தும் படித்தவர்களும், வைதீகர்களும், இன்னும் ஜாதிப் பழக்க வழக்கப் படுகுழியிலேயே கிடந்து தடுமாறும் சகோதரிகட்கு இழைத்துவரும் கொடுமைகளையும், மறுமணத்தின் அவசியத்தையும் சபையோர் மனமுருகக் கூறி மணமகள் நேற்று தன் வீட்டிற்கு அன்பர்களால் அழைத்து வந்தபோது தான்கண்ட கொடுமையான காட்சிகளையும், இது போது அவர்கள் பெற்ற நிலையையுமெடுத்துக் காட்டி தலைவிதி யென்பவர்கட்குச் சரியானபடி புத்தி கூறி சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு பயந்து விதியெழுதிய பிரம்மன் அதை இவர்கட்கு மாற்றி விட்ட விந்தையையும் சுட்டிக்காட்டி. இளைஞர்கள் இது விஷயத்தில் தைரியமாக நடந்தால் நம் சகோதரியார்கட்கு [illegible] முன்னோர்களாகி அவர்களுக்கு வழிகாட்டியா யிருப்போமெனப் பேசி மண மக்களைப் பாராட்டினர்.

பின் திருச்சி விதவா விவாக சபைத் தலைவரவர்கள் ஆசிகூறி மண மக்களுக்கு விதவா விவாக விளக்க சம்பந்தமான இரு புத்தகங்களும், ஓர் சில்க் துண்டும் பரிசளித்தார் என ஒரு நிருபர் எழுதுகின்ர்.

மணமகன் திரு: ராமசாமி-மணமகள் திருமதி லட்சுமி,

கொழும்பு.

தென்காசித்தாலூகா மருத்துவர்குல வாலிபர்சங்கம்:—இச்சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா (1-3-32ல்) கொழும்பு பூந்தோட்டம் வீதியிலுள்ள மேற்கண்ட சங்க நிலயத்தில் இரவு 9-மணிக்கு தோழர், கு. ஷண்முகம் அவர்கள் தலைமையில் கூடியது. ஏராளமான அங்கத்தினர் விஜயம் செய்திருந்தனர் தலைவரும் தோழர்; சு. இராமச்சந்திரர் அவர்களும் மருத்துவ வாலிபர் முன்னேற்றம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

இனி காங்கிரஸ் என்ற பெயர் தலையெடுக்குமா?

காங்கிரஸ்காரனுக்கும்— சுயமரியாதைக்காரனுக்கும் சம்பாஷணை.

(மிஸஸ். சுந்தரி)

காங்கிரஸ்காரன்—எப்படியிருந்தாலும் மூன்ருவது வட்டமேஜை மகாநாட்டு முடிவுக்குள் அல்லது இம்முடிவைப் பார்லிமெண்டில் நிறைவேற்றுவதற்குள் காந்தியும், காங்கிரஸ் கைதிகளும் வெளியே வந்துதானே தீரவேண்டும்.

சுயமரியாதைக்காரன்— ஆ! அப்படியா? இப்படியும்சிலர்சொல்லிக்கொண்டு இருக்கிருர்கள். சிறை புகுந்தவர்கள் தங்களின் தெண்டனை காலம் முடிந்ததும் வெளியில் வரவேண்டியவர்களே!

கா:—இல்லைநான் சொல்வது என்னவெனில் புது சீர்திருத்தம்வழங்கப்படுவதற்கு முன் அரசியல் கைதிகளை வெளியே விடடு, காங்கிரசுடன் சமாதானம் செய்து கொண்டு அதன் பின்பு தான் சர்க்கார் சீர்திருத்தத்தை அமுலுக்குக்கொண்டுவர முடியுமே யன்றி அவர்கள் வராமல் முடியாது என்று சொல்லுகிறேன்.

சு:--ஹூ-கு! அப்படிஎனில்சர்கார் முன் செய்தது போல் இம்முறையும் செய்யு மென்று தாங்கள் சொல்கிறீர்களா ?

கா:—பின் என்ன! மகாத்மா காந்தியையும்,காங்கிரஸ் சபையையும். 40 ஆயிர மக்களையும் சிறையில் வைத்து சீர்திருத்தம் வழங்கி விட்டேன் என்ருல் யார் ஒப்புக் கொள்ளுவார்கள்.

சு:—அப்படியானல் காங்கிரஸ் என்ற சபை மீண்டும் தலையெடுக்கும். அதன் பெயரால் இருந்ததை பரிமுதல் செய்யப்பட்ட கட்டிடங்களும், பணங்களும், மீண்டும் கவர்ன்மெண்டு கொடுத்து விடும். அடுத்த அகில இந்திய காங்கிரஸ் கூட்டம் கராச்சியில் கூடி அதில் ஒப்புக் கொள்ளப் பட்ட தீர்மானம் தான் சுயவாட்சியாக வரும் என்பது தங்கள் எண்ணமா ?

கா:—ஆமாம். அதில் தங்களுக்கென்ன சந்தேகம். காங்கிரஸ் என்பது உலகம் முழுதும் பேர் போனதல்லவா ? காந்தியைப் பற்றி உலகம் முழுதும் கொண்டாடுவதுஉனக்குத் தெரியாதா ?

சு:—சரிதானைய்யா, உலகம் என்ருல் நீங்கள் எதை நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அந்த உலகம் காந்தியையும், காங்கிரசையும் மதிப்பதும் எனக்குத் தெரியும். ஆனல் இங்கு வேண்டுவது அதுவல்ல. மதிப்பதால் என்ன நடந்து விட்டது என்பதேயாகும். போகட்டும் "காங்கிரஸ்" என்றபேர்மீண்டும் இந்தியாவில் இருக்கும் என்று எண்ணினுல் அது பெறும் தவருகும்.

கா:—ஆ! அப்படியா தாங்கள் கருதுகிறீர்கள். காந்தியைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

சு:—அவர் கெதியும் அப்படித் தான்,

சு:—சுதந்திரதாக மெடுத்துஅதன் பயனைய் இந்திய நாடே விழித்துக் கொண்டது. காந்தி போராட்டமென்பது இந்தியாவின் சுதந்திர யுத்தமாகும். காங்கிரஸ் பெயரே இராதென்று தாம் சொல்வது சுயமரியாதைக் காரனுக்கு அரசியல் தெரியாது என்பது புலனுகிறது. இம்மாகாணத்தில் தான் நீங்கள் காந்தியை கண்டித்துத் தீர்மானம் செய்யலாம். மற்ற மாகாணங்களைப் பற்றி என்ன எண்ணுகிறீர்கள். காங்கிரஸ் பெயரே அழிந்து விடுமென்பது பொருத்த மற்றது.

சு:—ஐயா! எங்களுக்குத் தாங்கள் சொல்லுகிற அரசியல்தெரியாது. தங்களைப் போல் ஒரு தீர்மானத்தைஒருவர் சொல்லை அப்படியே திருப்பி ஒலி பரப்பும் கருவி வேலை தெரியாது என்பது வாஸ்தவம். ஆனல் பிரிட்டிஷ் சர்க்கார் தனது திட்டத்திற்கு இது கெடுதல் என்று முடிவு செய்த எந்தநாடும், சர்க்காரும், மக்களும், சங்கமும், மகாத்மாவும் இதுவரையில் தலை எடுத்ததேயில்லை.

கா:—அப்படியா! காங்கிரசுக்கும், காந்திக்கும் உதாரணமாக ஒப்பிட்டு ஒன்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

சு:—ஒன்றல்ல எத்தனைவேண்டுமானுலும் சொல்லலாம். இதற்கு முன்-ஜான்ஸி லட்சுமிபாய் காலத்திலிருந்து நேற்றுவரையில் பலாத்கார முறையில் சர்க்காரை வீழ்த்த நடந்த போராட்டங்கள்-சதிகள்- இவைகளைப்பற்றி கூறவிரும்பவில்லை. தங்களுக்கு பர்மாதெரியுமா?

கா:—ஆம். நன்கு தெரியும். எனக்கு 20-வருட அநுபவம் உண்டு. நகரிலும், உள் நாடுகளிலும் எனக்கு கடைகள் இருக்கிறது. ஏன், என் அடிபடா இடமே பர்மாவிலில்லை.

சு:—போதும், அவ்வளவு அங்கே 5, 6 வருடங்களுக்கு முன்பு பிக்ஷுகளால் கிருமங்கள் தோறும் சங்கங்கள் ஏற்படுத்தி அவைகள் ஒவ்வொன்றுக்கு பிக்ஷுகளை உத்தியோகஸ்தர்களாக நியமித்து ஏராள செல்வாக்குடனும், திரண்ட பணத்துடனும் ஓர் இயக்கம் இருந்ததே அதற்கு அந்நாட்டு பர்மியர்களிடம் உள்ளமதிப்புஅளவு காங்கிரசுக்கு இன்னுட்டில் உண்டா?

கா:—இல்லை. காங்கிரஸ்-கொள்கைக்கு முரண்பட்ட முஸ்லீம்களும்,தையும, ஆதிதிராவிடர்களும் முன்புபின்பற்றமாட்டார்களே தவிரகாங்கிரசை எதிர்க்கமாட்டார்கள். இன்று பகிரங்கமாக முஸ்லீம்களும், ஆதிதிராவிடர்களும் காங்கிரசை எதிர்க்கிருர்கள். இ ல் இந்தியநாட்டு காங்கிரசைவிட பர்மிய சங்கத்திற்கு பர்மாவில் அத்தனை பர்மியர்களும்மதிப்புக் கொடுத்து வணங்கினுர்கள்.

சு:—சரி, இதை தாங்கள் ஒப்புக் கொண்டீர்கள். அடுததபடி பர்மிய பிக்ஷு உத்தமருக்கு பர்மாவில் உள்ள கௌரவத்தையும், இந்தியாவில் காந்திக்குள்ள கௌரவத்தையும் சீர்தூக்கிப்பார்த்தால், பர்மிய உத்தமருக்கே அதிக செல்வாக்கு இருந்து வந்தது. ஒருமுறை உத்தமர் கைதி செய்யப்பட்டு சிறைக்கு இட்டுச் செல்லும்போது பத்தாயிரக்கணக்கான பர்மியபெண்கள் வீதிகளில்விரிப்பைபறப்பி இருபுறங்களிலும்மண்டி இட்டு நெற்றியை பூமியில் வைத்து நீண்ட கூந்தல்களை விரிப்பின் மேல் விரித்து—அவ்வழகிய— அழக பாரத்தின்மீது தங்கள் குருவான உத்தமரை நடந்து சிறை செல்லச்செய்தார்கள் என்பதே அவருக்குப் பர்மாவிலுள்ள செல்வாக்குக்குத் தக்க உதாரணமாகும்.

மக்களிடம் அத்தனை செல்வாக்குடைய உத்தமர் இன்று இருக்கிருரா? இறந்து விட்டாரா?

கா:— இல்லை உயிருடனேயே இருக்கிருர்.

சு:— காங்கிரசைவிட செல்வாக்கிலும், பணத் திமிரிலும் பதின்மடங்கு அதிகமான பர்மிய சங்கத்தை சர்க்கார் சட்ட விரோதமானது என்று சொன்ன பின்பு என்ன நடந்தது.

கா:— அதற்குப் பின்பு புது சீர்திருத்தங்கள் வந்தது. சட்ட விரோதமென்ற சங்கத்தைப் பற்றிப் பேச்சே கிடையாது. இன்ற அது இருக்குமிடம் தெரியவில்லை.

சு:—அதே கதிதான். உங்கள் காங்கிரசுக்கும் ஏற்பட்டுவிட்டது. ஆதலால்தான் காங்கிரஸ்—அழிந்ததுஎன்று முதலில் நான் சொன்னேன்.

கா:— பர்மா பிக்ஷுகள் சங்கத்தையும், காங்கிரசையும் ஒத்துச் சொல்வது தவறு,

சு:— வேறு என்னமாதிரி கேட்கிறீர்கள்.

கா:— இன்று இந்திய நாட்டின் நிலைமை என்ன? எந்தக் கட்சிக் காரர்களாயினும், காந்தி, காங்கிரஸ், இவைகளைப்பற்றி பரிந்துபேசாமல் இருக்கிருர்களா? இந் நாடு பூரண சுதந்திரமடைய எத்தகைய தியாகஞ் செய்வது சரி என்று ஆண்களும், பெண்களும் பதினயிரக் கணக்காய் வெளிவரும்படி செய்த ஓர் இயக்கத்தின் பெயரே, எதிர்காலத்தில் இந் நாட்டில் இராதென்பது யுக்தமாகத் தோன்றவில்லை.

தாங்கள் சொல்வது ஒருக்கால் உதாரணத்துக்கு பொருதத மாக இருக்குமேயன்றி உண்மைக்கு மாறுபட்டதாகவே இருக்கிறது. காந்தியின் சக்தி உங்களுக்குத் தெரியாது! அவர் லண்டன் சென்ற போது டவுன் என்ன பாடுபட்டதென்பதைப் படித்திருந்தும் அதை அலட்சியமாகக்கூறுகிறீர்கள்.இது அவதாரப் புருடனை காந்திபடிகளின் மூன்ருவது போராட்டமாகும். இதின் முடிவு ஜெயமே அன்றி அபஜயமில்லை.

சு:— தோழரே கோபப்படக்கூடாது. தயவுசெய்து ஒவ்வொன்ருக விஷயத்தைச் சொல்லுங், நமது சம்பாஷணையைமுடிவுக்குக்கொண்டுவரலாம்.

கா:— சரி, இன்று காங்கிரசுக்கு இந் நாட்டில் செல்வாக்கு இருக்கு என்கிறீர்களா? இல்லை என்கிறீர்களா!

சு:— இல்லை என்கிறேன். அத்துடன் முதலில் தாங்கள் சொன்னது போலவே மூன்ருவதாக ஆரம்பித்த இப்போராட்டத்தில் காங்கிரஸ் வாசனையே அழிந்து விட்டது என்கிறேன்.

கா:- ஐயா! இது மிக மோசம். வேண்டுமென்றே சொல்லுகிறீர்கள். பர்மிய சங்கத்தைப்போலவே காங்கிரஸ் அழிந்து விட்டது என்ற கற்பனைபடி பதில் சொல்லக்கூடாது. இம்முறை போராட்டத்திற்கு பின்பு காங்கிரசுக்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டு விட்டது என்கிறேன்.

சு:—அளவு கடந்த மதிப்பா? சொல்லுகிறேன் கேளுங்கள். முதல் முறை காங்கிரஸ் போர் நடத்தியது. கடைசிவரையில் காங்கிரஸ் கட்டளையைக் கேட்க இன்னுட்டில் ஆள் இருந்தான். காந்தி-சௌரிசாரு சம்பவத்தைப்பார்த்து பார்டோலியில் சட்டத்தை மீறுவதை உடனே நிறுத்த வேண்டும்என்று உத்திரவு போடும் வரைபோராட்டம் நடந்தது அல்லவா?

கா:—ஆம். காங்கிரஸ் தலைவரின் கடைசி உத்திரவு கிடைக்கும் வரை போரை நடத்தினுர்கள்.

சு:—சரி. நேற்று நடந்த உப்புப் போராட்டத்தில் காந்திக்கும்-இர்வினுக்கும் உடன்படிக்கை ஏற்படுகின்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க,

பிள்ளைப்பேறு!

கர்ப்பத்தடை அவசியம்.

[சாமி. சிதம்பரனார்]

உலகமெங்கும், பொருளாதார நெருக்கடியும், உணவுப் பஞ்சமும், ஏழைகளின் துயரமும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகின்றன. இவைகளைக் குறைத்து உலக மக்களைத் துன்பமின்றி வாழச் செய்வதற்கு ஒவ்வொரு தேசத்தில் உள்ள அறிஞர்களும் பலப்பல யோசனைகளைக் கூறியிருக்கின்றனர். நாளுக்கு நாள் மக்களின் துன்பம் மிகுதிப்படுவதற்கு ஜனத்தொகை பெருகுவதே காரணமென்று கூறும் உண்மையை யாரும் மறுக்க முடியாது. இதனை இங்கிலாந்தில் உள்ள பேரறிஞராகிய திரு. வெல்ஸ் என்பார் "ஒவ்வோராண்டும் நமது உலக ஜனத்தொகை 130-லட்சம் பெருகிக்கொண்டு வருகிறது. இவ்வாறே ஜனதொகை பெருகிக்கொண்டே போகுமானால், மக்கள் பஞ்சத்தினால் துன்பப் படும்படியான நிலையும், சாதாரணமாக உயிர் வாழ்ந்திருப்பதற்கே ஒருவரோடு ஒருவர் சண்டையிடும்படியான நிலைமையும் ஏற்பட்டுவிடும்" என்ற ஒரு வியாசத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த உண்மையை யாரும் தவறானதென்று மறுக்க முடியாது.

ஆகையால் பிற்காலத்தில் உலக மக்களுக்கு இத்தகைய துன்பம் உண்டாகாமல் தடுக்கவேண்டியதே இப்பொழுதுள்ள அறிவாளிகளின் முன்னின்ற கடமையாகும்: சமூகச் சீர்திருத்தக்காரர்களுடைய கடமையும், அரசியல்வாதிகளுடைய கடமையும் ஆகும்.

பிற்காலத்தில் மக்களுக்குள் பஞ்சமும், கலகமும் உண்டாகாமல் தடுக்க எந்தக் காரியங்களைச் செய்தால் முடியும் என்பதைப் பற்றிப் பலர் பலவிதமான எண்ணங்களை வெளியிடுகின்றனர். இவ்வெண்ணங்களில் நாம் முக்கியமாக இரண்டு கொள்கைகளையே சிறந்ததாகவும் கருதலாம். அவைகளில், இனி ஜனத்தொகையைப் பெருகவிடாமல் குழந்தை பெறுவதைத்தடை செய்வதன் மூலமாக இத் துன்பத்தை நீக்கலாம் என்பது முதன்மையானது. இரண்டாவது "மக்களுக்குள் இருக்கும் உயர்வு தாழ்வுகளை ஒழித்து பொருளாதாரத்திலும் சம நிலையை அடையச் செய்வதன்மூலம் இத் துன்பங்களை ஒழிக்கலாம்" என்பது.

மேல்கூறிய இந்த இரண்டு அபிப்பிராயங்களையும், மதவாதிகளும், சுயநலவாதிகளும் காதில் கேட்கும்போதே வெறுப்பும் கோபமும் அடைவார்கள். பகுத்தறிவற்றவர்கள் இவைகளைக் கேட்டு இகழ்ந்து பேசுவார்கள். உண்மையான—நடு நிலையான—பகுத்தறிவோடு ஆலோசித்துப் பார்க்கின்றவர்கள் எவரும் இறுதியில் மேற்கூறிய அபிப்பிராயங்களைத்தான் ஒப்புக்கொள்ள முன்வரவேண்டும்.

ஆகவே மேற்கூறிய இருவிதக் கொள்கைகளில் முதன்மையான "குழந்தை பெறுதலைக் கட்டுப்படுத்தல்" என்ப கொள்கையை முதலில் ஆராய்வோம்,

"குழந்தை பெறுதலைக் கட்டுப்படுத்தல் வேண்டும்" என்ற வார்த்தையைக் கேட்டவுடன் அனேகர் திடுக்கிடக்கூடும். உண்பதும், உறங்குவதும், பெண்களுடன் கூடியிருப்பதும், பிள்ளை பெறுவதும் ஆகிய காரியங்களிலேயே ஈடுபட்டுத் துன்பமும் பஞ்சமும் தெரியாமல் வாழும் பணக்காரர்கள் பரிகசிப்பார்கள். எண்ணற்ற குழந்தைகளைப் பெற்று அவைகளைப் பாதுகாக்க முடியாமல் "பசியினாலும், வறுமையினாலும்' எப்பொழுதும் மனக் கவலையினாலும், துன்புறும் எழைகளும், பகுத்தறிவில்லாத காரணத்தாலும் ஆச்சரியப்படுவார்கள்" எல்லாம் கடவுள் செயல்" என்ற மூட நம்பிக்கையை உடைய அவர்கள் "பிள்ளை பெறுவது நம்முடைய செயலா? ஆண்டவன் செயலாயிற்றே, அதை எவ்வாறு நாம் தடுக்கமுடியும், ஆகையால் இது முடியாத காரியம் என்று அலட்சியம் பண்ணிவிடுவார்கள். "மதங்களே மக்களுக்கு நன்மைதரும். மதங்களும், மதக் கொள்கைகளும், கடவுள் நம்பிக்கையும் ஒழிந்துவிட்டால் உலகத்தில் உள்ள கட்டுப்பாடுகள் ஒழிந்துபோகும், ஆகையால் "கடவுள் செயல்" என்று மத நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களுக்கு விரோதமான விஷயங்களைப் பேசுதல் கூடாது. அவைபற்றி மக்களுக்குள் பிரசாரம் பண்ணுதலும் கூடாது. சட்டங்கள் நிறைவேற்றுதலும் கூடாது. இவ்வாறு செய்தால் மத நம்பிக்கையும் கடவுள நம்பிக்கையும் அழிந்துபோகும் என்ற சுயநல எண்ணமும், குருட்டு நம்பிக்கையும் உடையவர்களும் "குழந்தை பெறுதலைத் தடுக்கும்" விஷயத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள், இவ்வாறு செய்வது கடவுளுக்கு விரோதமான காரியமென்றும், மதத்திற்கு விரோதமான காரியமென்றும் கூறிவிடுவார்கள். அன்றியும் இது நாஸ்திகக் கொள்கையென்றும், கடவும் நம்பிக்கையும், மத நம்பிக்கையும் அற்றவர்கள்தான் "குழந்தை பிறத்தலைத் தடைபடுத்தல்வேண்டும்" என்று சொல்லுவார்களென்றும் கூறி எதிர்ப்பிரசாரம்செய்யஆரம்பிப்பார்கள். அகவேஉலகில் எந்த நாடுகளிலும், இக் கொள்கையை எதிர்க்கும் கூட்டத்தாரே மிகுதியாக இருக்கக்கூடும். இக் கொள்கையை ஆதரிக்கும் கூட்டத்தார் சிறுபான்மையோராகவே இருப்பார்களென்பதில் ஐயமில்லை,

உண்மையில் "குழந்தை பெறுவதைத் தடுப்பது" என்பது ஒரு பெரிய விவாதத்திற்கு இடமான விஷயமும், நிச்சயமாகவே கஷ்டமான காரியமும் ஆகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில் குழந்தை பெறுவது என்பது இயற்கைமான காரியம். உலகத்தில் குழந்தைகளின்மேல் காதல்கொள்ளாத தம்பதிகள் இருக்கமாட்டார்கள். மணம் புரிந்துகொண்ட இரு மணமக்கள் ஒருகுழந்தையைப்பெறவேண்டுமென கருதுவார்கள். ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் உள்ள காதல் எப்பொழுதும் பிரியாமல் இணைந்து நிற்பதற்கு குழந்தை பெறுவதே முதற்கருவியாகும என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே இத்தகைய இயற்கை நிகழ்ச்சியை கட்டுப்படுத்துவதென்றால் கஷ்டந்தான்.

இத்தகைய இயற்கையைக் கட்டுப்படுத்துவது ஒழுங்காகுமா? இயற்கை வாழ்வு இன்பம் தரத்தக்க தன்றோ? ஆகவே இயற்கை வாழ்வைத்தடுத்துச் செயற்கை வாழ்வை மேற்கொள்வது முடியக்கூடிய காரியமா? என்ற கேள்விகள் எழுகின்றன. இக் கேள்விகளுக்கு நியாயமான சமாதானம் கூறத்தான் வேண்டும். ஆகையால் இதற்கு என்ன சமாதானம் என்று பார்ப்போம். "இயற்கையோடு இசைந்த வாழ்வு இன்ப வாழ்வு" என்பதை நாம் மறுக்கவில்லை. முழுதும் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் செயற்கை வாழ்வினாலும் சுகமுண்டு என்பதை மறந்துவிடக்கூடாது, நமக்கு ஏற்பட்டிருக்கும் பகுத்தறிவைக்கொண்டும், செயற்கை வாழ்வினாலும் இயற்கை வாழ்வைக் காட்டினும் உயர்ந்த நன்மையைத் தேடிக்கொள்ள முடியும் என்று கூறுகிறோம்.

இயற்கை வாழ்வை மாற்ற முயலக்கூடாது. அதனோடு இசைந்து தான் வாழ வேண்டுமென்றால், அவர்களைச் சில கேள்விகள் கேட்கிறோம் நாம் பிறந்தபோது ஆடை ஆணிகளைப் பூண்டுகொண்டா பிறந்தோம்? இல்லையே, ஆகையால் எல்லோரும் அமெரிக்கா, ஜெர்மனி, பெல்ஜியம் முதலிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் "நிர்வாண இயக்கம்" என்னும் இயற்கை வாழ்வு இயக்கத்தை மேற்கொள்ளச் சம்மதிக்கிறீர்கள்களா? நமது முன்னோர்கள், இப்பொழுது நாம் இருப்பதுபோல, இருக்க வீடு வாசல் சொத்து சுதந்தரங்களும், கல்வி, நாகரிகங்களும் மற்றுமுள்ள சுகபோக வஸ்துக்களும் இல்லாமல் குரங்குகளைப் போல மலைகளிலும், மரங்களிலும் காடுகளிலும் வாழ்ந்திருந்தார்கள் என்று சரித்திரம் சொல்லுகின்றதே. அவ்வாறே நீங்களும் உங்கள் வாழ்வை அந்தப் பழங்காலத்திற்குத் திருப்பச் சம்மதிக்கிறீர்களா? என்று கேட்கிறோம். உண்மையிலேயே இத்தகைய இயற்கை வாழ்விற்குத் திருப்புவீர்களானால், இப்பொழுது உண்டாகும்ஜனனவிகிதத்தை காட்டிலும் அப்பொழுது ஜனனவிகிதமும்தானாகவே குறையக்கூடும் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆகையால் மேற்கூறிய இயற்கை வாழ்வை யெல்லாம் தாண்டிச்செயற்கை வாழ்வினால் சுகமடைந்திருக்கிற மனித சமூகம், ஏன் "குழந்தை பெறுதலைத் தடைப்படுத்துதல்" ஆகிய செயற்கை முறையை மேற்கொண்டு தங்களுடைய துன்பங்களை நீக்கிக் கொள்ளக்கூடாது என்று கேட்கிறோம்.

இதனால் நாம், அறவே குழந்தை பெறுவதைத் தடுக்க வேண்டும் என்று கூறுவதாக யாரும் நினைத்துவிட வேண்டாம். குழந்தை பெறும்முறையையே அடியோடு தடுக்க முயன்றால் அது உலகுக்கு நாசகாலமேயாகும். நல்ல திடகாத்திரமுள்ள வீரர்கள் எப்பொழுதும் நாட்டிற்குத் தேவை. இத்தகைய வீரக் குழந்தைகளைப் பெறாத நாடு கீழ் நிலையையடையும் என்பதில் ஐயமில்லை. ஆகையால், நாட்டின் தேவைக்கு, மக்கள் அனைவரும், வறுமையின்றிச் சண்டைச் சச்சரவுகளின்றிச் சுகமாக வாழ்வதற்கு எவ்வளவு பிரஜைகள் தேவையோ, அந்த அளவுக்கு எப்பொழுதும் ஜனன விகிதம் இருந்தாக வேண்டும்.

முதலில் வியாதியுள்ள ஆண் பெண்கள் பிள்ளைப் பேறில்லாமல் இருப்பதே மேன்மையாகும். அவர்களுக்குள்ள வியாதி அவர்கள் மக்களுக்கும் பரவ, அவ்வியாதி அவர்களோடு சம்பந்தமுடைய மற்றவர்களுக்கும் பரவ, இவ்வாறே ஜன சமூகத்தில் பரவித்துன்பஞ் செய்கிறது. ஆகையால், வியாதியஸ்தர்கள், பலஹீனர்கள், பிள்ளை பெறாமல் இருப்பதே தேசத்திற்குச் செய்யும் பணியாகும்.

மற்றவர்களிலும் குழந்தைகள் பெறுவதில் ஒரு வரையறை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். சாதாரணமாக ஒவ்வொரு மண மக்களும் மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறுவதில்லை என்று ஏற்படுத்திக் கொண்டால் போதுமானதாகும். அதற்கு மேல் அவர்கள் கருத்தடை முறைகளை அனுசரிப்பது நன்மையாகும். இவ்வாறு செய்தால் தற்போதுள்ள ஜனத்தொகையில் குறைவு ஏற்படாது. இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தான், இங்கிலாந்திலும், "மூன்று குழந்தைகள் வரையிலும்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க,

ஏஜண்டுகள் தேவை

நமது பத்திரிகைக்குக் கீழ்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

சேலம்.
திருப்பூர்.
பொள்ளாச்சி.
உடுமலைப்பேட்டை.
தஞ்சாவூர்.
கள்ளிக்கோட்டை.
திருவனந்தபுரம்.
ஜோலார்ப்பேட்டை.
நன்னிலம்.
பரமக்குடி.
கரூர்.
திருமங்கலம்.

பிரிண்டர் அண்டு பப்ளிஷர்
“குடி அரசு” ஈரோடு.

குடி அரசு.

ஈரோடு 1932 மார்ச்சுமீ 6-உ

மத உரிமையின் ஆபத்து.

இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் கொடுப்பதற்கு வேண்டிய திட்டங்களை ஆலோசித்து முடிவுசெய்ய பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும், மூன்று கமிட்டிகளில் ஒன்றாகிய ஆலோசனைக் கமிட்டியின் கூட்டம் சில நாட்களாகப் புது டில்லியில் நடைபெற்று வருகின்றது. அக் கமிட்டியில் அரசியல் சீர்திருத்தத்தில் சேர்க்கவேண்டிய அடிப்படையான உரிமைகளைப்பற்றி ஆலோசனை செய்துவருகின்றனர். அவர்கள் முடிவுசெய்து ஒப்புக்கொண்டிருக்கும் உரிமைகளாலும், அத்தகைய உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சீர்திருத்தத்தாலும் நமது நாட்டின் ஏழைமக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதிகமான நன்மையுண்டாகப்போவதில்லை யென்றுதான் நாம் துணிந்து கூறுகிறோம். இவ்வாறு நாம் கூறுவதற்குரிய காரணங்களை ஆராய்வோம்.

“எந்த சமஸ்தானமாயினும், மாகாண ஆட்சிக்கு உட்பட்டதானாலும், ஐக்கிய ஆட்சிக்குள் அடங்கியதானாலும், அவ்விடங்களில் சர்க்கார் மதமென்பது ஒன்று இல்லை என்று அறிக்கையிடவேண்டும்” என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்தபடியாக மத சுதந்தரம், பொது ஜனங்களின் பழக்க வழக்கங்கள் முதலிய உரிமைகளுக்குச் சம்மதம் அளிக்கிறது” என்பதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவ்விரு தீர்மானங்களால் இதுவரையிலும் நமது நாட்டு மக்கள் எந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்களோ அந்த நிலையில்தான் அரசியல் சீர்திருத்தம் பெற்றபின்னும் இருந்து தீரவேண்டும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

உண்மையிலேயே ஒரு நாட்டு மக்கள், ஜாதி பேதங்கள் இல்லாமல், ஏழை பணக்கார வித்தியாசங்கள் இல்லாமல், தொழிலாளி முதலாளிக் கொடுமைகள் இல்லாமல், குடியானவன் நிலச்சுவான்தார் வித்தியாசமில்லாமல், உயர்ந்தவன் தாழ்ந்தவன் வித்யாசமில்லாமல், சமத்துவமும், சகோதரத்துவமும், சுதந்தரமும் பெற்று வாழவேண்டுமானால், முதலில் மதங்களும், தனித்தனிப் பழக்கவழக்கங்களும் ஒழிந்தாகவேண்டும். இவ்வாறு மக்களைப் பிரித்துவைத்துக் கொடுமைப்படுத்துவதற்குக் காரணமான மதங்களையும், அவைகளிலிருந்து முளைத்த பழக்க வழக்க வேறுபாடுகளையும் அரசாங்கமே தைரியமாக முன்வந்து ஒழிக்கவேண்டும். இப்படியில்லாமல், “அரசாங்கத்திற்கு எந்த மதமும் இல்லை” என்று சொல்லுகின்ற அரசாங்கமாயிருந்தாலுஞ் சரி, “நாங்கள் மதத்தில் தலையிடமாட்டோம்” என்று சொல்லுகின்ற அரசாங்கமாயிருந் சரி, “ஒவ்வொரு மதங்களுக்கும், கலைகளுக்கும், நாகரீகங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும்” என்று சொல்லுகின்ற அரசாங்கமாயிருந்தாலுஞ் சரி, சமதர்மக் கொள்கையுள்ள சீர்திருத்தங்கள் எவையும் செய்யமுடியாது. இந்த மாதிரியான கொள்கையுள்ள அரசாங்கங்கள் ஏகநாயக அரசாங்கமானாலும், அல்லது குடியேற்ற நாட்டு அந்தஸ்துள்ள அரசாங்கமானாலும் அல்லது ஐக்கிய அரசாங்கமானாலும், அல்லது பூரண சுயேச்சை அரசாங்கமானாலும், இவைகளால் நாட்டில் உள்ள ஏழை மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், சுதந்தரமற்ற மக்களுக்கும் கடுகளவாவது நன்மையுண்டாகப் போவதில்லை.

எந்த அரசாங்கமாக இருந்தாலுஞ் சரி, அதாவது ஏகநாயக அரசாங்கமானாலும் அல்லது ஜனநாயக அரசாங்கமானாலும், அது தேசமக்கள் எல்லோரையும் மக்களாகவே கருதி, அவர்களுக்குள் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் ஆகியவைகள் நிலைத்திருக்கச் செய்வதையேநோக்கமாகக்கொண்டிருக்கவேண்டும். இந்தசமத்துவம், சகோதரத்துவம் சுதந்திரம் ஆகியவைகள்வளர்வதற்குத் தடையாக இருப்பவை மதமானாலும், பொருளானாலும், ஜாதியானாலும், வேதமானாலும், நாகரீகங்களானாலும், பழக்க வழக்கங்களானாலும், கடவுள் ஆனாலும், மற்றும் எவையானாலும் அவைகளைச் சட்டங்களின் மூலம் அடியோடு ஒழிக்கப் பின்வாங்காத அரசாங்கமாக இருக்கவேண்டும். இத்தகைய அரசாங்கத்தினால்தான் தேசமக்கள் எல்லோருடைய சுயமரியாதையையும் காப்பாற்ற முடியுமென்பதில் ஐயமில்லை.

இப்படியில்லாமல், அரசாங்கத்திற்கு மதமில்லை” என்றுமாத்திரம் ஒப்புக்கொண்டு “மத சுதந்தரம், பொது ஜனங்களின் பழக்க வழக்கங்கள் முதலிய உரிமைகளுக்குச் சம்மதமளிக்கிறது” என்ற கொள்கையை உடைய ஐக்கிய ஆட்சி அரசாங்கத்தால் என்ன நன்மை ஏற்பட்டுவிட முடியும் என்று கேட்கிறோம். இந்தக் கொள்கையை அடிப் படையாகக் கொண்டுள்ள அரசாங்கம், கல்யாணம், சிரார்த்தம், கருமாதி முதலிய பல பெயர்களால் பார்ப்பனரல்லாதார்களிடமிருந்து செல்வத்தைச் சுரண்டுவது எங்கள் மதம் ஐந்து வயதுப் பெண் குழந்தையை அறுபது வயதுக் கிழவனுக்கு மணஞ் செய்து கொடுத்து, அன்றைக்காவது, அல்லது மறு நாளிலாவது, மறு மாதத்திலாவது, மறு வருஷத்திலாவது தாலியறுக்க வைப்பதும், இவ்வாறு தாலியறுத்த பெண்களை மொட்டையடித்துக்கைம் பெண்களாக ஆயுள் முழுதும் இருந்து துன்புறும்படி வைப்பதும்தான் எங்கள் மதம், கோயில்கள் என்பவைகளில் உள்ள குழவிக்கல்லுகளுக்கும், பொம்மைகளுக்கும், ஏராளமாக செல்வங்களைப் பாழ்பண்ணிவிட்டு மக்களுடைய உழைப்பையும், செல்வத்தையும் காலத்தையும் பயனற்ற வழியில் செலவிடுவதுதான் எங்கள் மதம், இவ்வாறுள்ள கோயில்களின் செல்வங்களைப் பார்ப்பனர்கள்தான் தின்று கொழுக்கலாம். இக்கோயில்களுக்குள் உயர்ந்த ஜாதி இந்துக்கள்தான் போகலாம், தாழ்த்தப்பட்டவர்கள் போகக்கூடாது என்று ஏற்பட்டிருப்பதுதான் எங்கள் மதம்; ஆண்களுக்குத்தான் சொத்துரிமையுண்டு; பெண்களுக்கு எந்த வகையிலும் சொத்துரிமையில்லை, என்பதுதான் எங்கள் மதம்; ஆண்கள் எத்தனை கல்யாணம் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம், பெண்கள் இவ்வாறு செய்துகொள்ளக்கூடாது, கணவன் இறந்துவிட்டாலும் விதவையாகத்தனித்திருந்தே உயிர்வாழ வேண்டும் என்ற ஏற்பாடுதான் எங்கள் மதம், என்று சொல்லுகின்ற மதச் சுதந்தரங்களுக்கு எல்லாம் உரிமை கொடுத்து ஆக வேண்டுமல்லவா?

உயர்ந்த ஜாதி இந்துக்களின் பிள்ளைகளும், தாழ்ந்த வகுப்பினரின் பிள்ளைகளும், ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பது மதச் சுதந்தரத்திற்கும், பழக்க வழக்க சுதந்தரங்களுக்கும் விரோதம், உயர்ந்த வகுப்பினர் தண்ணீர் எடுக்கும், கிணறு, குளங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தண்ணீர் எடுப்பது பழக்க வழக்க சுதந்தரத்திற்கு விரோதம், உயர்ந்த வகுப்பினர்கள் வசிக்கும் தெருக்களில் தாழ்ந்த வகுப்பினர் நடப்பது பழக்க வழக்க சுதந்தரங்களுக்கு விரோதம்; உயர்ந்த வகுப்பினர் பார்க்கும்படி, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் படிப்பதும், நல்ல வேஷ்டி கட்டுவதும், சட்டை போடுவதும், கிராப்பு வைப்பதும், காலில் செருப்பணிவதும், குடை பிடிப்பதும், பெண்கள் மார்பில் துணி போடுவதும் பழக்க வழக்க சுதந்தரங்களுக்கு விரோதம்; என்று கூறி வைதீகர்களும், ஜாதி இறுமாப்புக் கொண்டவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களைக் கொடுமைப்படுத்த மேற்கூறிய உரிமை இடங் கொடுக்கின்றதல்லவா? ஆகையால், மத நடு நிலைமையும், மதம், பழக்க வழக்கம் ஆகிய சுதந்தரங்களுக்கு உரிமையும் வழங்கும் ஆட்சியில் ஏழை மக்களுக்கு ஒரு பயனும் ஏற்படப் போவதில்லையென்று நிச்சயமாகக் கூறலாம்.

இன்னும் ஆலோசனைக் கமிட்டியில் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் வேண்டுகோளுக்கு இணங்கி மற்றொரு தீர்மானமும் செய்யப்பட்டிருக்கிறது. அது “குடிமக்கள் தங்கள் நகர உரிமைகளை அனுபவிப்பதற்குத் தடையாக எத்தகைய பழக்க வழக்க வித்தியாசங்கள் ஏற்படுவதாயினும்

அவைகள் சட்ட விரோதமானவை எனத் தீர்மானிக்க வேண்டும்" என்பதாகும்.

முதலில் மதம், பழக்க வழக்கம் ஆகிய சுதந்திரங்களுக்கு உரிமை கொடுத்து விட்டு மேற்கூறியவாறு தீர்மானிப்பதில் என்ன அர்த்த மிருக்கிறது. முதலில் கூறிய தீர்மானத்தை அரசாங்கம் நடத்தி வைப்பதா? அல்லது இரண்டாவது செய்யப்பட்டுள்ள தீர்மானத்தை அரசாங்கம் நடத்தி வைப்பதா? என்று யோசித்துப் பாருங்கள்! வரப்போகின்ற அரசாங்கத்தில் பெரும்பாலும் ஆதிக்கமும், அதிகாரமும் செலுத்தப் போகின்ற பணக்காரர்களும், வைதீகப் பித்தர்களும், ஜாதி இறுமாப்புக்கொண்டவர்களும் "மதம் பழக்க வழக்க சுதந்திரங்களுக்கு உரிமை கொடுக்கும்" தீர்மானத்தை நடை முறையில் வைத்திருப்பார்களா? அல்லது "குடிமக்கள் தங்கள் நகர உரிமைகளை அனுபவிக்கத் தடையாக இருக்கும் பழக்க வழக்க வித்தியாசங்களைத் தடுக்கும்" தீர்மானத்தை நடைமுறையில் வைத்திருப்பார்களா? என்று யோசனை செய்து பாருங்கள்! ஆகவே இரண்டாவது செய்யப் பட்டிருக்கும் தீர்மானம் தாழ்த்தப் பட்டவர்களுக்கு வெறும் வாய்ச்சமாதானம் கூறுவதற்குப் பதிலாகவே செய்யப் பட்டிருக்கிறதென்று தான் சொல்லலாம்.

இன்னும் "தர்மஸ்தாபனங்கள், மதஸ்தாபனங்கள், சமூக ஸ்தாபனங்கள், கல்விஸ்தாபனங்கள் முதலியவற்றைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் தங்கள் சொந்தச் செலவில் அமைத்து அந்த ஸ்தாபனங்களில் தங்கள் சொந்த மதங்களையும், தங்கள் சொந்த பாஷைகளையும் அநுஷ்டிக்க அவர்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்கிறது" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இத்தீர்மானம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்குச் செய்யப் பட்டிருப்பது போலக் காணப்படுவதாயினும் இத்தகைய உரிமை மற்ற உயர்ந்தவகுப்பினர்களுக்கும்இல்லாமலில்லை. எந்த வகுப்பினர்களுக்கும் இத்தகைய உரிமை உண்டு. ஆகவே இதுவும், "மதங்கள், பழக்கவழக்க சுதந்திரங்கள்" ஆகியவைகளுக்குஉரிமைகொடுக்கும்தீர்மானத்தைப் போன்றதேயாகும். இத்தீர்மானம், இன்னும் மக்களின் ஒற்றுமைக்குத் தடையாக இருக்கின்ற மதங்களையும், நாகரிகங்களையும் நிலைத்திருக்கும்படி செய்வதற்குத் துணை புரியக் கூடியதே யாகும்.

இவ்வாறு ஒவ்வொரு தனிப்பட்ட வகுப்பினரும் தங்கள் தங்கள் மதம், கலை, பழக்க வழக்கங்கள் இவைகளைக் காப்பாற்றிக் கொள்ள உரிமையளித்து விட்டு, "அரசாங்க ஆதரவு பெற்ற பள்ளிக்கூடங்களில் எல்லோரையும் சேர அனுமதிக்க வேண்டும், ஜாதி, மதம், சமூகம், பிறப்பிடம் முதலியவற்றைக்கொண்டுதடைப்படுத்தக்கூடாது" என்றுதீர்மானித்திருப்பதில் என்ன பயனுண்டு? தனித்தனி ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையிருக்கின்றதால், உயர்ந்தசாதிக்காரர்கள், அரசாங்க ஆதரவு பெற்ற ஸ்தாபனங்களில் தாழ்த்தப்பட்டவர்களை யெல்லாம் சேர்க்கப்படும்பொழுது தாங்கள் அதை பகிஷ்கரித்து விடுவார்கள். ஏனென்றால் ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள மதப் பித்தர்கள், தங்கள், மதம், பழக்க வழக்கங்களைக் காப்பாற்ற எப்படியேனும் தனி ஸ்தாபனங்களை ஏற்படுத்தாமல் இருக்கமாட்டார்கள். இவ்வாறு தனிப்பட்ட ஸ்தாபனங்கள் அதிகமாக ஏற்படுகின்றபோது அரசாங்க ஆதரவு பெற்ற கல்வி ஸ்தாபனங்களின் எண்ணிக்கைக்குறையும்என்பதில் ஐயமில்லை. ஆகவே இவைகளைக் கொண்டு தாழ்த்தப் பட்டவர்கள் பெரிய பயனைப் பெறமுடியாது என்று சொல்லுகிறோம். ஆனாலும் சிறிதளவாவது நன்மை தரக் கூடிய இத்தீர்மானத்தை நாம் வரவேற்கிறோம்.

இது நிற்க, இனி எந்த மாதிரியான தீர்மானம் நிறைவேற்றப் பட்டாலுங்கூட அவைகளெல்லாம் பெரிய நன்மையைஅளித்துவிடாது என்று சொல்லுகிறோம். ஏனென்றால் மதம், பழக்கவழக்க சுதந்திரம் முதலியவைகளுக்கு உரிமையளிக்கின்ற வரையிலும், அரசாங்கத்திற்கு மதம் இல்லையென்று சொல்லிக்கொண்டுமதத்தில் தலையிட மறுக்கின்றவரையிலும், நமது நாட்டில் சமதர்மம் பரவ முடியாது என்பதில்கொஞ்சமும் சந்தேகமில்லை.

ஆயினும், "ஒவ்வொரு மதங்களுக்கும், கலைகளுக்கும், நாகரீகங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதையும், எந்தத் தனி வகுப்பினர்களுக்கும் தனிச் செல்வாக்கு இல்லாமலும்" உள்ள சுயராஜ்யம் வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிற காங்கிரசைக் காட்டிலும், வட்ட மேஜை ஆலோசனைக்கமிட்டியாரால் செய்யப்படும் முடிவுகள் சிறிதளவு நன்மையானவைகளாயிருக்கிறதென்றே நாம் கருதுகின்றோம். "தாழ்த்தப் பட்டவர்களுக்குப் பொது ஸ்தாபனங்களில் அவர்களுடைய பங்குக்கேற்றவாறு உரிமையளிக்க வேண்டும்" என்பன போன்ற சில தீர்மானங்கள் அவர்களுக்கு நன்மையளிப்பனவாகும். இந்தச் சிறிய சாதகத்தைக் கொண்டு அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் தங்கள் கையை பலப்படுத்திக் கொண்டு, சிறிதளவாவது முன்னேற்றமடைய வழியிருக்கிறது என்பதனால் கொஞ்சம் திருப்தியடைய வேண்டியிருக்கிறது. தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஒரு சிறிதும் பாதுகாப்பு அளிக்க விரும்பாத காங்கிரஸ்காரர்களைக் காட்டிலும், ஆலோசனைக் கமிட்டியார் ஓரளவு சாதகமான காரியங்களுக்கு இடங்கொடுத்திருக்கிறார்கள் என்று மகிழ்ச்சி யடைகிறோம்.

இவைகளை யெல்லாம் ஆலோசிக்கும் போது சீர்திருத்தக்காரர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய விஷயமென்ன? அவர்கள் பிரசாரத்தின் மூலம் மக்களுடைய மனத்தில் மாறுதல் உண்டாக்குவதனால் தான், ஜாதிமதப் பழக்க வழக்கங்களை ஒழிக்க முயலவேண்டியதிருக்கிறதே யொழிய தற்கால அரசாங்க அமைப்பைச்சாதகமாகக் கொண்டு ஒன்றுஞ்செய்ய முடிவதற்கில்லை என்பதே. இத்தனை காலமாக பிரிட்டிஷ் அரசாங்கமும், "நாங்கள் மதத்தில் தலையிடுவதில்லை" என்ற பல்லவியைப் பாடிக் கொண்டே சீர்திருத்தங்களைச் செய்வதற்கு முன் வராமலிருந்தது, காங்கிரஸ் கேட்ட சுயராஜ்யமும் இதைவிட மோசமானதாகத்தானிருந்தது. இப்பொழுது நடைபெறும்வட்டமேஜைஆலோசனைக் கமிட்டியின் தீர்மானங்களை ஆராயும் போதும் வரப்போகும் ஐக்கிய ஆட்சியும் இப்படித் தானிருக்குமென்று தெரிகின்றது.

ஆதலால் எந்தச் சுயராஜியம் வந்தாலும், படித்தவர்களும், பணக்காரர்களும், உத்தியோகம், பட்டம், பதவி முதலியவைகளைப் பெற்று ஏழை மக்களின் பொருளைச் சுரண்டுவதற்குத் தான் துணை செய்யுமே ஒழிய மற்றபடி, ஜாதி மத உயர்வு தாழ்வுக் கொடுமைகள் ஒழிந்து, நாட்டு மக்களனைவரும் சமத்துவம் சகோதரத்துவம், சுதந்திரம் பெற்று வாழமுடியாது என்பதைத் தான் கூறுகிறோம். உண்மையில் நமது நாட்டு மக்கள் சுயமரியாதை பெறவேண்டுமானால், ஜாதி மதம் பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழித்து எல்லோரையும் ஒன்று படுத்தக் கூடிய ஆட்சி தான் தேவையென்பதை எடுத்துக் காட்டி முடிக்கிறோம். அது குடிஅரசானாலும், முடிஅரசானாலும் அல்லது வேறு எந்த அரசானாலும் சரி.

பாராட்டுகிறோம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறவும், தங்கள் உரிமையையும், சமத்துவத்தையும் பெற, அவர்கள் போதிய கல்வியறிவு பெற்று உலக ஞானமறிந்து தங்கள் இழிவான நிலையைத் தாங்களே உணர வேண்டுமென்பதை நாம் பன்முறையும் கூறி வருகிறோம். அத்தகைய அவர்களது நிலையை அறிய அவர்கள் எல்லோரும் ஏனையோரைப் போலவே கல்வி கற்று அறிவு வளர்ச்சிபெற வேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும். அவ்விதமே அவர்கள் கல்வி கற்க முற்படினும் அவர்களுக்கு அதனால் ஏற்படும் கஷ்டங்களும், இன்னல்களும் எதிர்ப்புகளும் எண்ணிறந்தன. அத்தகைய பல இடையூறுகளில் பொருளின்மை தலை சிறந்ததென்னலாம். தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்ற பேரவா பல பெற்றோர்க்கு இருந்த போதிலும் போதிய பணமின்மையால் அவர்களது புஸ்தக வகைக்கோ, அல்லது துணி மணிகளுக்கோ வேண்டியன கொடுத்துதவ முடியாமையால் பிள்ளைகளின் படிப்பில் கவலை செலுத்தாத பெற்றோர்கள் அனேகர் உண்டென்பதும் நமக்குத் தெரியும். அத்தகைய அவர்களது குறை நீக்கப் பட்டதிற்கொப்ப திருச்சி ஜில்லா லால்குடியில் உள்ள போர்டு ஸ்கூல் ஆதி திராவிட மாணவர்களின் உபயோகத்திற்காக ரூபாய் 10000 நன்கொடை யளித்த ராவ் பகதூர் சபாரத்னம் செட்டியாரவர்களது தயாள குணத்தைப் பற்றிச் சென்ற வாரம் ஒரு செய்தி பிரசுரிக்கப் பட்டது நேயர்களறிந்ததே. பெருந்தனிகரான சபாரத்னமவர்கள் ஏழை ஆதிதிராவிட மாணவர்களுக்கு உதவி செய்ய முன்போந்தது அவரது தயாள சிந்தையையும் தெள்ளிதில் விளக்குகின்றது. ஷ தொகையானது ஷ மாணவர்களது சாப்பாட்டு வசதிக்காக உபயோகிக்கப்படுமென்பது கேட்டு மகிழ்ந்தோம். மிகவும் தாராள சிந்தையுடன் பொருளீந்துதவிய திரு. சபாரத்னம் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

காலம் கலிகாலம்!

(ஸ்க்குரூஉ லூஸ்)

"காலம் கலிகாலம் ஆயிற்று; ஆகையால் தான் கருப்புக் கோழி வெள்ளை முட்டையிடுகிறது" என்று சாதாரணமாகப் பேசிக் கொள்ளுவார்கள்: இது பரிகாசமாகப் பேசும் வார்த்தை இதில் பொருளில்லாமல் இல்லை. இதிலும் ஒரு உண்மைப் பொருள் மறைந்திருக்கிறது. காலம் எந்தக் காலத்திலும் ஒன்று தான். காலத்தில் ஒன்றும் வித்தியாசமில்லை; என்ற கருத்தைத் தான்இது கற்பிக்கிறது. "கலிகாலத்தில் எல்லாம் தலை கீழாக மாறிப்போயிற்று" என்று பிதற்றுகிறவர்களுக்குச் சரியான பதிலே இந்தப் பழமொழி. அவர்கள்வாயை அடக்க இந்த ஆப்பு போதுமானதாகும்.

சென்ற யுகங்களில், கருப்புக் கோழி கருப்பு முட்டை யிடவில்லை; வெள்ளைக் கோழி மாத்திரம்வெள்ளை முட்டை யிடவில்லை; சிகப்புக்கோழி சிவப்பு முட்டையிட வில்லை; எல்லாக் கோழிகளும் வெள்ளை முட்டைதான் இட்டன. அதைப் போலவேதான் இந்தக் காலத்திலும் ஒரே மாதிரியாக இருக்கின்றன; என்பதுதான் இதன் அர்த்தம்.

இப்படியிருக்க, கலிகாலம் கெடுத்து விட்டது என்று சொல்லுவதில் என்ன அர்த்த மிருக்கிறது. பண்டைக்காலத்தில் காலால் நடந்தமனிதர்கள் இப்பொழுது தலையால் நடக்கிறார்களா? கையாலாகாதவர்கள் தான் காலத்தைக் குறை கூறுவார்கள்; சோம்பேரிகள் நாளையும் கிழமையையும் நலிந்து கொள்ளுவார்கள் அறிவாளிகளுக்கு - ஊக்கமுள்ளவர்களுக்கு-தன்னம்பிக்கை யுள்ளவர்களுக்கு, காலமில்லை! நாளில்லை; கிழமையில்லை; எல்லாம் ஒன்று தான்.

சென்ற யுகங்களில் மக்கள் எல்லோரும் அறிவுடையவர்கள் அல்லர்; அவர்கள் செம்மறியாடுகளைப் போலத் தான் இருந்தார்கள். செம்மறியாடுகளைப் போல என்றால், நீங்கள் வேறு விதமாக அர்த்தம் பண்ணிக் கொள்ளாதீர்கள்; "குரங்கில் இருந்து மனிதன் உற்பத்தியானான்" என்பது அறிஞர் டார்வின் என்பவர் கொள்கை என்பதை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்! இல்லாவிட்டால்நமது நண்பர் தோழர், சிங்காரவேலு அவர்களிடம் தெரிந்து கொள்ளுங்கள்! இதற்கு "டார்வின் தியரி" என்று பெயர். இதைப் போல நான் சொல்லுவதையும் "ஸ்க்குரூஉ லூஸ்" தியரி என்று நினைத்து விடாதீர்கள். ஆடுகளைப் போல என்றால், சொந்த புத்தியில்லாமல், ஒருவர் போன வழியே எல்லோரும் போதல் ஆகும். ஆகையால் தான் அவர்களைச் செம்மறியாடுகளுக்கு ஒப்பிட்டேன்.

யாராவது சில சுயநலக்காரர்கள்-ஏமாற்றுக்காரர்கள்-அதாவது புத்திசாலிகள், கொஞ்சம் சாமர்த்தியமான காரியங்களைச் செய்து காட்டினால் போதும்; அப்பொழுதே, அந்த நோக்கிலேயே, அந்த க்ஷணத்திலேயே பாமர மக்கள் அவர்களைச் சரணம் அடைந்து விடுவார்கள். அவர்களை தெய்வங்களாக எண்ணி விடுவார்கள். இவ்வளவு இருந்தால் போதாதா? உடனே அந்த மாயக்காரர்கள் வைத்தது தான் சட்டம். எல்லாரும் அவர் கூறிய வழியில் நடக்கத் தயார், இதனால் தான் "வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் பெரியவழக்கிற்கு இழுக்கும் உண்டோ" என்று ஒருவர் பாடினார். அவர் தாயுமானார். ஆகவே அவர் காலம் வரை மக்கள் ஏமாற்றப்பட்டு வந்தனர் என்று தெளியலாம்.

ஆனால் இப்பொழுது இன்னொருவர் சொன்னதை அப்படியே கேட்க எவன் முன் வருகிறான்? ஒவ்வொருவருக்கும் கொஞ்சம் சொந்த புத்தி வந்து விட்டது. எதையும் கொஞ்சம் யோசனை பண்ணக்கூடிய திறமையும் வந்து விட்டது. இந்த நிலையில் வல்லான் வகுத்த வாய்க்கால்களில் பயனற்றவை தூர்ந்து போக போக வேண்டியது தானே, அந்த வாய்க்கால் இழுக்கடைய வேண்டியது தானே?

"உலகத்தில் உள்ள எல்லாச் சொத்துக்களும் பார்ப்பானுக்கு உரியது. ஆகையால் பார்ப்பான் யாருடைய எந்தப் பொருளை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அதைத்தடுக்கக் கூடாது, தடுத்தால் பாவம்" என்று மநு நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நீதியை இப்பொழுது அநுசரிக்க முடியுமா? யாரிடத்திலாவது இதைச் சொல்லி இந்த மாதிரி செய் என்றால் சம்மதிப்பாரா? இந்த நீதியைச் சொல்லிக் கொண்டு ஒரு பார்ப்பான் நம்முடைய சட்டைப்பையில் கை போட்டால் நாம் சும்மாயிருப்போமா? எட்டிக் கன்னத்தில் அறைய மாட்டோமா? அவனுடைய பற்கள் கொட்டிப்போகுமல்லவா?

மேற் கூறியநீதியைவிளக்கக்கதைகளும் எழுதிவைத்து விட்டார்கள், எப்படியும் பார்ப்பனர்கள் கெட்டிக்காரர்கள்தான். நம்முடைய மண்டுகள் இருக்கின்றனவே அவைகளைப் போல அல்ல, அவர்கள் எம். ஏ. பி. ஏ., எம். எல். பி. எல். முதலிய பட்டம் பெற்றவர்களும்கூட பார்ப்பான் சொல்லும்சடங்குகளையும், சொர்க்க, நரகங்களையும் கட்டி அழுதுகொண்டுதானே கிடக்கின்றன. அவனுக்கு இவைகளால் பொருள் லாபம்உண்டு, நமக்கு இவைகளால் நஷ்டம் வருகிறதே என்று யோசனை தோன்றினால் நமது மண்டுகள் பார்ப்பானுக்கு ஏமாறுமா? இதிருக்கட்டும், வெகுசாமர்த்தியமாகப் பார்ப்பார்கள் என்று கதைகட்டிவிட்டார்கள் என்றேனே அதைச்சொல்லிவிடுகிறேன். பெரிய புராணத்தில் இயற்பகைநாயனார்என்பவர் தன் பெண்சாதியைக்கூட்டிக் கொடுத்த கதை வருகிறது. ஒருபார்ப்பன சந்நியாசி வந்து கேட்டாராம்; தடையில்லாமல் கூட்டி அனுப்பினாராம், நாயனார் பார்ப்பனரல்லாதார்; வந்தவன் பார்ப்பனன், இதுதான் மநுநீதி, மநுநீதியை ஸ்திரப்படுத்துவதுதான் இக்கதை. இதை நமது சைவ அசடுகள் கட்டிக்கொண்டு அழுகின்றனவே, இதற்குத்தத்துவார்த்தங்கள் கூறித்திரிகின்றனவே என்னபரிதாபம் இப்படியிருந்தால் ஏன் பார்ப்பான் ஏறிமேயமாட்டான்?

இதுகிடக்கட்டும் இந்தக்கதையைச்சரித்திரமென்று நம்பிக்கொண்டிருக்கும் தற்காலச் சைவப்பெரியார்களிடம் ஒரு பார்ப்பான் போய் 'உன் மனைவியை என்னுடன் அனுப்பு' என்று கேட்டால் கூட்டி அனுப்புவானா? இம்மாதிரிகேட்டால் அவனுக்கு என்னவரும்? உடனே சுயமரியாதை வந்துவிடும்; அவன் கண்டுபயப்படுகின்ற சுயமரியாதை, நாஸ்திகத்தைப்பரப்புவது என்று அவனால் வெறுக்கப்படுகின்ற சுயமரியாதை, அவனிடம் தானாகவே வந்துவிடும். மனைவியைக்கொடு என்று கேட்டவனை படாதபாடுபடுத்திவிடுவான், கோர்ட்டில் மான நஷ்டவழக்குத்தொடுக்கவும் பின்வாங்கமாட்டான். நான் சொல்வது உண்மையல்லவா?

இப்பொழுது வல்லான் வகுத்த வாய்க்கால் எங்கே? வல்லான்வகுத்த வாய்க்காலின் வழியே போவதென்றால் உடனே பார்ப்பானுக்குத்தன் மனைவியைக்கூட்டிக்கொடுக்க ஏதேனும் ஆட்சேபிக்கலாமா? ஆட்சேபிக்காமலிருப்பதுதான் புராணமரியாதை, ஆட்சேபித்தால் சுயமரியாதைதான் இதற்குச்சந்தேகமில்லை. இதன்படி எந்தச்சைவன் தனது உண்மையான புராணமரியாதையைக் காப்பாற்றத்தயாராயிருக்கிறான் என்றுகேட்கிறோம்.

'பார்ப்பானுக்கு உலகப்பொருள்கள்யாவும் சொந்தம்' என்ற மநு நீதியை மக்கள் நம்பிக்கொண்டிருந்த காலமெல்லாம் புண்ணிய யுகங்கள். இதை நம்பாமலிருக்கின்ற காலம் கலிகாலம். இதுதான் பார்ப்பனர்கள் காலத்தைக் குறைகூறுவதற்குக் காரணம். அந்தக்காலத்தில் பார்ப்பான் இந்த அதர்ம நீதியை வைத்துக்கொண்டு எவ்வளவு காரியங்கள் பண்ணியிருப்பான்? எவ்வளவு அட்டகாசங்கள் புரிந்திருப்பான்? எவ்வளவு ஆதிக்கங்கள் புரிந்திருப்பான்? என்று யோசித்துப்பாருங்கள்! இந்த நிலையை உலகத்திலுள்ள எல்லோரும் ஒப்புக்கொண்டு பார்ப்பானுக்கு இடங்கொடுத்துவிட்டால் போதாதா? பிறகு அவன் சேவல் கோழிதான். ஊரெல்லாம் மேயத்தொடங்கிவிடுவான். பொலிகாளையாகவும் விளங்குவான், கோயில்காளையாகவும் திரிவான் இதில் சந்தேகமில்லை. இப்படித்தான் முன்காலத்உலும் திருந்திருக்கிறான் என்று நினைக்க வேண்டியிருக்கிறது, இல்லாவிட்டால் 'பார்ப்பான் எந்தச்சாதியில் வேண்டுமானாலும் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம்' 'பார்ப்பான் சூத்திரஸ்திரீயிடம் பிள்ளைபெற்றால் அவனுக்குப் பார்ப்பான் சொத்தில் பாத்தியமில்லை' என்ற நீதிகள் ஏற்பட்டிருக்குமா? இன்றும் மலையாளத்தில் பார்ப்பான் ஆதிக்கம் செலுத்துகிறானே. நாயர் வீட்டுப்பெண்களைத்தம் விருப்பப்படி ஆளுகிறானே. இதை அவர்கள் புண்ணியகாரியமாகத்தானே கருதுகிறார்கள். அதை இன்றும் மாற்றமுடியவில்லையே, ஆனால் இந்தமாதிரி தென்னாட்டில் அதாவது நமது தமிழ்நாட்டில் செய்யமுடியாது என்பது நிச்சயம். எந்த வைஷ்ணவ பக்தர்களும் சைவப்பெரியார்களும் இடங்கொடுக்கமாட்டார்கள். ஆகையால் புத்தியுள்ளவர்களுக்குயோசனையுள்ளவர்களுக்குக் காலத்தினால் ஒன்றும் கெடுதிவந்துவிடாது. வீண்சோம்பேரிப்பேச்சுவேண்டாம். எல்லாம் நடக்கின்றபடி நடக்கட்டும் என்று பேசாமல் இருக்கவேண்டாம். உழையுங்கள்! உழையுங்கள்! யோசியுங்கள் யோசியுங்கள்! என்றுதான் சொல்லுகிறோம்.

அந்தக்காலத்தில் அதாவது கலியுகமல்லாத காலத்தில் சாமிகள், கடவுள்கள் என்னென்னவோ செய்தனவென்றெல்லாம் கதை கூறுகின்றார்கள். கதையெழுதிவைத்திருக்கின்றார்கள். பக்தர்களிடம் நேரே வந்தனவாம்: பேசினவாம்; பக்தர்களுக்காகச்சண்டைபோட்டனவாம்; ஆனால் இப்பொழுது அவைகள் எங்கே என்றால் உடனே 'கலிகாலம்' என்ற சமாதானம் சொல்லுகிறார்கள்.

இதைக்கேட்டவுடன் நாம் சிரிக்காமல் என்ன செய்கிறது? ஓ! கோ! கோ! சாமிகள் கூடவா கலிகாலத்தைக்கண்டு மறைந்துவிட்டது என்றால் கலிகாலத்தில் தர்மம் குறைந்துவிட்டது; அதர்மம் மிகுந்துவிட்டது ஆகையால் தெய்வங்களும் மறைந்துவிட்டன என்று சொல்லுகிறார்கள். ஏன் அந்தத்தெய்வங்களுக்கு அதர்மத்தை அடக்கி தர்மத்தை நிலைநிறுத்த முடியவில்லை என்று கேட்கிறோம்.

மனிதர்கள் செய்யும் அக்கிரமத்தைக்கண்டு பயப்படுகிற இந்தச்சாமிகள் நமக்கு என்னதான் செய்ய முடியும்? நாம் இவைகளை ஓட ஓட விரட்டலாம் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால், நம்மை வறுமையிலும் துன்பத்திலும் ஈடுபடாமல் காப்பாற்ற முடியாத இந்தச்சாமிகள் வேண்

டாம். வீணைகச்சோம்பேரிகள் கூறும், "கலியுகம் தலைகீழாக நடக்கிறது" என்று கூறுவதற்கு மயங்கவேண்டாம். இந்த யுகந்தான் அறிவுயுகம். சுயமரியாதையுகம்! சுதந்திரயுகம்! பகுத்தறிவுயுகம்! என்பதில் சந்தேகமில்லை. ஆகையால்தான இக்கிளர்ச்சிகள் தழைத்து நிற்கின்றன. இந்த அறிவுக்கிளர்ச்சியினால் தங்கள் சுயநலத்திற்குத் தீங்கு வருகின்றது என்று அஞ்சுகின்ற வைதீகர்கள் தான் காலத்தை நொந்து கொள்ளுகிறார்கள் என்று நம்புங்கள்! நீங்கள் பகுத்தறிவு கொண்டு எதையும் செய்யுங்கள்! வந்தனம் பிறகு சந்திப்போம்.

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றவர்கள், அதற்கு மேல் தங்களுக்கும் குழந்தைகள் வேண்டுவயில்லையென்று விரும்பினால் அவர்கள் கருச்சிதைவு முறைகளை அநுசரிப்பது சட்டப்படி குற்றமுள்ளதாகாது. அதற்கு டாக்டர்களும் உதவி செய்யலாம்" என்று ஒருசட்டமிருக்கிறது. ஆகவே மூன்று குழந்தைகளுக்கு மேல் கருத்தடை முறைகளை அநுசரிப்பது எந்த வகையிலும் தேச நன்மைக்கு விரோதமானதாகாது என்பதில் ஐயமில்லை.

இது வரையிலும் கூறியவற்றால் ஜனத்தொகை பெருகப் பெருக தேசத்தில் வறுமைத்துன்பம் அதிகமாகு மென்பதையும், ஆகையால், மக்கள் தொகுதியைப் பெருகாமல் தடை செய்ய வேண்டியது அவசியமென்றும், அதற்காக கருத்தடை முறைகளைக் கையாளுவது ஓரளவு குழந்தைகளைப் பெற்ற பின் செய்வதனால் தேசத்திற்கு யாதொரு கெடுதியும் உண்டாகாதென்றும் அறியலாம். இனி "பிள்ளைப் பேறு" அவசியம் என நமது நாட்டினர் கருதியிருந்ததற்கும் இருப்பதற்கும் காரணம் என்ன என்பதைப் பற்றி ஆராய்வோம். (தொடரும்.)

(8ம் பக்கத்தொடர்ச்சி)

றவரையில் இந்திய நாடு முழுதும் சட்ட மறுப்பும் உப்புக்காச்சுதலும், மறியல்களும் இருந்ததா? இல்லையா?

கா:—ஆம்.

சு:—முடிவான போராட்டமென்றீர்களே! இன்று உங்கள் நிலை என்ன?

கா:—இதற்குக்காரணம்சர்காரின் கடுமையான அடக்குமுறையும் தடிஅடியுமாகும். இருந்தாலும் எதிர்காலத்தில் என்ன நடக்கிறதென்று பொருத்திருந்து பாருங்கள்.

சு:—எதிர்காலம் இருக்கட்டும். நமது கேள்வி முன்னையவிட இம்முறை காங்கிரசுக்கு செல்வாக்குண்டா? இல்லையா? என்பதேயாகும்.

கா:—நமது கேள்வி அதுதான்.

சு:—சற்று சித்தித்து பதில் சொல்லுங்கள். முதல் போராட்ட காலத்தில் காங்கிரஸ் கட்டளை என்பது அதாவது யுத்த முழக்கம், 144 சட்டத்தை மீறி பேசுவது-தடை சட்டத்தை மீறி மறியல் செய்வது

இரண்டாவது போராட்டத்தில் சட்டமறுப்புக்குத் தடையுத்திரவு மீறி பேசுவது, மறியல்செய்வது, உப்புக்காச்சுவது இவ்விரண்டு போராட்ட காலத்திலும் காந்தி தடுக்கும் வரையில் காங்கிரஸ் கட்டளைகள் என்னென்னவோ அது மக்களால் பின்பற்றி செய்யப்பட்டு வந்தது.

கா:—ஆம்.

சு:—முதலிரண்டு போராட்ட காலத்தில் யுத்த முறைகளும் மிக சாதாரணமானதேயன்றி மிக பயங்கரமானதல்ல.

கா:—அதுவும் சரி. அப்புரம்.

சு:—அப்புரமென்ன, மூன்றாவது போராட்டத்தில் உங்கள் தீர்மானமென்ன?

கா:—தீர்மானங்கள் உங்களுக்கு தெரியாதா?

சு:—அப்பா அதை சொல்லக்கூட பயப்படுகிறீர். இன்று காங்கிரசுக்கு செல்வாக்கிருக்கா? அல்லது அழிந்து ஒழிந்ததா? என்பதற்கு உதாரணம் எல்லோரும் காங்கிரஸ்! காங்கிரஸ்! என்று கத்துவதல்ல. அதன் ஆக்கினையை மக்கள் பின்பற்றுகிறார்களா? என்பதேயாகும். முன்இரண்டு போராட்ட காலத்தில் தளகர்த்தன் உத்திரவு பெற்றபின் மக்கள் காங்கிரஸ் கட்டளையை நிறுத்தினார்கள் என்றால் அதுவரையில் அதைப்பின்பற்றமக்கள்இருந்தார்கள். இன்றோ?

கா:—இன்று இல்லை என்கிறீர்களா?

சு:—வேறென்ன! அத்துடன் மட்டுமல்ல. காங்கிரசின் பொறுப்பற்றதும், கொடுமையானதுமான தீர்மானங்கள் எப்படி அவசரமாக நிறைவேற்றப்பட்டதோ அதைவிட அவசரமாக அழிந்தது என்று சொல்லுகிறேன். உங்கள் தீர்மானத்தில் ஒன்றுகூட இவ்விந்திய நாட்டில் ஒரு மாகாணத்திலாவது நிறைவேற்றப்பட்டதா? என்று யோசித்துப் பாரும். இவைகளுக்குக் காரணம் என்ன? அடக்குமுறையா?

கா:—ஆம், பின்புவேறென்ன என்கிறீர்.

சு:—எடுத்ததிற்கெல்லாம் ஒருபல்லவியே பாடுவது முட்டாள்தனம். இவ்வடக்குமுறை முன்பும்இருந்தது. இம்முறை காங்கிரஸ் ஆரம்பத்திலேயே அழிந்ததுக்குக்காரணங்கள்:-

1. இதுவரையில் காந்தி சுயராஜ்யத்துக்கு எல்லோரும் தியாகம் செய்யுங்கள் என்றார். சுயராஜ்யம் என்பது என்னவென்று விளக்கிச்சொல்லவில்லை.

2. விளக்கிச்சொல்லப்பட்ட பின்பு அதில் முஸ்லீம்கள், ஆதிதிராவிடர்கள், மற்றும் பெரும்பான்மையான ஏழைகட்கு இடமே இல்லை. இதை இவர்களும் உணர்ந்தார்கள். உணர்ந்ததுடன் தங்களின் கோரிக்கை இன்னதென்றும் கூறினார்கள்.

3. பெரும்பான்மையான மக்களின் கோரிக்கைக்கு காந்தி செவிசாய்த்தால் எந்த கூட்டத்தின் பிரதிநிதியாய் அவர் வேலை செய்தாரோ அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆதலால் போர் ஆரம்பத்திலேயே அதை விளக்கிக் கூறவேண்டியதாயிற்று.

4. வகுப்பு சலுகை காட்டக் கூடியதான ஓர் அரசியலை நியமிக்க காங்கிரஸ் உட்படப் போவதில்லை என்று பட்ட வர்த்தனமாய்க் கூறிவிட்டார்.

5. வகுப்பு சலுகையை எதிர்பார்க்கும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் அபாய நிலையை உணர ஆரம்பித்தார்கள்.

6. காந்தியின் சட்டமறுப்புப் போர் ஜெயித்தால் பலவிதத்தும் பெரும்பான்மையோருக்கு ஆபத்தாக முடியுமென்பதை நன்குணர்ந்து கொண்டார்கள்.

7. ஜனவரி முதல்தேதி காந்தி வில்லிங்டனுக்கு அனுப்பிய இறுதி கடிதத்தால் புது வருட ஆரம்பத்தில் திடீரென்று காங்கிரசை ஒழிக்க முடிவு செய்தவர்கள் காந்தி போராட்டமன்று சர்க்காருடன் மட்டுமல்ல,

8. சர்க்காரையும், சர்க்காருடன் ஒத்துழைக்கும் கக்ஷிகளையும், வகுப்பு சலுகை கேட்கும் மக்களையும் என்பதை நன்கு தெரிந்து கொண்டார்கள்.

ஆதலால் தான் மிக பயங்கரமான குண்டுகளான காங்கிரசின் திடுக்கிடக்கூடிய அத்தனை தீர்மானங்களும் நொடியில் மாண்டன.

கா:—காங்கிரஸ் தீர்மானங்களில் ஒன்றும் முன் இருமுறை நடந்தது போல் ஜனசமூகத்தால் பின்பற்றப்படவில்லை என்றும், இது காங்கிரஸ் அழித்தது என்பதற்கு உதாரணம் என்றும் தோன்றியதுமே காங்கிரஸ் தீர்மானம் அழிய காரணம் மக்கள் அதை எதிர்த்தது என்றும் தாங்கள் கூறுகிறீர்களே! அப்படியானால் காந்தி மகாத்மியம் பலன் இல்லை என்கிறீர்களா?

சு:—பலன் இல்லை என்று மட்டும் சொல்லவில்லை. ஆபத்துமானது என்கிறேன்.

கா:—சரி நேரமாயிற்று மற்றுமோர் முறை சந்திப்போம்.

தென்இந்திய ஆதிதிராவிட மாணவர்களின் க்ஷேமநிதி லாட்டரி சீட்டு.

இன்று 28-2-32-ல் கோவில்பட்டியில் வைத்து அநேக பெரியோர்களின் முன்பு சீட்டுகுலுக்கி எடுக்கப்பட்டது. பலபெரியோர்கள் விஜயம் செய்தார்கள். ஸ்டாம்பு அனுப்பினால் பிரைஸ் விழுந்தவர்களின் நம்பர் எழுதிய அச்சுக்காப்பி அனுப்பப்படும் என ஷை காரியதரிசி எழுதுகிறார்.

பத்திரிகை ஒழுங்கு.

நமது நாட்டுப் பத்திரிகைகளும், ஆசிரியர்களும் பத்திரிகைத் தொழிலுக்கு விரோதமாகவும், ஆசிரியத் தன்மைக்கு மாறுபட்டும் நடந்து வருவது விசனிக்கத் தக்கதாகும். பத்திரிகைத் தொழிலின் ஒழுக்கப்படியும், நல்லுணர்ச்சியோடும் மாற்றுப் பத்திரிகைகள் அனுப்பப்பட்டால் அதைப் பெற்றுக் கொள்ளப் பிரியப்படுகின்ற அவர்கள் பிரதி மாற்றுப் பத்திரிகை அனுப்ப வேண்டிய அவசியத்தை உணராதது விசனிக்கத்தக்கதாகும். மதிப்புரைக்காக அனுப்பப்படும் புஸ்தகங்கள் தங்கள் கொள்கைக்கு முரணானதாகவோ அல்லதுபொதுஜனநன்மதிப்பைப் பெற முடியாத விஷயங்கள் கொண்டிருப்பதாகவோ தாங்கள் கருதினால் அதற்கு மதிப்புரை எழுதாது விடுப்பது மிகவும் வெறுக்கக் கூடியதாகும்,

இவை யொரு புறமிருக்க சில ஆசிரியர்கள் பக்கம் பக்கமாக விஷயங்களை வேறு பத்திரிகைகளிலிருந்து அப்படியே எடுத்துப் பிரசுரித்து, எந்தப் பத்திரிகையினின்றும் அது எடுக்கப்பட்டதோ அப்பத்திரிகையின் பெயரைக் குறிக்காமல் விடுவது பத்திரிகைத் தொழிலையே துஷ்பிரயோகம் செய்வதோடல்லாது அத்தகைய செய்கை கண்டிக்கத் தக்கதுமாகும். சகோதரப் பத்திரிகையின் பெயரைப் போட்ட காரணத்தால் அவர்களுக்கு எவ்வித அனுகூலமோ அல்லது தங்களுக்கு எவ்வித இழிவோ ஏற்படாதென்பதையும், அப்படி அவர்கள் செய்வது பத்திரிகை ஒழுங்குக்கும் வரம்புக்கும் கடந்தது என்பதை மட்டும் கூற விரும்புகிறோம்.

பெற்றோர்களே! கவனியுங்கள்.

உங்கள் குழந்தைகளுக்கு குலைக்கட்டி வயிற்றுக்கட்டி என்ற அபாயத்தினின்று நிச்சயமாய் குணப்படுத்தும் கைகண்ட மருந்து-தெரியுமா? பிரசித்தி பெற்ற விஜய நகரம் டாக்டர் ஜம்பி வியாசராவ் அவர்களிடமும்

(விஜயநகரம் B. N. Ry.)

M. கல்யாணசுந்திரம்,

74 பட்டமங்கல தெரு, மாயவரம்.

ஏஜண்டு & ஆர்கனைசர் என்ற இடத்திலும் கிடைக்கும்.

தமிழ் நாடெங்கும் ஏஜெண்டு தேவை. ஆர்கனைசருக்கு உடனே எழுதவும்.

15 ஆயிரம் ஆலயங்களும், 291 மடங்களுமா?

:0:——

"ஹிந்து மத ஸ்தாபன போர்டு" ஏற்பட வேண்டும் என்றும், மக்களின் கோடிக்கணக்கான பொருள், கோயில்களிலும், மடங்களிலும் ஏற்கனவே குவித்து கிடக்கிறதென்றும் அக்கோடிக்கணக்கான ரூபாய்கள் தர்ம - கர்த்தாக்கள் - மடாதிபதிகள்-என்பவர்கள் பேரால், குடிக்கும், கூத்திக்கும், செலவிடப் பட்டு எஞ்சிய செல்வம் அத்தனையும், அக்கிரகார பார்ப்பனர்கள் வயிற்றில் பிராமண போஜனம், தர்மம், கோர்ட்டு, வக்கீல் பீஸ் என்பதின் பேரால் செலவெழுதப்படுகிற தென்றும், இவைகள் போதா வென்று வருடா வருடம் திருநாள் பெயரால் விளம்பரப் படுத்தப்பட்டு புதிதாக-லட்சக்கணக்கான ரூபாய்கள் பக்தியின் பெயரால் காணிக்கை என்று வசூல் செய்யப்பட்டு,அதுவும்முன் செல்லும் செல்வ சிலவின் வழியிலேயே செல்கிறதென்றும், இத்தனை லட்சக்கணக்கான ரூபாய்களால் நஷ்டப் படுபவர்கள் பார்ப்பனரல்லாதவர்கள் என்றும், இக்கொள்ளை போகும் பணங்கள் தடுக்கப்படவும், அதி நல்ல முறையில் திருத்தி செலவிடப் படவும் ஓர் வழி காணவேண்டுமென்றும், அதற்கு இந்துமத ஸ்தாபன போர்டு-உதவியாக இருக்கு மென்றும், முதலில் இப்போர்டை நியமித்தார்கள்.

இப்போர்டை நியமிக்க சட்டம் யேற்படுத்த காலம் சென்ற பனகால் அரசர் முயன்ற போது அதை அப்படியே எதிர்த்தெழுதியது பார்ப்பனர்களும், பார்ப்பன பத்திரிகைகளும், நமது—அல்லாதவர்களில் பிரபலஸ்தர்கள் என்பவர்களில் சிலரும் என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

எந்த நோக்கத்துடன் மகத்தான கஷ்ட நஷ்டங்களுக்கு இடையில் சட்டம் நிருவப்பட்டு, கமிட்டி நியமிக்கப்பட்டதோ, அந்த ஆதி நோக்கத்தை விட்டு கமிட்டியும், அதன் நிர்வாகிகளும் செல்ல ஆரம்பித்து விட்டார்கள். இதைப்பற்றி பின்பொரு முறை விவரிக்க விரும்புகிறோம். இன்று 1930 ம் வருடத்திய ஹிந்து மத ஸ்தாபன வருடத்திய அறிக்கை வெளியாகி இருக்கிறது. இதை இம்மாகாண பார்ப்பன பத்திரிகைகள் ஆதரித்தெழுதுவதிலிருந்தே, இந்தஸ்தாபனம் எந்த பார்ப்பனீயத்திடமிருந்து - அல்லாதாரின்-பொருளையும், உரிமைகளையும், காப்பாற்ற தோற்றுவிக்கப்பட்டதோ! அந்தபார்ப்பனீயமே! ஸ்தாபனத்தை தன்வயப்படுத்திவருவது புலனாகும்இதற்கு, நமது பார்ப்பனரல்லாதார்கட்சி பிரமுகர்கள் தக்கநடவடிக்கைகள் இனியேனும் எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

வருடம் 250 ரூ-வருமானத்திற்கு மேற்பட்டதான 15687 ஆலயங்களும், வருடத்தில் 500 ரூபாய்க்கு மேற்பட்ட வருவாய் உள்ள மடங்கள் 291-இருக்கிறதென்றும், இன்னும் கண்டுபிடிக்கவேண்டிய சிலவற்றையும், ரூ. 500ரூ. 250 இவைகளுக்கு குறைந்த வருமானமுள்ள மடங்கள், கோயில்கள் இதன் விபரங்கள் பின்பு வருமென்றும் தெரிகிறது.

பிரஸ்தாப கமிட்டிகளும், கமிட்டிகளுக்கு உட்பட்ட, கோவில்கள், மடங்கள் இவைகளும் தங்கள் கடமைகளை சரிவரச் செய்து வருகிறதா? என்பதைக்கூட நாம் கேட்டு தெரிந்துகொள்ள ஆசைப்படவில்லை. ஆனால், மக்களை மூடர்களாக்குவதும் பெரும்பான்மையான மக்களான பார்ப்பனரல்லாதாரின் செல்வத்தையெல்லாம் சுரண்டி வருவதுடன் இவர்கள் என்று இழிவுபடுத்தப்படுவதுடன் இவர்கள் எதிரிகளான பார்ப்பனர்கள் தின்று கொழுத்து வாழபெறும் ஸ்தாபனங்களாக நிலைத்து விளங்கும் மடங்கள், கோவில்கள் இந்த நாட்டில் இருபதினாயிரம் ஸ்தாபனங்கட்டு அதிக மிருக்கிறது. ஒவ்வொருநிமிடமும் இதிலிருந்து நம்மை நசிக்கச்செய்ய வேண்டிய விஷயங்கள் வெளிவந்து கொண்டே இருக்கிறது. இத்தகைய ஸ்தாபனங்கள் நமது நாட்டில் உள்ளவரை ஏழ்மையும், வறுமையும், மடமையும், அடிமைத் தன்மையும் நம்மை தொத்துநோய்போல் பற்றிக்கொண்டே தானிருக்கும் என்பதிலோ, மக்களை வறுமை நோய் நீங்க வகையில்லை என்று நாம் கூறிவருவதில் சந்தேகமென்னவென்றே கேட்கிறோம். ஆகையால் இவைகளைத் தடுத்து மக்கள் காப்பாற்றப்படவேண்டியது எவ்வளவு அவசிய மென்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

——

சேலம் முனிசிபாலிட்டி.

சேலம் முனிசிபாலிட்டியார் 'ஹிந்தியை' வளர்க்கவும், கள்ளிக்கோட்டையில் ஓர் அரசியல் கைதியான பார்ப்பனமாதின் தாலியை காப்பாற்றவும், முயலுவதில் எனக்கு பொறுமையில்லை. ஆனால்? சேலத்துக்கு அடுத்த தாத்தையங்கார் பேட்டையில் ஆதிதிராவிட பெண்கள் மார்மீது துணி போடக்கூடாதென்றும், போட்டால் மார்பை அறுத்துவிட வேண்டுமென்றும், ஜாதி இந்துக்கள் தீர்மானித்திருக்கிறார்களே! இதைப்பாராட்டியேன் ஒரு தீர்மானம் போடக்கூடாதென்று சேலம் முனிசிபல் வரி கொடுப்போர் ஒருவர் எழுதுகிறார்.

——

திருமதி ஹாகம்.

இந்தியமாதர் துணிந்தால் இந்தியா இந்தியருக்கே. தொட்டிலையாட்டும் கையே ராஜ்யத்தை ஆளும். பெண்கள் அஞ்ஞானத்திலும், அறியாமையிலும், குருட்டு மூட நம்பிக்கைகளிலும், துன்பத்திலும் ஆழ்ந்து, முக்காட்டு மூலையில் முடங்கிக் கிடக்கும் வரை ஓர் தேசமாவது, சமூகமாவது முன்னேற்றத்தையும், சுதந்தரத்தையும் அடையப்போவதில்லை. கல்வி ஞானமும், தைரியமும், சுதந்தர உணர்ச்சியும் இல்லாத தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் பேடிகளாகவும், அடிமை, புத்தி கொண்டவர்களாகவுமே இருப்பார்கள். கல்விமாதர் பிறப்புரிமை, எந்த மதமும், எந்த சமூகமும் இவ்வுரிமைக்குத் தடைசெய்ய முடியாது. ஆண்களில் சுயநலத் துரோகத்தினாலேயே பெண்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக துன்பத் துயர்க்கடலில் மூழ்கி சுதந்திர சுக சௌகரியமாக்களை இழந்து தவிக்கின்றனர். மேனாட்டு மாதர்கள் கண் விழித்து தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முன் வந்துவிட்டனர். இந்திய சகோதரிகளே! உங்களுக்கு இன்னும் உறக்கமா?

உலக முன்னேற்றத்தின் அஸ்திபாரம் பெண்களே. தேசத்திற்கும், சமூகத்திற்கும், குடும்பத்திற்கும், குடிகளாகவும், சீர்திருத்தக்காரர்களாகவும், தாய்மார்களாகவும், மனைவிமார்களாகவும், ஆவதற்கு உதவிபுரியும் கல்விமுறைகளில் ஊக்கத்தைச் செலுத்த முன்னடையுங்கள்.

(சண்டமாருதம்.)

——

லோத்தியனும், பார்ப்பனரும்.

நமது மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ள திரு. லோத்தியன் கமிட்டியும், தமது மாகாண ஓட்டுரிமைக் கமிட்டியும், சாட்சியம் தயாரித்து வருகிறார்கள்.

இதில் தேசிய பாதுகாப்பு தீர்மானத்தை மாதர்கள் பெயரால் ஸ்ரீமதி நல்லமுத்து அம்மாளும், பிராமணோத்மார்களின் பாதுகாப்பைப்பற்றி ஓர் பிராம்மண கனவானும் மிக ருசிகரமானதும், வேடிக்கையானதுமான சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள். இனிமாதருலகத்திற்கும், பிராமணோத்மார்களுக்கும் எத்தகையகுறைவும் இராதுபோலும் என சென்னை நிருபர் எழுதுகிறார்.

——

எம். சி. ராஜாமீது நம்பிக்கையில்லை.

பம்பாய் சுயமரியாதை செந்தமிழ் வாசகசாலைத்தீர்மானம்.

சென்ற பிப்ரவரி மாதம் 26-ந் தேதி வியாழன் இரவு 9-30 மணிக்கு வாசகசாலையின் 7-வது வருட 1-வது மாதாந்தரப் பொதுக்கூட்டம் தோழா, டி. ஈ. பி. சுடலைமுத்து அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. கூட்டத்திற்கு சுமார் 100-பேர்கள்வரை விஜயம் செய்திருந்தார்கள். அது சமயம் திரு. ராஜா அவர்களின் மனப்போக்கைக்கண்டித்து சிலர் பேசியபின் அவர்மீது கண்டனத் தீர்மானம் நிறைவேறியபின் கூட்டம் கலைந்ததென ஒருநிருபர் எழுதுகிறார்.

——

துடிப்பதி

செங்குந்த வாலிப சன்மார்க்க சங்கம்.

ஷை சங்கத்தின் மூன்றாவது ஆண்டுநிறைவுவிழாவானது நாளது (11-3-32) வெள்ளிக்கிழமையதினம் ஈரோடு தாலூகா போர்டு உபதலைவர் உயர் திரு. 'வி. எஸ். ராஜாகவுண்டர்' அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் இ. பி. வெங்கடாசலம் அவர்களும் அவனுசி திரு. கருணையம் அவர்களும் அரும்பொருள் கொண்ட சொற்பொழிவாற்றுவார்களென ஷை சங்கக் காரியதரிசி இ. கே. அங்கப்பா எழுதுகிறார்.

——

கலப்பு மணத்தால் தான் ஜாதி ஒழியும்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1931ஞு S. C. No 1019.

அ. ஷண்முக முதலியார்-வாதி.

கோயமுத்தூர் தாலூகா சிங்காநல்லூரிலிருக்கும் சி. க. காளியப்ப கவுண்டன்—1ம்பிரதிவாதி.

ஷை 1ம் பிரதிவாதிக்கு:—

ஷை வாதி உம்ம பேரில் கணக்குப்படி ரூ. 137-9-3 வரவேணுமாய் தாவா செய்து 12-3-32உ முடிவான பைசலுக்காக வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை வாய்தாவுக்கு நீர் நேரிலாவது, வக்கீல் மூலமாவது ஆஜராகா விட்டால் ஒரு கக்ஷியாக தீர்மானமாகிவிடும்.

எம். கே. கோவிந்தராஜுலு
செட்டியார்,
வாதி வக்கீல்.

திருப்பூர் 3—3—32.

மறியல் செய்யும் இடமெது?

(மிஸ். மீனாட்சி எழுதுவது)

இன்று எனது சகோதரிகள் சட்ட மறுப்பு இயக்கத்தில் சேர்ந்து மதுபானக் கடை, அந்நிய ஜவுளிக்கடை முதலிய மறியல்கள் செய்கிறார்கள், என்ற செய்தியையும், சட்டத்தை மீறுகிறார்கள், சிறைக்குப் போகிறார்கள் என்றும் படிக்கிறேன், கேட்கிறேன். ஒவ்வொரு சமயத்திலும் என் மனது பட்டபாடு இன்ன விதமென்று சொல்லவியலாது. என்? தேச சேவை செய்யக் கூடாதென்ற எண்ணமல்ல. தேசாபிமானத்தைப் பற்றிய வெருப்பல்ல, அவர்கள் மீது கொண்ட பொறாமையால் அல்ல, ஆனால், பெண்இனத்தாராகிய, நாங்கள் எங்கள் சமூகம் என்னநிலையிலிருக்கிறது என்பதை நினைக்குந் தோறும் நமக்கு உடனே வேண்டுவதென்ன? அரசியல் விடுதலையா? சமூக விடுதலையா? என்ற கேள்வி பிறக்கின்றது. ஏனைய நாட்டுச் சகோதரிகள் தங்கள் தங்கள் உரிமையை நிலை நாட்டி, சுதந்திரம் பெற்று, ஆடவரோடு சமத்துவம் பெற்று வருகின்ற இந்த நாகரீக காலத்திலே, நமது மூடபழக்க வழக்கங்களும், மத கற்பனைகளும், சுயநலக்கூட்டத்தாரது சூட்சியும், பகுத்தறிவின்மையும் நமது நிலையை, ஒவ்வொருநாளும், ஒவ்வொருவினாடியும், ஒவ்வொரு செய்கையிலும் நம்மை முன்னேற ஒட்டாது பற்றி இழுத்துக் கொண்டேயிருக்கின்றன. அடிமை விலங்கானது இறுகிக் கொண்டே வருகிறது. அடிமைகளாய்ப் பிறந்து, அடிமைகளாய் வாழ்ந்து, அடிமைகளாய் மடியும் எனது சகோதரிகள் ஆசாரம், பழக்கம், வழக்கம் என்னும் கொடிய சட்டதிட்டத் ற் குட்பட்டு, அறிவிழந்து, ஒளியிழந்து, வீரமிழந்து, தீர யோசிக்கும் நேர்மையிழந்து, பகுத்தறியும்பான்மையிழந்து, தான் விரும்பிய அளவு கல்விகற்க உரிமையற்று, தனது அன்பிற்குரிய ஓர் ஆடவனை தானே அடைந்து இல்வாழ்வை நல்வாழ்வாக்க வகையற்று, இளம் வயதில் விதவையானால் மறுமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியுற மார்க்கமற்று ஏங்கித் தவித்து அல்லலுறும் பான்மையை நோக்கின் இஃதென்ன பெண்ணா, பிணமா- என்ற கேள்வி பிறவாதிராது: பழமையும் கொடுமையுமான மதக்கட்டுப்பாடுகள், அனுஷ்டானங்கள்எல்லாம் நமது ரத்தத்தில் ஊறிப் போய் விட்டன. அவற்றின் ராட்சச பிடியினின்றும், விடுவித்துக் கொள்ள நம்மால் ஆவதில்லை. நாம் ஒவ்வொரு நாளும் அனுபவிக்கும் கொடுமைகளினின்றும், கஷ்டங்களினின்றும், குருட்டு நம்பிக்கைகளி லிருந்தும் நம்மை உடனே விடுவித்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமல்லவா? இதுமுதலில் செய்யப்படவேண்டிய வேலையல்லவா? முதலில் நம்மை நாம் விடுவித்துக் கொண்டு, நமது சுயமரியாதையைப் பெற்று, உரிமையைப் பெற்று, சுதந்தரத்தை அடைந்த பிறகன்றோ நாட்டின் சுதந்திரம், நாட்டின் வுரிமையைக் கவனிக்க வேண்டும்.

சகோதரிகளே, நமது தற்கால நிலையை யாராவது யோசித்தீர்களா? அந்தகாரத்திலும், மடமையிலும், சடங்குகளிலும், ஆபாசப்பழக்கவழக்கங்களிலும், மதப்பித்திலும், கடவுள் பைத்தியத்திலும், குருட்டு நம்பிக்கைகளிலும் தோய்ந்து கிடக்கும் நீங்கள், இந்திய நாட்டின் உரிமைப் போரில் மறியல் செய்ய வந்தது வியப்பிலும் வியப்பே. காக்கைக்கும், பூனைக்கும், பல்லிக்கும், பாம்புக்கும் பயந்து நடக்கிற நீங்கள், ஒருவர்க்கு நோய் கண்டால் மொட்டை போடுவதாகவும், அலகுகுத்தி காவடி எடுப்பதாகவும், உருளு தண்டம் போடுவதாகவும், அடியளந்து கொடுப்பதாகவும், பிரார்த்தனை செய்து கொள்கிற நீங்கள், ஒருவர்க்கு அம்மை போட்டு விட்டால் மாரியம்மனுக்கு இளநீர் அபிஷேகம் செய்வதாகவும், தங்கத்திலோ, வெள்ளியிலோ கண்ணடக்கம் செய்து வைப்பதாகவும், (மாலைகள் போட்டு மேள வாத்யத்தோடு, ஊர்வலம் வந்து) தீச்சட்டி எடுப்பதாகவும் வேண்டிக் கொள்கிற நீங்கள், புருஷன், மாமி, மாமன் பெயர்களைச் சொல்வதே பாவம் என்று கருதுகிற நீங்கள், பிள்ளை வரத்துக்காக அரசமரம் சுற்றி, விநாயகருக்கு தினம் 100 குடம் தண்ணீர் விட்டு, ஸ்தல யாத்திரை தீர்த்தயாத்திரை, நாகப் பிரதிஷ்டை செய்தால் பிள்ளையுண்டாய் விடும் என்றுகருதுகிற நீங்கள், படியை, விளக்கமாற்றை, வெத்திலையை லட்சுமியாகக் கருதி தொட்டுக்கும்பிடுகிற நீங்கள், இடி இடித்தால் "அர்ச்சுனன் பேர்பத்து" என்று சொல்லுங்கள் என உங்கள் குழந்தைகளுக்கு உபதேசிக்கிற நீங்கள், பூச்சாண்டி வருகிறது, சாமிகண்ணைக்குத்தி விடும். என்று மடமையிலும், பயத்திலும் குழந்தைகளை வளர்க்கின்ற நீங்கள், கிரக தோஷ பரிகாரம் செய்யாமல், சோதிடம்கேளாமல், நேர்த்திக்கடனில்லாமல், விரதமில்லாமல், வாழமுடியாத நீங்கள் இந்தியாவுக்கு சுயராஜியம் பெற, சட்ட மறுப்பு! சத்தியாக்கிரகம்! மறியல்! பேஷ். வெட்கம்! வெட்கம்!!

சகோதரிகளே! உங்கள் நித்திய வாழ்க்கையின் அலங்கோலத்தை நினைத்துப் பாருங்கள். கடன் பட்டேனும் சடங்கு, கடன் பட்டேனும் கருமாதி, கடன் பட்டேனும், யாத்திரை, கடன் பட்டேனும்அபிஷேகம், ஆராதனை, பின்னர் வறுமை, இழிவு கடன், வாரண்ட், ஜப்தி, குழந்தை குட்டிகளின் பரிதாபம், சகிக்க முடியாத துன்பம், மற்றவர் நிந்தனை எல்லாம் இவையெல்லாம் என்? பரம்பரை பழக்கத்தை நிலைநிறுத்த, ஆசாரத்தைக்காப்பாற்ற, அயலாரது நன்ம ப்பைப்பெற, இவ்வளவு தான். சகோதரிகளே இத்தகைய அநாசாரங்கள், சமூக சூழல்கள் தொத்து நோய்போல் உங்களைப்பற்றிக்கொண்டிருக்கிறதை நீங்கள் உணர்கிறீர்களா? இவைபோனாலல்லது நாகரீக மக்களாக, அறிவுள்ள மக்களாக, உங்களை யாருமே பாவிக்கமாட்டார்கள். எவ்வளவுதான் ஆண் மக்கள் தொண்டைகிழிய, நாவரழ, சீர்திருத்தம், சீர்திருத்தம் என்று கத்தினாலும் பெண்மக்கள், அதன் உண்மையை, தத்துவத்தை உணர்ந்துகடைப்பிடித்தாலல்லது எந்தச்சீர்திருத்தமும் எந்தத்தேசத் லும் உரம்பெறவேபெறாது இது உண்மை. ஆடவருக்குத்துணைவியாய் இருப்பவள் பெண், கிரக எஜமானியாய் இருப்பவள் பெண், இல்லறத்தை நல்லறமாக்குபவள் பெண், வீரமும், அன்பும், அறிவும் கொண்டகுழந்தைகளை நாட்டிற்குதவி வருங்கால தேச மக்களாக்குபவள் பெண், ஆகையால் அவளது பொறுப்பும், கடமையும் அளவு கடந்தது. இந்த உண்மையை நீங்கள் உணர்ந்தீர்களா? தெரிந்தீர்களா? தெரிந்திருப்பின் மதுபானக்கடை, அந்நிய ஜவுளைக்கடைமறியல் செய்ய உங்கள் மனம் இடந்தருமா? யோசித்துப்பாருங்கள். மறியலிலோ, சட்டமறுப்பிலோ, சத்தியாக்கிரகத்திலோ, எனக்கு எள்ளளவும நம்பிக்கையேகிடையாது. உங்களுக்கு அதில் பிரேமையிருக்குமானால், ஆர்வம் இருக்குமானால் நீங்களும் உங்கள் சமூகமும் இருக்கும் இந்த நிலையில் மறியல் செய்யவேண்டிய இடமெது? மதுபானக்கடையல்ல, அந்நியஆடைக்கடையல்ல, விதேசி சாமான்கடையல்ல, பாடசாலையல்ல, கோர்ட்டல்ல ஆனால்—பெண்கள் உரிமைக்கு, சுதந்திரத்துக்கு முன்னேற்றத்திற்குறிய தீர்மானங்கள் சட்டமாக்கப்பட வருகையில், அதை எதிர்க்கிற, முட்டுக்கட்டை போடுகிற, ஊறுதேடி சூழ்ச்சிசெய்கின்ற வைதீகவெறியர்கள் வீடுகளில், மத ஆணவங்கொண்ட மடையர்கள் வீடுகளில், பகட்டு வேஷ பழமைவிரும்பிகள் வீடுகளில் மறியல் செய்யுங்கள். மறுமணம் செய்து மகிழ்ச்சியுற எண்ணும் உங்கள் இளம்விதவைச் சகோதரியை தடுத்து வைக்கும் வைதீகக்குடுக்கைகள் வீட்டில் மறியல் செய்யுங்கள், சத்தியாக்கிரகம் செய்யுங்கள். தன் விருப்பத்திற்கு மாறாக பெற்றோர்கள் பொட்டுக்கட்ட யத்தனித்தால் அதைத்தடுத்து உங்கள் தேவதாசி சகோதரியைக்காப்பாற்ற சத்தியாக்கிரகம் செய்யுங்கள், மறியல்செய்யுங்கள், உங்கள் உயிரை வேண்டுமானாலும் கொடுங்கள். தீண்டத்தகாத சகோதரிக்கு ஒரு குடம் கிணற்றுஜலம் கொடுக்க மறுக்கும் உங்கள் சகோதரிகள் வீட்டில் சத்தியாக்கிரகம் செய்யுங்கள். உங்கள் முன்னேற்றத்திற்கு எதிரிகளாயுள்ளவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களிலும், சட்டசபைகளிலும் அங்கம் பெறாதவாறு தேர்தல் காலங்களில் அவர்களுக்கு ஓட்டுப் போடாவண்ணம் மறியல் செய்யுங்கள். சூரியவெளிச்சத்தையே இன்னதென்று கண்டறியாது, வீட்டிற்குள்ளே யாரையும் பார்க்கலாகாது, எங்கும் போகலாகாதென அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சகோதரிகள் வீட்டில் ஆடவருக்கு புத்திகற்பிக்க சத்தியாக்கிரகம் செய்யுங்கள். அவர்களை விடுவித்து வெளியே வரும்படி செய்யுங்கள். இவைகளை நீங்கள் செய்வீர்களேயாகில் உண்மையில் நீகள் உங்கள் உரிமையைப் பெறுவீர்கள். உங்கள் சமூகவிடுதலை தானே கிடைக்கும். நீங்கள் அறிவுள்ளவர்களாக, தியாகிகளாக, தேசாபிமானிகளாக போற்றப்படுவீர்கள். உங்கள் இனம் மேன்மையுறும் சமத்துவம் பெறுவீர்கள். உங்கள் புகழ் சிறந்தோங்கும். ஏனைய தேசசகோதரிகள் கண்டு பொறாமை கொள்வார்கள். உங்களது தீரம், சேவை, ஊழியம், மகத்தானதாகும். அது உருவான, உண்மையான, அவசியமானதொண்டுமாகும். உங்களது பெயர் சரித்திரத்தில் உயரிய இடம் பெறும். பெண்ணின முன்னேற்றமும் விடுதலையும் அதுவேயாகும்.

(6ம் பக்கத்தொடர்ச்சி)

மல், அதன் பின்னே யோடிய (அறியமுடியாத) கோழையின் கதையையும், கடுதாசியானது தண்ணீர்நிறைந்துஓடும் ஆற்றில் எதிர்த்துச்சென்றதென்று மாணவர்களின், 'ஆராய்ச்சிக்குட்படாத, தெய்வீகத் தன்மை பொருந்திய தென்றுநினைக்கும் படியாகவுள்ள, ஆகியஇவ்வளவு கதைகளையும்ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கும், ஏடுகளைப்போதிக்கும், புராணமரியாதைக்காரர்கள், உபாத்தியாயர்களாயிருப்பதைவிட....

அறிவு வேறு. படிப்புவேறு. அறிவுக்கும்! படிப்புக்கும் சம்பந்தமில்லை. கடவுளைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்; என்றுசொல்லி, அறிவையும், தன் னம்பிக்கையையும், ஆராய்ச்சிசக்தியையும், தொழில்வகைகளையும் விருத்திசெய்து, குருட்டுஎண்ணம், மூடநம்பிக்கை, புராண நம்பிக்கை, ஆத்ம நம்பிக்கை, மகாத்துமாக்கள்நம்பிக்கை இவைகளை அகற்றும்படி ஆதாரத்துடன், போதித்து; முற்போக்குள்ள, தைரியமுள்ள தன்நம்பிக்கையுடைய, வாலிபர்களா

எதிலே, குறைச்சல், என்கொடார் சுயராஜ்யம்?

(ஆர். கே. பெருமாள்)

ஏமாளிகளால் புண்ணிய நாடெனப் போற்றப்படும் நமது இந்தியா, இன்று எதிலே குறைச்சல், கல்லைக் கட்டையை, மண்ணை மரத்தை, நீரை நிலத்தை, இரும்பை எஃகை, செடியைக்கொடியை, புல்லைப் பூண்டை, கடவுளாகக் கட்டியழுவதில் குறைச்சலா? மதம் மதம் என சண்டைகளிட்டு, மண்டைகள்உருண்டு மாள்வதில் குறைச்சலா? எண்ணத் தொலையா எழுத எலா சாதிகளுக்குக் குறைச்சலா? உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்று ஊளையிடுவதில் குறைச்சலா? தீண்டாமை, தீண்டாமை என நீட்டித்திரிவதில் குறைச்சலா,பொய்யும் புலையும் · கொலையும் களவும் கூடாக் கலவியும் புரிந்த கள்ளக் கூட்டங்களைப் போற்றும் பொய் புராணச்சுவட்டுக்குக் குறைச்சலா? மலம் மூத்திரங்களுக்கு மண்டியிடுவதில் குறைச்சலா, செம்மண், வெம்மண்ணில் புரள்வதில் குறைச்சலா, ஏமாற்றுக்கூட்டங்களால், இல்லாத ஒன்றின் பேரால், வருடந்தோறும், மாதந்தோறும், நாட்கள் தோறும், ஏன், நிமிடந் தோறும், தேர் திருவிழாக்கள் என (கண்ணடிக்கும் கான்பரன்ஸ், சசக்குந் திருவிழா,) கட்டிவிட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டப் பாடுபட்ட மக்களது பணம் பாழாகச் செய்து, மக்கள் எலும்புந் தோலுமாய் நடைப்பிணமோ எனத் தக்க நிலைமையில் இருப்பதில் குறைச்சலா, இத்தனையும் போதாதென்று, தக்ளியும், ராட்டையும், சங்கு சக்கரங்களாகக் கொண்டு தரித்திர நாரயணன் தோன்றியதில் தான் குறைச்சலா, இந்நாராயணன் அவதாரத்திர்க் கப்பால், நாட்டுத் தொழில் யாவும், குறிப்பாய் வியாபாரம் விவசாய உலகிலேற்பட்ட ஊக்கமும், உற்சாகமும் கூடிய உன்னத நிலைக்குத் தான் குறைச்சலா, இத்தரித்திர நாராயண மூர்த்தி "காங்கிரசு" எனும் நாடக மேடையில் தோன்றி "சுயராஜியம்" எனும் சரித்திரத்தைநடிக்கப்புகுந்து, நம் ஆராய்ச்சி அனுபவத்திற்குத் தென்படாததும், இவ்வுலகு எத்திசையும் எந்த நாடும் கண்டிராததும் கைக்கொள்ள இயலாததும், இயற்கைக்கு புறம்பானதும், செல்லாக் காசுக்கு முதவாததுமாகிய, கள்ளுளி மங்கான்களும் வெட்கி யோடத்தக்க சண்டித்தனத்திற்கு போர் என நாமஞ்சூட்டி, முகாரி ராகந் நீட்டியதில் தான் குறைச்சலா, இம்மூர்த்தியின் முகாரி ராகமே, முத்தி வீட்டுக்குள் நித்தம் புகுத்த வல்லது எனக் கொண்டு, ஆண் பெண், கிழவர், குமரர், பலர்பக்கதாளம் போட, கந்தலணிந்து கை ராட்டைஏந்தி தக்ளி திரித்து, தரி கட தக திம், தரி கட தகதிம், தாளம் கொட்டியதில்குறைச்சலா, இத்தாளங்களை மெச்சி, தடி அடி, தண்ணீர் வெந்நீர் அபிஷேகம், தாலி பறி, போன்ற வெகுமதி கிடைப்பதில் தான் குறைச்சலா, பாமர மக்களை இவ்வெகுமதி பெற்று விரைவில் மடியச் செய்து விட்டு தாங்கள் மட்டும் மறைவதிற்குஇருட்டறை நாடி எறிதேங்காய் பொருக்கப் போகும் பிள்ளைகளும் பிந்தும் படியான வேகத்தில் கம்பி நீட்டும் காந்தி நேசர்களும், கறடு முறடு பிரியர்களும் கொடி இறக்கு விழா, படம் அகற்று விழா, நடத்தும் பழுத்த, பழைய, புதிய தேசாபிமானிகளுக்குத் தான் குறைச்சலா, நாட்டில் நடக்கும் காலாடித் தனத்திற்குக்காரணங்கள் தெரிந்தும்அவற்றை அடக்க வெளிப்படையாய் வேலை செய்ய கிஞ்சிற்றும் தைரியமின்றி, காம்பாய்ந்த மலர் தூவிய மஞ்சங்களில், தம்மனைவிமக்களோடுகொஞ்சிக்குலாவிக் கொண்டே, பொது மக்கள கண்களில் மண்தூவும் சம்பிரதாயங் கொண்டு, அனுதாபங்கள், கண்டனத் தீர்மானங்கள் போடும், தேசியக்கட்சி, நலவுரிமைக் கட்சி, அந்தது, முறிந்தது, தொங்கியது தொலைந்தது போன்ற அநாமதேயக் கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் தான் குறைச்சலா, பெண்களது நலம் பேணி எதாகிலும் தீர்மானங்கள் வரின் அவைகளை இல்லாததும் பொல்லாததுமான பொய் பேசி எதிர்க்கும், பண்டித சேனர், சோணர், கோணர் போன்ற சட்டசபைப் பிரதிநிதிகளுக்குத் தான் குறைச்சலா, ராணுவம், ராணுவம், சிக்கனம், சிக்கனம் எனச் செப்பும் சிக்கனச் சீமான்களை நோக்கி, சிக்கனம் வேண்டுவதே ஆனால் வீணே, கல்லால், கட்டையால், மண்ணால் மரத்தால், நீரால், நிலத்தால்தேரால் திருவிழாவால், நெருப்பால் புகையால், பாழாகும் பல கோடியில் உங்கள் புள்ளிக் கணக்கை பிரயோகிக்க கூடாதா? என்றால், பறக்க விழிக்கும் பைனான்ஸ் மெம்பர்களுக்குத் தான் குறைச்சலா, பெண்ணினங்களை பேயென்றும், நாயென்றும் மதித்து அவ்வெந்தன் தாயினங்களை பிறப்பு முதல் இறப்பு வரையும், விலங்கினங்களாய், அடிமைகளாய் நடத்தப்படும் அலங்கோலத்தால் சிக்குண்டு அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் ஆடவரிடை அல்லோல கல்லோலப்படும் தம்மினங்களின் அழுகையை அமர்த்த, கண்ணீர் துடைக்க,, கொஞ்சமும் சிந்தனை இன்றி சற்றறிவு பெற்றுள்ள இன்று மீண்டும் தம் சோதரிகளை மீளாக் குழியில் புகுத்த ஏதுவாயுள்ளதும், மதம்,ஜாதி, பழக்கம், வழக்கம்போன்ற வைதீகப் பித்தை வளர்ப்பதுமாகிய பிரஜா உரிமைத்திட்டம் வகுத்த பேரினங்களின் அரசியலில் சிக்கி ஆவி போக்கும், அம்மைகளாம் சரோஜினியார், சடோபாத்திகள், சாரளாக்கள், சௌத்ராணிகள், ஊர்மிளாக்கள், கமலாக்கள், பிச்சமுத்துக்கள், பார்வதிகள், லட்சுமிகள் போன்றவர்களுக்குத்தான் குறைச்சலா, இத்யாதி ஊர்வன, உயரப் பறப்பன, நடப்பன, மிதப்பன நிமிட நேரத்தில் அழிப்பன போன்ற அரிய பெரிய காரியங்கள், எதிலும் குறைச்சலின்றி நிறைச்சலுடன் நிறகும் நமது நாட்டுக்கு குடி ஏற்ற நாட்டுச் சுதந்திரம், குடி இல்லாத நாட்டுச் சுதந்திரம், அல்ல, அல்ல மூட்டைகளையும் முடிச்சுக்கட்டி முழுச் சுதந்தரத்தையும் கொடுக்கத் தயங்க யாருக்குரிமை, என்று தான் தேசாபிமானிகள் சார்பாய் யான் கேட்கிறேன், இந்த நிலையில் நமது பெரிய நாட்டுக்கு 'சுய அரசு' நாள் கணக்கா மாதக் கணக்கா, வருடக்கணக்கா, என ஏங்குவோர், காந்தியடிகளிடம் கேட்டுத் தெரிவதே சிறப்பாக இருக்கும். விரும்பின்எரவாடா தவச்சாலையைக்காண, புனலில் இறங்க வேண்டும்" சுயராஜியம் இப்பவா, பிறகா, நாளையா, எனச சந்தேகிப்பவர்களைப் பற்றி எனது அசைக்க முடியாத முடிவு, ஒன்று, சந்தேகிப்பவர்மேல் மாடி காலியுள்ளவராய் இருக்க வேண்டும், இல்லையேல்சற்றுகோளாறுள்ளவராய் இருக்க வேண்டும்,

கும்படி மாணவர்களைப்பயிற்றுவிக்கும். சுயமரியாதைக் கொள்கையாகியபகுத்தறிவையும், சரியான நோக்கங்களையும், அடிப்படையாகக்கொண்டஉபாத்தியாயர்கள்தான் பாடசாலைகளில் உத்தியோகம்வகித்தல்சாலச்சிறந்தது: எனச்சொல்லும், சுயமரியாதைஇயக்கத்தின் பேரிலும்,அதன் தலைவர்பேரிலும், என்போன்றார் பேரிலும் உள்ளகுற்றதா னென்ன? வரும்சீற்றந்தான்ஏனோ? கடைசியாக,

"சாமியில்லாமலா மழைபெய்கிறது" எனச்சிலர் சொல்கிறார்கள். அவர்களுக்கும் கொஞ்சம் சொல்லிவிட்டுத்தான் முடிக்கவேண்டியிருக்கிறது. ஆறு, குளம், ஏரி, இவைகளிலுள்ள நீர்சூரியவெப்பத்தினால் ஆவியாகமாறி, மேலே செல்லச்செல்ல, குளிர் காற்றுப்பட்டவுடன் மழையாகப்பெய்கிறதென்றும், நீராவியானது நீராகமாறுந்தன்மை யுடையது என்றும் (**Experiment**) பரிசோதனையுடன், உதாரணத்துடன் படித்த ஆங்கிலப்பட்ட தாரிகளில் சிலருக்குங்கூட, மற்ற ஆத்திகர்களுக்கும், தெரியாமல் தான் போனதென்ன?

ஆகவே இவைகளையெல்லாம்அலசிப்பார்த்தபின், தூஷணை மாலையை தொடுக்கும்படி வேண்டிக்கொண்டு, விரிவஞ்சி இக்கட்டுரையை இத்துடன்முடிக்கின்றேன்,

தாது புஷ்டிக்கு
"கெய்ரோடைன்"
சாப்பிடுங்கள்.
இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்
குஷ்டம் தீராதகர்மநோயென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?
எக்காரணத்தினாலுமுண்டாகின்ற எவ்வித குஷ்ட நோய்க்கும் அனேக தொத்துவியாதிகளுக்கும் சீரான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சாத்தியமாக்கி அனுபவித்தானந்தப்படுங்கள்.
நோயினால் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்
சி. ஒ. கேசவவைத்தியர்
Bhaskara Vilasam (S. K R.) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S I.

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

என்னவென்றால்மதத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஒரு விதமான சம்பந்தமும் இல்லை. ஏனெனின் புரோகிதமும், வைதிகப் பேயும்தலைவிரித்துத் தாண்டவம் ஆடிய காலத்தும், மதத்தின் ஆவேசம் அடங்காது ஆடி நின்ற நாளிலும், ஒழுக்கம் ஒழிந்து உண்மையழிந்த போதிலும், மேம்பட்ட தூய பக்தி மீக்கூறுற்ற சமயத்திலும், இவ்வாறு பல்லாயிரக் கணக்கான வருடங்களாக உலகத்தில் ஒவ்வொரு மூலையிலும் அரசாங்கம் இருந்து தான் வந்திருக்கின்றது. மக்களது சமயம் எவ்வளவு தூயதாயினும் தீயதாயினும், அவர்கள் காருண்யமிக்க கடவுளை வழிபட்டு வந்தாலும் அல்லது கருணையற்ற கொடுந் தேவதைகளைப் பூசித்து வந்தாலும், ஆன்மா நித்யம் என்று நம்பினும் அல்லது அது அநித்யம் என்று கொண்டாலும், எந்த நாள் மனிதன் மிருகத் தன்மையை விடுத்து நாகரீகம் என்பதைச் சிறிதளவேனும் கைக்கொண்டானோ அந்நாளிலிருந்து அவன் அரசாங்கத்தின் அவசியத்தை உணர்ந்தது மன்றி தன் வரையில் அதையமைத்துக்கொண்டு தான் வந்திருக்கின்றான். அரசாங்கமானது மனிதனுக்குச் சமையற்றொழில் எவ்வளவு சாதாரணமாகவுள்ளதோ அவ்வளவு சாதாரணமானது. எனவே மதத்திற்கும், சமயலுக்கும் உள்ள சம்பந்தத்திற்கு மேற்பட்டு, மதத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஒரு சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

இறுதியாக, ஒரு மன்னனோ, ஒரு அரசாங்கமோ தனது குடிகளை இன்ன வழியிற் செலுத்த வேண்டும் இன்ன மதத்தை யனுஷ்டிக்கச் செய்ய வேண்டும் என்று திரு. சதே கொள்ளும் அபிப்பிராயமும் நாம் சமமதிக்கத் தக்கதும் ஆதரிக்கத் தக்கதும் ஆன நிலைமையில் இல்லை. ஏனெனில் ஒரு தேசத்துக் குடிகள் தாங்களே தங்களுக்கு நன்மையும் மேன்மையும் அளிக்கும் ஒழுக்கம் மதம் இவைகளைக் கண்டுபிடித்துக் கைப் பற்ற எதுவாகும். சக்தியும், சாமர்த்தியமும் எவ்வளவு கொண்டுள்ளார்களோ, அதைக்காட்டிலும் அக்குடிகளின் மன்னரோ அல்லது அரசு முறையை நடத்தும் மக்களோ எந்த விதத்திலும் அவர்களை ஒருநல்ல மதத்தைக் கடைப் பிடிக்கச் செய்ய அதிகமான சக்தியும், சாமர்த்தியமும் வாய்ந்தவர் ஆவார்? இது வரைக்கும் உலகத்தில் அரசாங்கங்கள் குடிகளிடத்தில் குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதைப் போல் நடந்து வந்ததில்லையா? இன்னும் வந்து கொண்டிருக்கவில்லையா? அப்படியிருக்க மன்னன் மட்டும்குடிகளுக்கு நலன் அளிக்கும் மதத்தைத் தேர்ந்தெடுக்கவும் புகட்டவும் எவ்வாறு அறுகதை யுடையவன் ஆவன்? அவர் சட்டத்திடமே நம்பிக்கை கொண்டுள்ளார். ஆனால் சட்டம் சமூகத்தின் அபிப்பிராயச்சத்து என்பதை அவர் உணரவில்லை போலும். அவ்வாறாயின் சமூக அபிப்பிராயத்தைக் காட்டிலும் சட்டங்களினிடம் அதிக உண்மையோ உயர்வோ இருக்க இடம் இல்லை. உலகத்தில் நாம் காணும் எத்தகைய அரசாங்கமுறையிலும் ஒரு மனிதனோ அல்லது ஒரு மனிதக் கூட்டமோ தான் ஆண்டு வருகின்றது. மனிதனோ இயல்பாகவே தவறும் குணம் தன் வயின் உடையவன். ஆக எந்த அரசாங்கம் ஒரு கொள்கையைக் கொண்டாலும் அல்லது எந்த மதத்தை யனுசரித்தாலும், (அது தவறும் இயல்புடைய மனிதனால் ஆளப்படுதலால்) அந்தக் கொள்கையும் அந்த மதமும் சாதாரண குடியாகிய ஒரு மனிதன் கொண்டுள்ள கொள்கையைக்காட்டிலும் மதத்தைக் காட்டிலும் அதிக உண்மையை யுடைத்தாயிருக்க வழியில்லை. இது இப்படி யிருக்க, திரு. சதேயா அல்லது அவர் போன்றவர்களோ, இன்ன தன்மையையுடைய மனிதன் தான் அல்லது இன்ன தன்மையின் மனிதக் கூட்டம் தான் என்றும் தவறாத கொள்கையைக் கொள்ளும் திறமுடையர் என்று கூற முடியுமா? ஒருக்காலும் முடியாது. ஆகையினால் மனிதன் என்பவன் இயற்கையாகவே தவறும் இயல்புடையவன் ஆகையாலும், எந்த அரசாங்கத்தையும் ஒரு மனிதனோ பல மனிதரோதான் ஆண்டு வருகின்றார் என்பதாலும், அவ்வாறு ஆளும் அம்மனிதரது அப்பிராயமும் அவர் கைக் கொள்ளும் ஒரு மதமும் தனிப்பட்ட ஒருவன் கொள்வதைக் காட்டிலும் ஒரு விதத்திலும் அதிக உண்மையுமுயர்வும் கொண்டிருக்க இடமில்லையாதலாலும், திரு. சதே கூறுவதைப் போல் ஒரு அரசாங்கம் தன் குடிகளிடம் ஒரு மதத்தைப் பரப்பயாதொரு அருகதையும் இல்லாதிருப்பதுடன் அப்படி அது பரப்பினால் உண்மையானது ஒருவருக்கும் தெரியாமலும் போக வேண்டி வரும். ஆக, நாம் திரு. சதேயவர்களின் அபிப்பிராயங்கள் ஒன்றையேனும் ஒப்புக் கொள்ள முடியாத நிலைமையில் இருக்கின்றோம்.

ஜஸ்டிஸ் தின வைபவம்.

கடந்த 26-ந் தேதி இரவு தியாகராஜ ஞாபகார்த்த கட்டிடத்தில் சென்னை மாகாண முதல் மந்திரியும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவருமான திவான் பகதூர் பி. முனுசாமி நாயடு அவர்கள் தலைமையில் ஜஸ்டிஸ் தின வைபவம் கொண்டாடப்பட்டது.

தலைவரவர்கள், காலஞ் சென்ற தலைவர்களால் தோற்றுவித்து வளர்க்கப்பெற்ற ஜஸ்டிஸ் பத்திரிகை 15 ஆண்டு முடிகிற தென்றும், பிராமணரல்லாதார் இயக்க முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், ஜஸ்டிஸ் பத்திரிகையானது எவ்வகை மகத்தான சேவை செய்திருக்கிற தென்பது பற்றியும், செல்வாக்குள்ள ஓர் கட்சிக்கு ஒரு பத்திரிகை எவ்வளவு அத்தியாவசியம் என்பது பற்றியும், தற்கால ராஜீய நிலைமையைப் பற்றியும், ஆதிதிராவிட மக்களின் உரிமைக்காக பிராமணரல்லாத கட்சியும் ஜஸ்டிஸ் பத்திரிகையும் செய்த, செய்து வரும் ஊழியத்தைப் பற்றியும் கட்சி பத்திரிகைகளை பிராமணரல்லாதார் ஆதரிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், கக்ஷிப்பிரதிநிதிகளாக வட்ட மேஜை மகாநாட்டிற்குச்சென்று அரிய ஊழியம் புரிந்து திரும்பிய பிராமணரல்லா அங்கத்தினர்களைப் பாராட்டுவதாகவும் நீண்ட சொற் பெருக்காற்றினார்.

அதன் பின்னர் முறையே ராவ் பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம், திரு. வாசுதேவபிள்ளை, திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார், திரு. ஆர். எம். பேலட், டி. வி. சுப்ரமணியம் பண்டிட், கானவா ராமமூர்த்தி திவான் பகதூர் பி. டி.குமாரசாமி செட்டியார், திருவாளர்கள் ஏ. எஸ். ஆறுமுகம் பிள்ளை, எம். ஷண்முக சுந்திரம் முதலியபிரமுகர்கள்பேசிய பின்னர் தலைவர் முடிவுரை யோடும் வந்தனோபசாரத்தோடும் கூட்டம் கலைந்தது.

இலங்கை, டிக்கோய, சுயமரியாதைச்சங்கம்.

இச்சபையின் மாதாந்திரப்பொதுக்கூட்டம் 28 2-32ந்தேதிமாலைஆறு மணிக்கு உயர், திரு. எம். கருப்பையாஅவர்களின் தலைமையில் கூடிற்று:

தலைவர் அவர்கள் முகவுரையாகப் பேசும் போது இன்று நம்சங்கமாதாந்திரக்கூட்டத்திற்கு, எல்லா அங்கத்தினர்களும், மற்றுமுள்ள அபிமானிகளும், கூடியிருப்பதை அறிந்துசந்தோஷப்படுவதோடு, இக்கூட்டமே, நம்மியக்க உணர்ச்சியை காட்டுகிற தென்றும் இப்படியே, அங்கத்தினர்கள்யாபேர்களும் இன்னும் பலமான முயற்சிசெய்து சங்கத்தை விருத்திச்செய்யவேண்டுமென்றும் நண்பர் திரு. பி. வி. நயினான்அவர்கள் நம்மியக்க சம்மந்தமாய் கொண்டு வந்ததீர்மானத்தைத் தீர்மானிக்க உத்திரவு கொடுத்து ஆசனம்அமர்ந்தார்

திரு. பி. வி. நயினான் அவர்கள்தீர்மானத்தைசபையின் முன்சமர்ப்பித்துகீழ்வருமாறுபேசினார்.

நம்மியக்க மாகாணச்சுயமரியாதைச்சங்கதலைவரும், இந்தியாச்சட்டசபைஉபதலைவருமான, மேன்மை பொருந்திய உயர்திரு, ஆர், கே, ஷண்முகம் அவர்களை சர்வதேசத் தொழிளாளர் மகாநாட்டிற்கு பிரதிநிதியாக தேர்ந்தெடுத்திருப்பதற்கு இச்சங்கம் மகிழ்ச்சியடைவதோடு அவருக்கு வாழ்த்து கூறுகிறது என்ற தீர்மானத்தைப்பிரரேபித்து ஷை யிர்ம்மியக்கத்திற்கு செய்துவரும் ஊழியங்களைப்பற்றியும், இன்னும் சிலமுக்கிய தீர்மானங்கள்நிறைவேறியபின் தலைவர் முடிவுரையுடன்கூட்டம்கலைந்ததென, ஒருநிருபர்எழுதுகிறார்.

சுயமரியாதைத் திருமணம்.

11-2-32. ந்தேதி வியாழக்கிழமை சிவகெங்கை தோழர். வேலுப்பிள்ளை அவர்கள் குமாரர் முருகன் அவர்களுக்கும், தோழர் முத்திருளன் சேர்வைஅவர்கள் குமாரத்தி கண்ணத்தாள்அவர்களுக்கும் சுயமரியாதை முறையில் தோழர் சு- மா. சௌந்திரபாண்டியன் அவர்களால் திருமணம் நடத்திவைக்கப் பட்டது. அவ்வமயம் தோழர் சிவர்ணம்அவர்கள் திருமணம், என்பதுபற்றிப் பேசியபிறகு சமபந்திவிருந்தொன்று நடந்தது இனிதுமுடிந்தது. எனஒரு நிருபர்எழுதுகிறார்.

சென்னை சுயமரியாதை சங்கம். பிரம்பூர்பாரக்ஸ்.

சென்ற (21-2-32) ஞாயிற்றுக்கிழமை. 4-30, மணிக்குச்சென்னைபிரம்பூர்கூக்ஸ் ரோட்மைதானத்தில்தோழர். ஏ. சித்திரையவர்கள் தலைமையின்கீழ் ஷை. சங்கத்தின் முதல்கூட்டம்நடைபெற்றன. அவ்வமயம்சுயமரியாதை உணர்ச்சிப்பெற்ற தோழர்களும், மற்றுமுள்ள நண்பர்களும் விஜயமாயினர். பிறகு அக்ராசனர் முகவுரை நிகழ்த்தி அமர்ந்ததும் திருவாளர்கள். கே. பொன்னரங்கம் அவர்களால் ஷை. சங்கத்திற்கு சென்னைசுயமரியாதைசங்க யெனநாமகரணமிடப்பட்டு. ஐம்பதுபுதிய அங்கத்தினரை சேர்த்துக்கொள்ளப்பட்டு. முன்னர் ஷைசங்கத்திற்குப்சிலமுக்கியபொருப்பாளர்கள் இன்றியமையாவெனசிலரை தேர்ந்தெடுக்கப்பட்டன. பின்பல அன்பர்கள் பலவிஷயங்களைப்பற்றி பேசியபின் கூட்டம் கலைந்தது,

---

சிதம்பரம்

சிதம்பரம் பச்சையப்ப முதலியார் கல்லூரியின் பழைய மாணவர்களின் சங்கத்தின் 11-வது ஆண்டு நிலைவுக் கொண்டாட்டம் ஏப்ரல் மாதம நடைபெறுமென ஷை சங்கத்தின் காரியதரிசி எழுதுகிறார்.

சென்னை விதவா விவாக சகாய சபை.

ஷை சபையின் ஆதரவில் 26-ந் தேதி பிராட்வே 161 இலக்கமிட்ட கட்டிடத்தில் பலிஜாவகுப்பு திருமதி வெங்கம்மாளுக்கும் திரு. எ. கன்னையா நாயுடுவுக்கும் திருமணம் நடைபெற்றது. கௌரவ காரியதரிசி திரு. டி. வி. பகவத் தம்பதிகளை அங்கு வந்திருந்தோர்களுக்கு அறிமுகப்படுத்தினார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

லலாம். மதவிஷயங்களிலாகிலும், சமூக உயர்வு தாழ்வுக்காகிலும், ஐரோப்பியர்கள் தலைகளை உடைத்துக்கொண்ட காலம் பல நூற்றாண்டுகளாய்விட்டது. அபிப்பிராய வித்தியாசங்களுக்காகிலும் சமூக நடையுடை பாவனை வித்தியாசங்களுக்காகிலும், ஒருவனை இம்சிப்பது அந் நாடுகளில் கிடையா. இத்யாதி முன்னேற்றங்கள் விஞ்ஞான எழுச்சியால் விசால அறிவும் பாமர மக்களுக்கும் ஏற்பட்டமையால், மேல்நாட்டார் கிடைக்கப்பெற்றார்கள். ஐரோப்பியர்கள் அயல்நாட்டு நடையுடை பாவனைகளை கண்டிக்கப் புகுந்தமையால், தங்கள் நடையுடை பாவனைகளையும் கண்டிக்க முயன்றுவருகின்றார்கள். தங்கள் தேசீய குறைகளை கண்டிக்கும் மனப்பான்மையில் அபிமானமற்றே இருந்துவருகின்றார்கள். மெஞ்ஞானம் பாமர மக்களுக்குள் பரவுவதாலும், ஆனால் பரந்த நோக்கமும் (Broad Outlook) உண்டாகின்றதாலும், சிற்றறிவின் நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதில்லை. மனம் மதக் கட்டுப்பாடுகளிலிருந்தும், ஜாதி வேற்றுமைகளிலிருந்தும் விடுபடவேண்டுமானால் உலக நிகழ்ச்சிகள் சாதாரண இயற்கையால் நிகழ்கின்றன என்றதெளிவு, நமதுபாமரமக்களுக்குள் எழவேண்டும். பகுத்தறிவை மேன் மேலும் பாமர ஜனங்கள் உபயோகிக்குமாறு பல வசதிகள் உண்டாக்க வேண்டும்.

ஜாதி ஒழிய வேண்டுமென்று வெறுஞ் சொல்லோடு நிற்கப்படாது. ஜாதி வேற்றுமைக்கு மூலகாரணமாகியுள்ள, அறியாமையும், மதக் கோட்பாடுகளும், பொய் நம்பிக்கைகளும், புராணக் கட்டுக் கதைகளும், பொது மக்களின் மனத்திலிருந்து ஒழித்தல் வேண்டும். இதன் விஷயமாக, நமது சுயமரியாதைக் கூட்டத்தார் செய்து வரும் முயற்சியாவும் மதிக்கத்தக்கதே. மெஞ்ஞானங்களாகிய, வான ஞானம், (Astronomy.) பிராணி ஞானம், (Zoology), பூகர்ப்ப ஞானம், (Geology) தாவர ஞானம், (Botany), பூத பௌதிக ரஸாயன ஞானம், (Physics and chemistry), பரிணாம ஞானம், (Evolution), உலக சரித்திரம் (World history), பூர்வ மனித ஞானம் (Antheopology) முதலிய விஷயஞானங்களை, பலகோடி பல்லாயிரவர்களுக்குப் புகட்ட வேண்டியவசதிகளையுண்டாக்க வேண்டும். ராமாயண மகா பாரத காலட்சேபங்களும், புராண பிரசங்கங்களும், கோவலன் கதைகளும், நமது முன்னோர்கள் சென்ற விடத்தை நாடும்படி செய்ய வேண்டும்.

மனிதன், பிறனை இம்சிக்காத வரை, எவ்விதமாக தனது வாழ்வை நடத்திக் கொள்ள வேண்டிய சுதந்திர முழுமையும், யாதொரு ஆட்சேபணை இன்றி, கையாள வேண்டிய அக்குகளைப் பெறக் கடவன். சுய உரிமைகளை அநுபவத்தில் யாதாமொரு தடையும் இருக்கப்படாது. இந்த உரிமையை நமது நாட்டிலுள்ள ஒவ்வொருவனும் பெற்றாலொழிய, ஜாதி நமது நாட்டை விட்டு விலகாது. அதாவதுஅவனவன் ஜாதி வரம்பைக்கடக்கப்படாதென சமூகத் திட்டம் இருக்கும் வரை, இந்தியன்நன்மை யடைய இடமில்லை. ஜாதியைத் துறந்தவன், எந்த சமூகக் கட்டு திட்டத்திற்கும் பயப்பட வேண்டியதில்லை என்ற அரசியல் திட்டம் ஏற்படுகின்ற வரை, ஜாதிக்கு அதிக அபாயமுடையது. ஜாதிக் கட்டுதிட்டங்கள், மானுஷீகத்திற்கு அடுத்தவை அல்ல வென்று கருதும் மனப்பான்மையை, அரசிடல்தான் பாமர மக்களுக்குள் உண்டாக்க வேண்டும். இதனையுண்டாக்க, நமது சுயமரியாதைக் காரர்கள், தகுந்த பிரதிநிதிகளைச் சட்ட சபைகளுக்குத் தேர்ந்தெடுத்தல்வேண்டும். நமது நாட்டின் மனப்பான்மையை அவ்வித அரசியல் திட்டங்களுக்குஅனுகூலமாகும்படிச் செய்தல், நமதுவேலைகளில் முதன்மையாகும். (25-2-1932)

"சண்டமாருதத்தின்" தலை அங்கத்தில் கண்டுள்ள 'சமூக மதஉரிமைகளின் தந்திரம்' என்றதை வாசிக்கும் போது, நமது தேச மக்களின் கதி, இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு, அதோ கதியாகத்தான் இருக்குமோ வென அச்சந்தோன்றுகிறது. வட்ட மேஜை ஆலோசனைக்கமிட்டியில், சொத்துரிமை, மத சமூக உரிமைகள், சட்ட சம்மதமாகவும்போது ஜன அமைதிக்குப் பங்கம் வராமல் பாது காக்கப்படும் என்று தீர்மானிக்கப் பட்டதாம்!!! அதாவது, சொத்துரிமை விஷயத்திலும், ஜாதி மத அனுஷ்டானத்திலும் யாதொரு மாறுதலையும் செய்யப் படாதென்பதுதான் அதன்பொருள். இதுதான் உலகமுழுமையும், பிரக்கியாதிபெற்ற சொத்து, ஜாதி, மதநடுநிலைமை என்ற பித்தலாட்டம்! இந்த வஞ்சனையைத்தான் ஆதி அமெரிக்கர்கள தங்கள் அமெரிக்கா அரசியல் திட்டத்தில் அமைத்துள்ளார். அதன் பயனை 'சண்டமாருதத்தில்' வரைந்துள்ளதை வாசித்தறியலாம். இன்று அமெரிக்காவிலுள்ள ஆக்கம், சொத்து, சுதந்தரம் யாவும் 40 பேருக்குள் அடங்கியுள்ளதாம்! மற்ற 199999960 (ஐக்கியநாட்டின் (United States) ஜனத்தொகை சுமார் 10 கோடி) மக்களுக்கு வாய்க்கரிசிக்குக்கூட வழிஇல்லை. ('சண்டமாருதம்' அமெரிக்காவில் வேலை இல்லா திண்டாட்டமென்ற வியாசத்தைப்பார்க்கவும் (25-2-1932.) ஐக்கிய நாட்டின் சொத்து மத உரிமைகளை கடந்த 200 வருஷங்களாக காத்துவந்த அரசியல் திட்டம்போன்ற சொத்து, ஜாதி, மதம், உரிமைகளை நமது வட்டமேஜை அங்கத்தினர் இந்தியநாட்டில் வசித்துவரும் நமது 350000000 (35 கோடி) மக்களுக்கும் உத்திரவாதம் செய்ய அரசியல் திட்டமொன்றை அமைத்துக்கொடுக்கப் போகின்றார்களாம்! அவரவர்கள் சொத்தும், அவரவர்கள் ஜாதியும், அவரவர்கள் மதமும், யாதொரு தடையின்றி அவரவர்கள் ஆண்டும், அனுபவித்தும், அனுசரித்தும்வரலாம்! இராமாயண பாரதகால முதல்எவ்விதம்நமது நாடு வாழ்ந்து வந்ததோ அதேமாதிரியாகவே பல்கோடி பாமர மக்களும், எளியோரும் ஒரு பக்கம் சிலஅறிஞரும், சில தனவந்தர்களும் மற்றொருபக்கமிருந்து கொண்டு யாதொரு மாறுதலோ விருத்தியோ இன்றி, வாழ்ந்துவர வேண்டுமாம்! இந்த நிலைமையைக்காப்பற்றத்தான் வட்டமேஜையை மூன்றுதடவை கூட்டியதும் மகுடம் தரித்த மன்னரும், மற்றுமுள்ளோரும் வட்டமேஜைகளுக்கு விஜயம் செய்து வருவதும் காந்தியாரும், அவர் சகாக்களும் கோவ்றுறுமென அறிக. முன் அத்தியாயங்களில் நமது நாட்டில் மதப்பற்று ஒழியவேண்டுமானால் அரசியல் தனது நடுநிலைமையை விட்டுவிட்டு ஆபாச கோட்பாடுகளையும், மூடப்பழக்கவழக்கங்களையும், நமது சிறியோருக்குக் கற்பிக்கக்கூடாதென சில திட்டங்கள் செய்யவேண்டும். ஜாதி வேற்றுமையொழிய வேண்டுமானாலும், ஜாதிக்கொடுமைகளாகிய தீண்டாமை பொது ஸ்தாபனங்களில் நுழையாமை, ஜாதிக்கட்சி, மற்றும் பலவகையான கொடுமையுள்ள கட்டு திட்டங்களை ஒழிக்குமாறு, சட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். இதனடுவில் பாமர மக்களுக்கு மெஞ்ஞானம் விளங்கும்படி பலநூல்களை இந்திய பாஷைகளில்இயற்றியும், சினிமா மூலமாகவும், ஆகாய தொனிகள் மூலமாகவும், பாமரமக்கள் வாழும் கிராமங்களில் உலகஉற்பத்தி, ஜீவ உற்பத்தி, பிரபஞ்சஉற்பத்தி, வான சாஸ்திரம், பூகோள சாஸ்திரம், பூர்வமனித சாஸ்திரம், வைத்திய நூல் முதலிய சிறந்த ஞானங்களைக்கொண்டு மூடபக்தி, ஜாதிபக்தி, மதபக்தி யொழியுமாறு முயற்சித்தல்வேண்டும்.

ஜலகண்டாபுரம்.

சமதர்மசங்கம்:- ஷை சங்கத்தின் முதல்கூட்டம் 18-2-32ல் ஷையூர் சுயமரியாதை வாலிபர் களின்முயற்சியால் நடைபெற்றது இதற்குச்சில அன்பர்களை ஷை சங்கத்தின்உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டபின் கூட்டம் கலைந்ததென ஒருநிருபர் எழுதுகிறார்.

மஞ்சள் ஆவாரம்பூ பானத்தாள்

ALWAYS DRINK
YELLOW
AVARAMBU
HEALTH
BEVERAGE.

ஐ, காப்பிக்குப்பதிலாக சாப்பிடவும்.

C V பாண்டியா & கோ.
16-17 சகின் லேன் பீச்சு, மதராஸ்

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரபடங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0
	சுயராஜயம் யாருக்கு ...	0—1—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகிற வர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.

இம்பீரியல் பிரஸ், மாயவரம்

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா	$ 1.00.
வெளிநாடு ,, இந்தியா	$ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அர்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"

10, ஜெல்ப்ரோட், ஈப்போ.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் திளப்பதிப்பு.

அனேக தந்திச்செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—4—0
தனிப்பிரதி	ரூ. 0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினுப்பள்ளி.

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—

Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கவஸக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப்பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து சிறந்த பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். பதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒருமுறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் லட்சணம் முழுதும் தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல், எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான—சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழவேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலைசிறந்ததாகும். இதன் விலை அணா 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0.

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதியதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணா 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தால் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.